
# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2010
ரூ. 7.00



ராகுல்:

## பழங்குடி அவதார்!

# ஜவுளித் தொழில் நெருக்கடி: முதலாளிக்கா, தொழிலாளிக்கா?

இந்தியாவின் முக்கியமான தொழில்துறையும், அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதுமான ஜவுளித்துறை கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பருத்தி -லிழையின் விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்து வருவதே இந்த நெருக்கடிக்குக் காரணம். இந்த ஆண்டின் துவக்கத்தில் ஒரு கேண்டி (350 கிலோ) 23,000 ரூபாயாக இருந்த பஞ்சின் (சங்கர் 6 என்ற பருத்தி ரகம்)சந்தை விலை, இன்று 40,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

பருத்தி விலை உயர்வின் விளைவாக -ல் விலையும் உயர்ந்திருக்கிறது. பருத்தி விலை உயர்வைக் காரணம் காட்டி -ற்பாலை முதலாளிகள், -லின் விலையை மேலும் கூட்டி விற்பதால் ஜவுளித்துறை



கடும் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. இந்த வரைமுறையற்ற விலையுயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி கைத்தறி நெசவாளர்களும், சிறு விசைத்தறி உரிமையாளர்களும், தொழிலாளர்களும் உண்ணாவிரதப் போராட்டங்களையும், தொழில்நிறுத்தப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

இந்திய ஜவுளித்தொழில் சம்மேளனம், தென்னிந்திய ஜவுளி ஆலைச் சங்கம், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் முதலான பெரும் ஆலை அதிபர்களின் சங்கங்கள், பஞ்சு விலையைக் குறைக்கும் பொருட்டு பஞ்சு ஏற்றுமதிக்கு உடனே தடைவிதிக்க வேண்டும் என்று மத்திய-மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். முதலாளிகளின் கோரிக்கை மனுவை அப்படியே நகல் எடுத்து அதன் கீழே கையொப்பமிட்டு, செப்.23 அன்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார், கருணாநிதி.

பஞ்சையும், -லையும் ஏற்றுமதி செய்து விட்டால், துணியையும் ஆயத்த ஆடையையும் நாங்கள் எப்படி ஏற்றுமதி செய்ய முடியும் என்பதே இந்த 'சுதேசிகளின்' கவலை.

இந்த ஆண்டு இந்தியாவின் மொத்த பருத்தி (பஞ்சு) உற்பத்தி 295 இலட்சம் பேல்கள். (ஒரு பேல் என்பது 170 கிலோ). இதில் இந்திய மில்களின் தேவை 270 இலட்சம் பேல்கள். இதில் தமிழகத்திலுள்ள -ற்பாலைகளின் தேவை மட்டும் 100 இலட்சம் பேல்கள். உள்நாட்டு மில்களின் தேவைக்கு அதிகமாகப் பஞ்சு உற்பத்தியாகியிருக்கிறது என்ற போதிலும் பஞ்சின் விலை உயர்ந்து விட்டதால், ஏற்றுமதிக்குத் தடை விதிக்குமாறும், ஏற்றுமதி செய்யப்படும் பஞ்சின் மீது ஒரு கேன்டிக்கு 10,000 ரூபாய் சுங்கத்தீர்வை விதிக்குமாறும் கோருகிறார்கள், இந்திய ஜவுளி ஆலை அதிபர்கள்.

> "ஆடை ஏற்றுமதிதான் உங்களுக்கு வேலையைக் கொடுக்கும் என்று கூறும் ஜவுளி ஆலை முதலாளிகளின் மோசடியில் தொழிலாளர்களும், விசைத்தறி நெசவாளர்களும் மயங்குகிறார்கள்."

சந்தைதான் விலையை முடிவு செய்யும் என்றும், பருத்தி விலை குறைவாக இருக்கும் போது ஆதாயம் அடைந்த ஆலை அதிபர்கள், இப்போது விலை உயர்வால் விவசாயிகள் பயனடையும் போது அதைத் தடுப்பது நியாயமல்ல என்று விவசாயிகளின் நண்பனைப் போல முழங்குகிறார்கள், முன்பேர வர்த்தகம் நடத்தும் சூதாடிகள்.

''பருத்தி விலையேற்றத்தின் ஆதாயம் விவசாயிகளைச் சென்றடையவில்லை. 2007-ஆம் ஆண்டு முதல் பருத்திச் சந்தையில் முன்பேர வர்த்தகத்தை அரசு திறந்து விட்டுள்ளதால், பன்னாட்டு வர்த்தகச் சூதாடிகள் அடுத்த ஆண்டுக்கான விளைச்சலையும் முன்பேர வர்த்தகத்தின் மூலம் இப்போதே கொள்முதல் செய்து வைத்துக் கொள்கிறார்கள். இந்த ஆண்டின் துவக்கம் முதல் பருத்தி ஏற்றுமதியின் மீது இருந்த கட்டுப்பாடும் அகற்றப்பட்டுவிட்டதால், வர்த்தகச் சூதாடிகள்தான் ஏற்றுமதியால் ஆதாயம் அடைகிறார்கள் என்று சூதாடி

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 12

அக்டோபர் 2010

உள்நாடு

தனிஇதழ்: ரூ. 7.00

ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,

110, இரண்டாம் தளம்,

63, என்.எஸ்.கே. சாலை,

(அ.பெ.எண்: 2355)

கோடம்பாக்கம்,

சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


### அயோத்தி:

# தீர்ப்பு வழங்க நீதித்துறைக்கு அருகதை உண்டா?

அயோத்தியில் இந்துவெறியர்களால் பாபர் மசூதி இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான வழக்கில் கடந்த செப்டம்பர் 24-ஆம் தேதியன்று தீர்ப்பு வழங் கப்படும் என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் அறிவித்திருந்தது. இத்தீர்ப்பை ஒத்திவைக்கக் கோரி ரமேஷ் சந்திர திரிபாதி என்பவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு வந்த போது, சமரசத் தீர்வு காண்பதற்கு இன்னும் ஒரு வாய்ப்பளிக்கலாம் என்று கூறி, அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பை வெளியிட ஒரு வாரம் தடைவிதித்து உத்தரவிட்டு மீண்டும் இழுத் தடித்தது, உச்ச நீதிமன்றம்.

பின்னர், கபாடியா தலைமையிலான 3 பேர் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அமர்வு, ரமேஷ் சந்திர திரிபாதியின் மனுவைத் தள்ளுபடி செய்து, தீர்ப்பு வழங்க தற்போது உத்தரவிட்டுள்ளது. செப்டம்பர் 30-ஆம் தேதியன்று மாலை 3.30 மணியளவில் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இத்தலையங் கம் எழுதப்படுகிறது. அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந் தாலும், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வாய்ப்பு உள்ளதால் கடந்த 60 ஆண்டுகளாக நீதித்துறையால் இழுத்தடிக்கப்பட்டு வரும் இந்த வழக்கு உடனடியாக முடிவுக்கு வரப்போவதில்லை.

இத்தனை ஆண்டுகாலம் இந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டதற்கும், இந்து ராஷ்டிரத்தை நிறுவும் தமது நோக்கத்தை நிறைவேற்ற பாபர் மசூ தியை இடித்து இந்துவெறி பாசிச பயங்கரவாதிகள் நாடெங்கும் கலவரங் களை நடத்தி நரவேட்டையாடியதற்கும் இந்திய நீதித்துறை தனது பொறுப்பை நிறைவேற்றாமல் இந்துவெறிக்குத் துணை நின்றிருப்பதே முக் கிய காரணம்.

பாபர் மசூதியும் அதன் நிலமும் முஸ்லிம்களுடையது. அதை 'தாவா வுக்குட்பட்ட நிலம்', 'சர்ச்சைக்குரிய நிலம்' என்று நீதித்துறை குறிப்பிடு வதே அயோக்கியத்தனமானது. அவர்களது வாதப்படியே 'சர்ச்சைக்குரிய', 'தாவாவுக்குரிய' ஒரு நிலத்தை ஒரு தரப்பினர் மட்டும் பயன்படுத்த அனு மதி அளிப்பது எவ்வாறு நியாயமாகும்? இயற்கை நீதிக்கே எதிராக இந்து வெறியர்கள் அந்த நிலத்தில் செங்கல் பூசை நடத்த அனுமதித்தது முதல் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியதுவரை எல்லா வகையிலும் இந் திய நீதித்துறை உடந்தையாக நின்றதே, இத்தகைய அநீதித்துறைக்கு இப் போது நீதி - நியாயம் பற்றி பேச ஏதாவது அருகதை இருக்கிறதா? இந்து வெறியர்களுக்கு ஆதரவாகவும் ஒருதலைப்பட்சமாகவும் செயல்பட்ட ஒரு அமைப்புக்கு, நீதி சொல்லத்தான் யோக்கியதை உண்டா?

முதலாவது மொகலாய மன்னரான பாபர் படையெடுத்துப் போய் அயோத்தியிலிருந்த ராமன் கோவிலை இடித்து 1528-இல் மசூதியைக் கட் டினார் என்பதற்கும், ராமன் அவதரித்த இடம் அம்மசூதி கட்டப்பட்டுள்ள இடம்தான், அந்த ஊர்தான் என்பதற்கும் எவ்வித வரலாற்று ஆதாரமும் கிடையாது. ஆனால், அந்தக் குருட்டு மத நம்பிக்கையை மதவெறியாக்கி 1949-ஆண்டு டிசம்பர் 21-ஆம் தேதி நள்ளிரவில் 50 பேர் கொண்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் மசூதி வாயிலை உடைத்து உள்ளே நுழைந்து, அதனுள் ராமன் - சீதை பொம்மைகளை வைத்துச் சுவர்களில் காவி மஞ் சள் நிறத்தில் உருவங்களையும் வரைந்து ராமன் அவதரித்து விட்டதாகப் புரளியைக் கிளப்பி விட்டனர்.

வரலாற்று ரீதியாகவும் பாரம்பரிய மரபு ரீதியாகவும் ஆதாரபூர்வமாக உள்ள முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலமான பாபர் மசூதியில் அத்துமீறி

நுழைந்து அடாவடித்தனம் செய்த இந்துவெறி குண்டர்களைக் கைது செய்து தண்டிப்பதற்குப் பதில், அப்போது இந்திய -பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட கலவரங்களால் நாடே பாதிக்கப்பட்டிருந்த நிலைமையைக் காட்டி, அயோத்தியில் கலவரம் ஏற்படுவதைத் தடுப்பது என்ற பெயரில், முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையைப் பறித்து பாபர் மசூதியைப் பூட்டி வைக்க அயோத்தி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேசமயம், பாபர் மசூதிக்கு வெளியே இந்துவெறியர்களால் அப்போது உருவாக்கப்பட்டிருந்த சபுத்ரா பீடத்திலிருந்து மூடப்பட்ட மசூதியின் சன்னல் வழியே ராமன் பொம்மையை வழிபட இந்துக்களுக்கு உரிமை வழங்கப்பட்டது.



அதன் பிறகு,பாபர் மசூதியை இடித்து அந்த இடத்தில் ராமன் கோயிலைக் கட்டுவது என்ற திட்டத்துடன் இந்துவெறியர்கள் கட்டம் கட்டமாக நடத்திய ஒவ்வொரு அடாவடித்தனமான பயங்கரவாத நடவடிக்கையையும் நீதித்துறை அங்கீகரித்து உடந்தையாகவே இருந்துள்ளது.

1986-இல் ராஜீவ் ஆட்சிக் காலத்தில், அயோத்தி நீதிமன்றம் எவ்வித விசாரணையுமின்றி மூடிக்கிடந்த மசூதியின் கதவுகளைத் திறந்துவிடுமாறு உத்தரவிட்டு, இந்துக்கள் அங்கு ராமனை வழிபட சட்டவிரோதமாக அனுமதித்தது. அதைத் தொடர்ந்து இந்துவெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில், மசூதி எதிரே செங்கல் பூசை நடத்த அனுமதித்தது, கட்டுமான வேலைகளைத் தொடங்கியது, ராமன் கோயில் கட்ட சுற்றுச் சுவர் எழுப்பியது, தாவாவுக்குட்பட்ட நிலத்தை ராமஜென்ம பூமி முக்தி நியாஸ் என்ற அமைப்புக்குச் சட்டவிரோதமாகத் தாரைவார்த்துக் கொடுத்தது, இந்து வெறியர்கள் அந்த நிலத்தில் ராமன் கோயில் கட்ட ஏற்பாடுகளைச் செய்தது - என அடுத்தடுத்து இந்துவெறியர்களின் எல்லா அடாவடித்தனங்களுக்கும் அரசும் நீதித்துறையும் பணிந்து சேவை செய்துள்ளன.

இந்துவெறி பயங்கரவாதி அத்வானியின் ரத யாத்திரையையும், பாபர் மசூதி இடிக்கப்படுவதையும் தடுக்க மறுத்து, 1992 டிசம்பர் 6-ஆம் நாளன்று இந்துவெறியர்கள் அம்மசூதியை இடித்துத் தள்ளிய நாசவேலைக்கு உச்ச நீதிமன்றமே துணைபோனது. ராமன் இந்நாட்டு தேசியச் சின்னம், நாகரிகத்தின் வடிவம் என நாட்டுத் தலைவர்களாலும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அவதாரம் என்று கூறி, பாபர் மசூதியை இடித்துத் தள்ளி அங்கே திடீரென இந்துவெறியர்கள் உருவாக்கிய கொட்டகையிலுள்ள ராமன் சிலையைத் தரிசிக்கவும் பக்தர்கள் வழிபடவும் அனுமதியும் பாதுகாப்பும் வழங்கியது, உச்ச நீதிமன்றம். இந்த அநீதிமன்றம் மட்டுமல்ல, நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களும் மசூதி இடிப்பைத் தொடர்ந்து இந்துவெறி அமைப்புகளுக்கு விதிக்கப்பட்ட தடை செல்லாது என்று தீர்ப்பளித்தன. கைது செய்யப்பட்ட இந்துவெறி பாசிச பயங்கரவாத குண்டர்களை விடுதலை செய்தன.

1949-இல் அயோத்தியிலுள்ள பாபர் மசூதிக்குள் திருட்டுத்தனமாக ராமன் பொம்மையை வைத்தது தொடங்கி இன்றுவரை பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றம் உள்ளிட்டு அனைத்து மட்டங்களிலும் இந்திய நீதித்துறை இந்துமதவெறி பாசிசத்துக்கு உடந்தையாக, சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கியுள்ளன. இவற்றின் மூலம் இந்துவெறி அமைப்புகளுக்கும் அவற்றின் நடவடிக்கைகளுக்கும் சட்டபூர்வ அங்கீகாரம் அளித்து நியாயப்படுத்தியுள்ளன. காவிச் சகதியில் மூழ்கிக் கிடக்கும் இந்திய நாட்டின் நீதித்துறை மதச்சார்பற்றதோ, நடுநிலையானதோ, புனிதமானதோ கிடையாது. நீதித்துறையின் ஒத்துழைப்பின்றி இந்துவெறி பாசிசம் இவ்வளவு பெரிய சக்தியாக வளர்ந்திருக்கவும் முடியாது.

இருப்பினும், 80-களின் இறுதியிலும் 90-களிலும் இந்துவெறியை ஏந்திச் சுழற்றிய இந்துவெறி பாசிஸ்டுகள் இப்போது செல்வாக்கிழந்து விட்டனர். அயோத்தி அமைந்துள்ள உ.பி. மாநிலத்திலேயே தொடர்ந்து தோல்வியைத்தான் சந்திக்கின்றனர். 1992-இல் மசூதி இடிக்கப்பட்டபோது இந்துவெறியர்களின் நாயகனாகத் திகழ்ந்த அத்வானி மற்றும் பிற இந்துவெறி பயங்கரவாதிகள் இன்று அவர்களது கட்சியிலேயே ஓரங்கட்டப்பட்டுக் கிடக்கின்றனர். குஜராத் பாணியில் மறுகாலனியாக்கக் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி 'வளர்ச்சியை'க் காட்டி ஓட்டுப் பொறுக்குவதில்தான் பா.ஜ.க. இப்போது அக்கறை காட்டி வருகிறது.

இந்துவெறியர்கள் செல்வாக்கிழந்துள்ள நிலையில், பாபர் மசூதி விவகாரத்தில் தீர்ப்பு சொல்வதற்கான அருகதையை பல ஆண்டுகளுக்கு முன்பே இழந்துவிட்ட இந்திய நீதித்துறை இப்போது தீர்ப்பு சொல்லக் கிளம்பியிருக்கிறது. இந்த உரிமையியல் வழக்கில், நிலத்தின் மீதான முஸ்லிம்களின் உரிமையை நீதிமன்றம் நிலைநாட்டித் தீர்ப்பளித்தாலும், அதை எதிர்த்து இந்துவெறியர்கள் உச்ச நீதிமன்றத்துக்குப் போவார்கள். அங்கு பல ஆண்டுகளுக்கு வழக்கு இழுத்தடிக்கப்படும். அங்கேயும் முஸ்லிம்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தாலும், இந்துவெறி பாசிஸ்டுகள் தமது மதவெறி அரசியலைக் கைவிட்டு விடப்போவதில்லை. இந்துவெறி பாசிச அரசியலுக்கு இத்தீர்ப்புகள் மாற்றுத் தீர்வைத் தரப்போவதுமில்லை.

●

# அரசு வங்கிகளா, ஆர்.எஸ்.எஸ் - இன் காலாட்படையா?

நீங்கள் குடியிருக்கும் பகுதியை அபாயகரமான பகுதி என்று அறிவித்து, அங்கே வசிப்பவர்கள் யாரும் வங்கிக் கணக்கு தொடங்க முடியாதென்று சொன்னால் நீங்கள் சகித்துக் கொள்வீர்களா? மதச்சார்பற்ற குடியரசு என்று பீற்றிக் கொள்ளப்படும் இந்தியாவில் அரசு வங்கிகள் முஸ்லீம்களுக்கு எதிராக இத்தகைய புறக்கணிப்பை அமலாக்கி வருகின்றன.

கல்வி உதவித் தொகை பெறும் பொருட்டு சேமிப்புக் கணக்கு தொடங்குவதற்கு விண்ணப்பித்த 90,000 முஸ்லீம் மாணவர்களுடைய விண்ணப்பங்கள் ஆந்திராவில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. பீஹாரில் வங்கிகள் மறுத்ததால் 50,000க்கும் மேற்பட்ட முஸ்லீம் மாணவர்கள் அரசின் உதவித் தொகையை இழந்துள்ளனர். அஸ்ஸாம், மேற்கு வங்கம், உ.பி., கர்நாடகா என நாடு முழுவதிலும் முஸ்லீம் மாணவர்கள் இதே நிலைக்கு ஆளாகியுள்ளனர். அரசு வங்கிகளில் கடன் பெறுவது மட்டுமின்றி கணக்குத் தொடங்குவதும்கூட முஸ்லீம்களுக்கு இயலாததாகி விட்டது என்ற புகாரை தேசிய சிறுபான்மை கமிசன் விசாரிக்கப் புகுந்தபோதுதான், முஸ்லீம்கள் வாழும் பகுதிகள் பலவற்றை ''அபாயகரமான பகுதிகள்'' (Red zones) என்று அரசு வங்கிகளே ஒதுக்கி வைத்திருக்கின்றன என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் அம்பலமானது.



நகரங்களில் மற்ற பிரிவினருடன் கலந்து வாழமுடியாமல் ஒதுக்கப்படுவதனால்தான் தலித் மக்களும் முஸ்லீம்களும் குறிப்பிட்ட சில பகுதிகளில் கூடி வாழும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். வர்க்கரீதியிலும் இவர்கள்தான் நாட்டின் ஏழ்மையான பிரிவினர். ''ஏழ்மையான பகுதிகளில் கடனை வசூலிப்பது சிரமம் என்பதனால்தான் இவ்வாறு வகைப்படுத்துகிறோம், இதில் மதத்துவேசம் இல்லை'' என்று தங்கள் நடவடிக்கையை நியாயப்படுத்துகின்றன வங்கிகள். கடன் கொடுப்பது இருக்கட்டும், மாணவர்களின் உதவித் தொகையை வங்கி சேமிப்புக் கணக்கில் வரவு வைத்துக் கொள்வதில் என்ன அபாயம்? ஏழ்மைக்கு நிவாரணமாக கல்வி உதவித்தொகை! வங்கிச் சேவையை மறுப்பதற்குக் காரணம்- அதே ஏழ்மை!

தேசிய சிறுபான்மை கமிசன் ஜூலை 28 அன்று அரசு வங்கிகளுக்கு அனுப்பிய கடிதத்தில், ரிசர்வ் வங்கிச் சுற்றறிக்கையின்படி பின்தங்கிய சமூகப் பிரிவினருக்கு எளிய முறையில் சேமிப்புக் கணக்குகளை உருவாக்கித் தரவேண்டுமென வலியுறுத்தியது. ஆயினும், ரிசர்வ் வங்கியிடமிருந்து அவ்வாறு எந்த சுற்றறிக்கையும் வரவில்லையென்று முஸ்லீம் மாணவர்களிடம் புளுகியிருக்கின்றனர், வங்கி அதிகாரிகள்.

சரியான வேலை வாய்ப்புகளோ, தரமான கல்வியோ கிடைக்காததனால், தலித் மக்களைப் போலவே சமூகத்தின் மிகப் பின்தங்கிய நிலையில்தான் பெரும்பான்மை முஸ்லீம்கள் உள்ளனர் என்கிறது, சச்சார் கமிட்டி அறிக்கை. அரசு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டு, சிறு வணிகம் அல்லது சுயதொழில் செய்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள முஸ்லீம் மக்களுக்கு சிறு கடன்களும், வங்கிச் சேவைகளும் அத்தியாவசியமானவை. வங்கிச் சேவைகளை மறுப்பதென்பது அவர்களை வாழவிடாமல் செய்வதாகும். இதனை ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரங்களே அம்பலப்படுத்துகின்றன. நாடு முழுவதிலும் முஸ்லீம்களின் சேமிப்புக் கணக்கு எண்ணிக்கை இந்த வருடம் கடும் வீழ்ச்சி கண்டுள்ளது. முஸ்லீம்களின் வங்கிக் கணக்குகள் அஸ்ஸாமில் 47%மும், கர்நாடகாவில் 46.2%மும், மேற்கு வங்கத்தில் 17.44%மும், கேரளாவில் 6.90% குறைந்துள்ளன. சட்டத்தில் என்ன எழுதி வைத்திருந்தாலும் இந்து சமூகத்திலும் அதிகார வர்க்கத்திலும் ஊடுருவியிருக்கும் முஸ்லீம் விரோத உளவியல்தான் நடைமுறையில் செயல்படுகிறது.

> சுயதொழில் செய்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள முஸ்லீம் மக்களுக்கு வங்கிச் சேவைகள் அத்தியாவசியமானவை. அதனை மறுப்பதென்பது அவர்களை வாழவிடாமல் செய்வதாகும்.

முஸ்லீம்களை சமூகப் பொருளாதார புறக்கணிப்பு செய்து, இரண்டாம்தர குடிமக்களாக்கி அடிபணியச் செய்யவேண்டும் என்ற இந்துவெறி பாசிஸ்டுகளின் கொள்கையும், ஏழைகளுக்கு வங்கிச் சேவையை மறுக்கும் புதிய தாராளவாதக் கொள்கையும் ஊடும் பாவுமாகப் பின்னியிருக்கின்றன. மதத்துவேசம் வர்க்கத்துவேசத்திற்குள் மறைந்து கொள்கிறது. வர்க்கத்துவேசம் மதத்துவேசத்தால் புனிதப்படுத்தப்படுகிறது. வங்கிகளில் நடக்கும் இந்த அநீதியின் பொருள் இதுதான்.

● கணேசன்

## ராகுல்:

# பழங்குடி அவதார்!

**ஏழைகள் மீது அக்கறை கொண்டவராக ராகுல் நடத்தும் நாடகங்கள் காங்கிரசுக்குப் புதிதல்ல.**

நாட்டு மக்களின் நலனைப் புறக்கணித்து, பன்னாட்டு முதலாளிகள் மற்றும் தரகு முதலாளிகளின் நலன் ஒன்றையே தனது நலனாகக் கருதுகின்ற, ஏகாதிபத்தியத்தின் கையாள்தான் நாம் அறிந்த காங்கிரசு.

'சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்' என்ற பெயரில் பன்னாட்டு, தரகு முதலாளிகளின் குட்டி சமஸ்தானங்களை ஏற்படுத்தியது முதல், உள்நாட்டுச் சிறு வணிகர்களைக் காவுவாங்கும் வகையில் சிறுதொழில் முதல் சில்லறை விற்பனை வரை அனைத்திலும் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்தது வரை; போபால் படுகொலைக் குற்றவாளி ஆன்டர்சனைப் பாதுகாத்து வருவது முதல், எதிர்காலத்தில் அப்படியொரு படுகொலை நடந்தாலும் முதலாளிகள் யாரும் குற்றவாளிகள் ஆக்கப்படாத வகையில் 'அணுசக்தி பாதுகாப்பு மசோதா'வை நிறைவேற்றியது வரை- அனைத்திலும் தரகு முதலாளிகளின் நலனை விட்டுக் கொடுக்காத கட்சியே நாம் அறிந்த காங்கிரசு.

இருப்பினும், காங்கிரசுக் கட்சியின் அடுத்த தலைவராகவும், எதிர்கால இந்தியாவின் 'பிரதமராகவும்' முன்னிறுத்தப்படும் 'ராகுல் காந்தி'யை ஏழை எளியோரின் பாதுகாவலனாகவும், அவர்களுடைய நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சியைத் தருபவராகவும் சித்தரிக்கும் நாடகம் ஒன்று அரங்கேறிக் கொண்டிருக்கிறது. மக்களைப் பாதிக்கும் திட்டங்களுக்கு எதிரான அவரது குரல் காங்கிரசு கட்சிக்குள்ளே பெரும் புயலைக் கிளப்பியுள்ளது போலவும், தாராளமயக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதில் கட்சிக்குள்ளேயே பெரியதொரு முரண்பாடு எழுந்துள்ளது போன்றும் ஊடகங்கள் காட்டுகின்றன. தாராளமயக் கொள்கைகளுக்கு ஆதரவாக இருக்கிற மன்மோகன் சிங், சிதம்பரம், அலுவாலியா போன்றவர்கள் ஒரு பிரிவாகவும் சோனியா, ராகுல் போன்றவர்கள் மற்றொரு பிரிவாகவும் இருப்பது போலச் சித்தரிக்கப்படுகின்றனர்.

இது உண்மைதானோ என்று மக்கள் எண்ணும் வகையில் வேறு சில காட்சிகளும் அரங்கேறுகின்றன. நியம்கிரி மலையில் வேதாந்தா நிறுவனம் தோண்டவிருக்கும் பாக்சைட் சுரங்கத்துக்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தடை விதிக்கிறது. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், மும்பை விமான நிலைய விரிவாக்கம் என்ற பெயரில் முகேஷ் அம்பானிக்கு எடுபிடியாக செயல்படும் மகாராட்டிர அரசிடம், சதுப்புநிலக் காடுகளுக்காக வாதாடுகிறார். முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் ஐயர், ஏழை நாட்டுக்கு காமன்வெல்த் போட்டி தேவையா என்று சாடுகிறார்.

சுதந்திரக் கொண்டாட்டங்களிலிருந்து விலகி நின்ற 'மகாத்மா' காந்தியைப் போல, இந்தக் களேபரங்களிலிருந்து ஒதுங்கியிருப்பவர் போலவும், ஏழைகளின் முன்னேற்றம் பற்றித் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதால் முகச்சவரம் செய்யக்கூட மறந்தவர் போலவும் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் இளவரசர் ராகுல்காந்தி தலித் வீடுகளில் தங்குகிறார்; ரோட்டோரத்தில் டீ குடிக்கிறார்; ''பொருளாதார முன்னேற்றம் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும்'' என்று தத்துவம் உதிர்க்கிறார். ஒரிசாவின் நியம்கிரிக்கு தனி விமானத்தில் சென்று இறங்கி, அங்குள்ள மலைவாழ் பழங்குடியினரிடம், ''நான் தில்லியில் உங்களுக்காக வேலை செய்யும் சிப்பாய்'' என்று வசனம் பேசுகிறார்.

வேதாந்தா நிறுவனத்தை தம் மண்ணில் இருந்து வெளியேறக் கோரி கோந்த் இன மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)




தில்லியில் பழங்குடி மக்களுக்காகவே வேலை செய்யும் சிப்பாய் இதைப் பேசி முடிப்பதற்குள், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் சேவை செய்வதற்காகவே காங்கிரசு கட்சியால் பிரதமர் பதவியில் நியமிக்கப்பட்டிருக்

கும் மூத்த சிப்பாய் மன்மோகன் சிங், ''சுற்றுச்சூழல் சுற்றுச்சூழல் என்று பேசிக்கொண்டு, வறுமை ஒழிப்பு இலட்சியத்தை நாம் கைவிட்டு விட முடியாது'' என்கிறார். வறுமையை ஒழிக்க வேண்டுமென்றால் பழங்குடி மக்களின் காடுகளையும் நிலங்களையும் பிடுங்கி பன்னாட்டு நிறுவனங்கள்-தரகு முதலாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது மூத்த சிப்பாயின் கொள்கை. மூத்த சிப்பாய் பேசுவதைப் பற்றி இளைய சிப்பாய் பேச மறுக்கிறார்.

ராகுல் காந்தி ஒரிசாவின் பழங்குடி மக்களுடன் டான்ஸ் ஆடிய புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்து ஓய்வதற்குள்ளாகவே, மன்மோகன் சிங் டில்லியிலிருந்து உறுமுகிறார். கிடங்குகளில் பாழாகும் உணவு தானியங்களை மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்று கூறிய உச்ச நீதிமன்றத்திடம், ''அரசின் கொள்கை முடிவுகளில் தலையிடாதே'' என்று எச்சரிக்கிறார். மக்கி மண்ணாகிக் கொண்டிருக்கும் உணவு தானியத்தை இலவசமாக வழங்குவதில் அரசுக்கு இருக்கும் சிக்கல், நிதிப் பற்றாக்குறை அல்ல. கொள்ளை லாபமடிக்கும் உணவு தானியக் கழகங்கள், பெருவியாபாரிகளின் கொள்ளைக்கு பங்கம் வந்துவிடுமோ என்பதுதான் மன்மோகனின் கவலை. ஏழைகளுக்குச் சோறு கிடைப்பதை விட முதலாளிகளுக்கு சுதந்திரம் (கொள்ளையடிக்கும் சந்தை சுதந்திரம்) கிடைப்பது முக்கியம் என்பதுதான் அரசின் கொள்கை. இது, ஏழை எளியவர்களின் காவலனான ராகுல் காந்திக்குத் தெரியாதா?

சிரிப்பாய் சிரித்து நாறிக் கொண்டிருக்கும் காமன்வெல்த் ஊழலைப் பற்றி உத்தமபுத்திரன் ராகுல் என்ன சொல்கிறார்? ஸ்பெக்ட்ரம் ஊழலில் உச்சநீதிமன்றம் ராசாவுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறதே, இதைப் பற்றி இளவரசரின் கருத்து என்ன? டாடாவின் நிலப்பறி முதலுக்கு எதிராகப் போராடிய கலிங்கா நகர்ப் பழங்குடியினர் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனரே அப்போது இவர் எங்கே சென்றிருந்தார்? இவையெல்லாம் கிடக்கட்டும். இதே ஒரிசாவில் சுற்றுச்சூழல் வனத்துறை விதிகளுக்கு எதிராகவும், மக்களுடைய எதிர்ப்பை மீறியும் போஸ்கோ ஆலைக்கு நிலத்தைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கும் நவின் பட்நாயக்கிடம், ''பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்'' என்று பகிரங்கமாக தைரியம் சொல்கிறார் மன்மோகன் சிங். அதுவும் நியம்கிரியில் ராகுல் காந்தி வீர உரை ஆற்றிய அதே நாட்களில்! இதைப் பற்றி இந்த பழங்குடிகளின் சிப்பாய் மூச்சுவிடாதது ஏன்?

ஏனென்றால், இது ஒரு நாடகம். நியம்கிரியை வேதாந்தா நிறுவனம் விழுங்குவதற்கு எதிரான போராட்டம் கடந்த 6 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. வேதாந்தா நிறுவனத்தின் இயக்குநராக ப.சிதம்பரம் இருந்ததையும், அந்த நிறுவனத்துக்கும் மத்திய-மாநில அரசுகளுக்கும் உள்ள கள்ளக் கூட்டையும், ''நான் ஸ்டெர்லைட்டின் பங்குதாரர்'' என்று பகிரங்கமாக அறிவித்துக் கொண்டு நியம்கிரி வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் யோக்கியதையையும் அருந்ததிராய் போன்ற எழுத்தாளர்களும், சமூக ஆர்வலர்களும் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்கள், போராடியிருக்கிறார்கள். உலகம் முழுவதும் சந்தி சிரித்திருக்கிறது இப்பிரச்சினை. அப்போதெல்லாம் நியம்கிரியின் சிப்பாய் எந்த நட்சத்திர விடுதியில் நடனமாடிக் கொண்டிருந்தார்?



வேதாந்தா நிறுவனத்தின் பாக்சைட் சுரங்கத்திற்குத் தடை விதிக்கப்பட்ட பின், கோந்த் இன மக்கள் வசிக்கும் பகுதிக்குத் திடீர் விஜயம் செய்த ராகுல் காந்தி.

ராகுல் காந்தி மட்டுமல்ல, இன்று வேதாந்தாவுக்கு எதிராகப் பேசும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமும், அதன் அமைச்சரான ஜெய்ராம் ரமேசும், உண்மையில் கடந்த காலங்களில் வேதாந்தாவை ஆதரித்தவர்களே. வேதாந்தாவின் பாக்சைட் சுரங்கத்தைத் தடை செய்ததற்கு, சுற்றுச்சூழல் அமைச்சகம் தற்போது இரண்டு காரணங்களைச் சொல்லியுள்ளது. ஒன்று, பாக்சைட் சுரங்கம் அமைக்க அனுமதிப்பது, ஒரு தனியார் நிறுவனத்தின் இலாபத்திற்காக டோங்கிரியா மற்றும் குடியா கோந்த் ஆகிய இரு பழங்குடியின மக்களுக்கு, சுரங்கம் அமைக்கப்படவிருக்கும் இடத்தின் மீது உள்ள பாரம்பரிய வாழ்விட உரிமையைப் பறிப்பதாகும். மேலும், இது சட்டத்தின் ஆட்சி மீதான அவர்களது நம்பிக்கையை உடைக்கும் செயலாகும். இரண்டாவது காரணம், வேதாந்தா (ஸ்டெர்லைட்) நிறுவனம், சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்புக்கான சட்டங்கள் பலவற்றைத் தொடர்ந்து மீறியுள்ளது. ஒரிசா மாநில அதிகாரிகளின் கள்ளக் கூட்டுடன் வனப் பாதுகாப்புச் சட்டம் வன உரிமைச் சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், மற்றும் ஒரிசா வனச் சட்டம் ஆகிய சட்டங்களை மீறி வேதாந்தா நிறுவனம் செயல்பட்டுள்ளது. இந்த இரண்டு காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வேதாந்தாவின் சுரங்கத்தைத் தடை செய்ய காங்கிரசு அரசு என்ன காரணங்களைக் கூறுகிறதோ, அதே காரணங்களை மற்றவர்கள் கூறியபோது அவற்றை அலட்சியமாக நிராகரித்து, வேதாந்தாவுக்கு ஆதரவாக காங்கிரசு அரசு நடந்து கொண்டிருக்கிறது. வேதாந்தாவின் நியம்கிரி அலுமினியத் திட்டம், பாக்சைட் சுரங்

கம்- அலுமினிய சுத்திகரிப்பு நிலையம்-அலுமினிய உருக்காலை என மூன்று பகுதிகளைக் கொண்டது. இதில் தற்போது பாக்சைட் சுரங்கம் அமைக்கும் பணிக்குத்தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வேதாந்தாவின் அலுமினியச் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு 2004-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் அனுமதி அளித்தது. ஆனால், அவற்றில் மிகப் பெரிய அளவில் விதிமுறை மீறல்கள் இருந்ததைச் சுட்டிக் காட்டி சிறீதர், பிரபுல் சமன்தரா போன்ற தனிநபர்களும், ஒரிசா காட்டுயிரிச் சங்கம் போன்ற அமைப்புகளும் உச்ச நீதிமன்றத்தின் மத்திய மேலாண்மைக் கழகத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அதை விசாரித்த அந்த அமைப்பும் வேதாந்தாவுக்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்து செய்ய உச்ச நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்தது. ஆனால், இன்று வேதாந்தாவைத் தடைசெய்திருக்கும் இதே மத்திய அமைச்சகம் அன்று உச்ச நீதிமன்றத்தில் வேதாந்தாவின் சார்பில் வாதிட்டு, அதற்குச் சாதகமான தீர்ப்பை வாங்கித் தந்தது.

வேதாந்தாவின் உருக்காலை தொடங்கப்பட்ட போது நடந்ததும் இதுதான். உருக்காலை அமைக்க முறையான அனுமதி பெறுவதற்கு முன்னரே இயங்க ஆரம்பித்துவிட்ட அந்த ஆலையைத் திறந்து வைத்தவர் ஒரிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக். இதனை எதிர்த்து பிரபுல் சமன்தரா என்பவர் தேசிய சுற்றுச்சூழல் முறையீட்டு ஆணையத்திலும், தில்லி உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில் வேதாந்தாவிற்கு எதிராக இடைக்காலத் தீர்ப்பளித்த தில்லி உயர் நீதிமன்றம், அந்நிறுவனத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது. ஆனால் 2009-ஆம் ஆண்டில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வேதாந்தாவை ஆதரித்து அதன் சார்பாக வாதாடியதால் இறுதித் தீர்ப்பு வேதாந்தாவின் பக்கம் வந்தது.

தற்போது இரத்து செய்யப்பட்டிருக்கும் இந்த அனுமதிகூட 2009-ஆம் ஆண்டு இதே மத்திய அமைச்சகத்தால் வழங்கப்பட்டதுதான். அப்போதும் இதே காரணங்கள் இருந்தன. இதுகுறித்துப் பேசியவர்களுக்கு எதிராகவும், வேதாந்தாவிற்கு ஆதரவாகவும் இதே அமைச்சகம்தான் இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களில், பல்வேறு வழக்குகளில் வாதாடியது.

வேதாந்தாவுக்கு எதிரான வழக்கில் ஒரு மனுதாரராக சேர்ந்துகொள்வதற்குக் கூட அந்த மண்ணின் மைந்தர்களான பழங்குடியினருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று கூறி பழங்குடி மக்களை அந்த வழக்கிலிருந்தே வெளியேற்றினார் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன். அப்போது பழங்குடி மக்களின் பாரம்பரிய வாழ்விட உரிமை அரசியல் சட்டத்திலிருந்து எங்கே காணாமல் போயிருந்தது? இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி கபாடியா, நியம்கிரியின் கோண்டு இன மக்களை, புல்லைத் தின்னும் பழங்குடிகள் என்று திமிர்த்தனமாக ஒரு கூட்டத்தில் பேசியபோதும், ''நான் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் பங்குதாரர்'' என்று நீதிமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்துக் கொண்டே ஸ்டெர்லைட்டுக்கு எதிரான இந்த வழக்கை விசாரித்த போதும், பழங்குடி மக்களுக்காக டில்லியில் வேலை செய்யும் இந்தச் சிப்பாய், என்ன செய்து கொண்டிருந்தார்?



வேதாந்தா பாக்சைட்டை வெட்டி எடுப்பதற்குத் திடீர்த் தடை விதித்துள்ள சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

வேதாந்தாவும், அதன் துணை நிறுவனமான ஸ்டெர்லைட் நிறுவனமும், விதிமீறல்களுக்கும், வரி ஏய்ப்புக்கும், லஞ்ச லாவண்யங்களுக்கும் பெயர் போனவை. 750 கோடி ரூபாய் கலால் வரி ஏய்ப்பு வழக்கில் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் துணைத் தலைவர் தூத்துக்குடியில் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்ததாக அந்நிறுவனத்தின் மீது பல வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு எதிரான நிறுவனம் என்று அம்னெஸ்டி இன்டர்நேசனல், சர்வைவல் இன்டர்நேசனல் போன்ற அமைப்புகள் வேதாந்தா நிறுவனத்தைக் கருப்புப் பட்டியலில் சேர்த்திருக்கின்றன. நியம்கிரி மலையில் வேதாந்தா செய்துள்ள அனைத்து விதிமுறை மீறல்களையும் ஆதாரப்பூர்வமாகப் பலர் அம்பலப்படுத்தியுள்ளனர். வேதாந்தாவின் கிரிமினல் நடவடிக்கைகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்ற நிலையில்தான் நார்வே அரசு அந்நிறுவனத்தில் போட்டிருந்த தனது முதலீடுகளை விலக்கிக் கொண்டுள்ளது. இதே காரணத்தினால்தான், வேதாந்தாவின் எல்லா முறைகேடுகளுக்கும் துணை நின்ற காங்கிரசு அரசிலிருந்து தன்னை மட்டும் விலக்கிக் கொண்டு ஏழைகளின் தோழனாக நடிக்கிறார் ராகுல்.

நியம்கிரியைக் காட்டிலும் அதிகமான பழங்குடி மக்களை வெளியேற்றக்கூடியதும், அதனினும் அதிகமாக சுற்றுச்சூழலைப் பாதிக்கக் கூடியதுமான போலாவரம் அணைக்கட்டுத் திட்டம், எதிர்ப்புகளையெல்லாம் மீறி ஆந்திர மாநிலத்தில் அமல்படுத்தப்படுகிறது. இதே ஒரிசாவில் போஸ்கோவின் திட்டங்களுக்கு உறுதுணையாய் நிற்பதாக நவின் பட்நாயக்கிற்கு உறுதியளிக்கிறார் மன்மோகன்சிங். காங்கிரசின் மறுகாலனியாக்க கொள்கைகள் எதுவும் மாறிவிடவில்லை. அவற்றை அமல்படுத்தும் வெறித்தனமும் குறைந்து விடவில்லை.



வேதாந்தா நிறுவனம் ஒரிசாவின் லாஞ்சிகர் வனப்பகுதியில் எவ்வித முன் அனுமதியும் பெறாமல், பாக்சைட் தாதுவை எடுத்துச் செல்வதற்காகக் கட்டியுள்ள ‘‘கன்வேயர் பெல்ட்’’.

மூடி மறைக்க முடியாத அளவிற்கு வேதாந்தாவின் மோசடிகளும், காங்கிரசு அரசின் முறைகேடுகளும் அம்பலமாகிவிட்டன. வேதாந்தாவுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் யோக்கியதையே சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு வேதாந்தா நிறுவனம் ‘கேய்ன்ஸ்’ என்னும் எரிசக்தித் துறை பன்னாட்டு நிறுவனத்தை வாங்கி, இந்தியாவின் எரிசக்தித் துறையையே தனது ஏகபோகத்தின் கீழ் கொண்டுவர விரும்பும் முகேஷ் அம்பானியோடு உரசியிருப்பதால், காங்கிரசு அமைச்சரவையில் நிறைந்திருக்கும் அம்பானி பக்தர்களுக்கும் நியம்கிரியின் பழங்குடி மக்கள் மீது அபிமானம் பிறந்து விட்டது. அனைத்துக்கும் மேலாக, பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகளுக்காக சிதம்பரம் நடத்திவரும் காட்டு வேட்டை, பழங்குடி மக்களை மென்மேலும் மாவோயிஸ்டுகளின் பக்கம் தள்ளிவிடுமோ என்ற அச்சமும் ஆளும் வர்க்கத்தைப் பிடித்தாட்டுகிறது.

வேதாந்தாவின் பாக்சைட் கொள்ளையைத் தடை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டவுடனே, அத்தகைய தடையினால் கிடைக்கக் கூடிய நற்பெயரைக் கொள்ளையடிக்கும் உரிமை பட்டத்துக்கு வரக் காத்திருக்கும் இளவரசருக்கு வழங்கப் பட்டுவிட்டது. இந்தியாவின் வளங்களையும் இந்திய மக்களையும் கொள்ளையடித்துப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக, இந்தியத் துணை இராணுவத்தின் சிப்பாய்கள் பழங்குடி மக்களை வேட்டையாடிக் கொண்டிருக்க, அதனை எதிர்த்துப் போராடும் பழங்குடி மக்களுக்கும் நானே சிப்பாய் என்று தன்னைத் தானே நியமனம் செய்து கொண்டுவிட்டார் ராகுல்.

ஆளும் கட்சிக்குள்ளேயே ஒரு எதிர்க்கட்சியை உருவாக்கிக் கொள்ளும் இந்தத் தந்திரத்தை ஆளும் வர்க்க ஊடகங்கள் அம்பலப்படுத்துவதில்லை. மாறாக, ஆமோதிப்புடன் புன்னகைக்கின்றன. காங்கிரசின் வலது, இடது பிரிவினருக்கு இடையில் கொள்கைப் போர் கொழுந்து விட்டு எரிவதைப் போலவும் சித்தரிக்கின்றன. வலது புறத்தில் மன்மோகன் சிங், ப.சிதம்பரம், முரளி தியோரா இன்னபிறர். இடது புறத்தில் ராகுல் காந்தி, திக் விஜய்சிங், மணிசங்கர் ஐயர், ஜெய்ராம் ரமேஷ். நடுவில் அன்னை சோனியா.

மக்கள் காறி உமிழ்ந்து காங்கிரசை வெளியேற்றிய மாநிலங்களுக்கெல்லாம் விஜயம் செய்கிறார் ராகுல். கொட்டை போட்ட கொள்ளையர்களும், பிடிபட்ட திருடர்களுமான தந்தையர்களை ஒதுக்கி வைத்து விட்டு, காங்கிரசு குடும்பத்தைச் சேர்ந்த அவர்களுடைய குலக்கொழுந்துகளை ஒன்றுதிரட்டி காங்கிரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவோம் என்று சபதம் செய்கிறார், ராகுல். மாநிலக் கட்சிகளின் வெளிப்படையாகத் தெரியும் அதிகார முறைகேடுகளை எதிர்த்துப் பேட்டி கொடுக்கிறார். வெற்றிப் பேரணி நடத்துகிறார். டில்லி காங்கிரசு அரசை எதிர்த்துப் போராடி நியம்கிரி பழங்குடிகள் பெற்ற வெற்றியின் மகுடத்தையும் இந்த டில்லி சிப்பாயே சூடிக்கொள்கிறார்.

நகைக்கத்தக்க இந்தக் கேலிக்கூத்தை அல்லது அப்பட்டமான இந்த அயோக்கியத்தனத்தை அம்பலப் படுத்த முடியாமல் புழுங்குகிறார்கள், மார்க்சிஸ்டுகள். முன்னர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் போலி கம்யூனிஸ்டுகள் ஆற்றிய பாத்திரத்தை (அரசாங்கத்தின் மனச்சாட்சி அல்லது மனித முகம்) அவர்களிடமிருந்து ராகுல் கைப்பற்றிவிட்டதால், அந்தக் கதாபாத்திரத்தையோ அதன் வசனத்தையோ விமரிசிக்க முடியாமல் தவிக்கிறார்கள், மார்க்சிஸ்டுகள். ராகுலைக் காட்டிலும் மேலும் சிறிது இடது புறம் நோக்கித் தமது அரசியலை நகர்த்தலாம் என்று அவர்கள் விரும்பினாலும், அப்படி ஒரு இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதுபோன்ற நாடகங்களும், அவதாரங்களும் காங்கிரசுக்குப் புதியவையல்ல. காந்தியின் பிற்போக்குத் தனத்திற்கு எதிரான பகத்சிங்கின் அரசியல், இளைஞர்களைப் பற்றிக் கொண்டபோது சோசலிச அவதாரம் எடுத்தார், நேரு. மொரார்ஜி உள்ளிட்ட வலதுசாரிகளுக்கு எதிராக ‘இடதுசாரி’ அவதாரம் எடுத்தார், இந்திராகாந்தி. 13 நாள் ஆட்சி, 13 மாத ஆட்சி என்று இரண்டு முறை பதவியை இழந்த பின்னரே எதிர்ப்பை நிறுவனப்படுத்தும் காங்கிரசின் தந்திரத்தை பாரதிய ஜனதா புரிந்து கொண்டது. அத்வானியின் தலைமையிலான சங்கப் பரிவாரத்தின் தீவிரவாதத்துக்கு எதிராக மிதவாதியாக அவதரித்தார் வாஜ்பாயி.

தனியார்மயம், தாராளமயம் என்ற முதலாளித்துவ கடுங்கோட்பாட்டுவாதத்தை அமல்படுத்துவதில் மன்மோகன் சிங் தீவிரவாதி. ராகுல் காந்தி மிதவாதி!

● இரணியன்

# இந்திய-இலங்கை அரசுகள் தொடுக்கும் உளவியல் யுத்தம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயற்பாட்டுக்கான முன்னாள் பொறுப்பாளரும் தற்போது சிங்கள இனவெறி அரசின் தடுப்புக் காவலில் உள்ளவருமான கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன், கொழும்பு நகரிலிருந்து வெளிவரும் ''டெய்லி மிரர்'' நாளேட்டுக்கு அண்மையில் அளித்துள்ள நேர்காணலில், இறுதிக் கட்ட ஈழப் போரின் போது இந்தியா போர் நிறுத்தத்துக்கு முயன்றதாகவும், அதனை வைகோவும் நெடுமாறனும் சீர்குலைத்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்குப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் நடேசன் மூலமாகதான் முயற்சி செய்ததாகவும், இதற்கு இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான கனிமொழியும் கிறித்துவப் பாதிரியான ஜெகத் கஸ்பாரும் உதவியதாகவும், அவர்கள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்திடம் இது குறித்துப் பேசி ஒரு திட்டம் தயாரித்ததாகவும், இதை ஏற்கக் கூடாது என்று புலிகளிடம் வலியுறுத்தி வைகோவும் நெடுமாறனும் இதற்குத் தடையாக இருந்ததால்தான் போர் நிறுத்தம் வராமல் போனது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டால் அது தி.மு.க. மற்றும் காங்கிரசு கட்சிகளுக்கு நல்ல பெயராகி தேர்தலில் சாதகமான நிலையைத் தோற்றுவித்துவிடும் என்று கருதி புலிகளின் முடிவை வைகோ மாற்றியதாகவும், தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமையும் போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலையை எடுக்க முடியும் என்று வைகோ புலிகளிடம் கூறியதாகவும் கே.பி. குறிப்பிடுகிறார்.

கே.பி. – ஜெகத் கஸ்பார்:
இந்திய, இலங்கை அரசுகளின் புதிய கோயபல்சுகள்.



பாதிரியார் ஜெகத் கஸ்பாரும் 2009 ஜனவரி இறுதியில் இந்திய அரசு போர் நிறுத்த முயற்சியில் ஈடுபட்டது உண்மைதான் என்கிறார். இந்திய அரசின் சார்பில், புலிகளின் தலைவரான பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய - பிரபாகரனின் சார்பில் பேசும் தகுதியுடைய நடேசனோடு தொடர்பு கோரப்பட்டதாகவும், ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான விருப்பம் (Intention to Lay Down Arms) மட்டுமே அப்போது விதிக்கப்பட்ட நிபந்தனை என்றும் அவர் கூறுகிறார். இதை புலித் தலைமையிடம் தெரிவித்த கஸ்பாரிடமே, நீங்களே ஒரு மாதிரி வரைவு (Draft) தயாரித்து டில்லிக்காரர்களுக்குச் சம்மதமா என்று கேட்டுச் சொல்லுமாறு புலித் தலைமை கூறியதாம். அதன்படி ப.சிதம்பரத்தின் ஏற்பாட்டின்படி கஸ்பார் ஒரு வரைவு தயாரித்தாராம். இந்த வரைவினை இருதரப்பும் ஏற்றுக் கொண்ட பிறகு, புது டில்லி உயர் அதிகாரி ஒருவரோடு நடேசன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினாராம். பின்னர் அது முறிந்துவிட்டதாம். போர் நிறுத்தத்திற்கான அந்த வாய்ப்பு ஏன் தவறவிடப்பட்டது என்ற காரணத்தை நடேசன் சொல்லவில்லை என்கிறார் கஸ்பார்.

ஆனால், முள்ளிவாய்க்கால் முடிவுற்ற பிறகு, களத்தில் நின்ற பலருடன் விவாதித்த போது கஸ்பாருக்குப் பல உண்மைகள் தெரிய வந்ததாம். ''காங்கிரசு மீண்டும் ஆட்சிக்கு வரப்போவதில்லை, தமிழகத்தின் அனைத்து தொகுதிகளையும் தங்கள் கூட்டணிதான் வெல்லப் போகிறது, கொந்தளிக்கும் தமிழக மக்கள் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்'' என்றெல்லாம் புலிகளை எச்சரித்து, ''ஈழ விடுதலைப் போராட்டத்தை எப்பாடுபட்டேனும் காப்பாற்றியிருக்க வேண்டிய ஒரு வாழ்வா-சாவா கட்டத்தில் தங்கள் அரசியல் கணக்கு வட்டத்திற்குள் போராட்டத்தை வளைத்து, போராட்டத்தின் கட்டளைக் கட்டமைப்பு (Command Structure) அழிக்கப்பட காரணமாக இருந்துள்ளார்கள்'' என்று வைகோவையும் நெடுமாறனையும் குற்றம் சாட்டுகிறார், கஸ்பார்.

ஈழத்தில் இனப்படுகொலை நடந்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இவர்கள் இப்படிக் கூறுவதில் ஏதாவது உண்மையிருக்கிறதா? சிங்களப் பேரினவாத ராஜபக்சே அரசுக்குப் பல்வேறு உதவிகளும் செய்து போரை வழிநடத்திய இந்தியா, போர் நிறுத்த முயற்சி செய்ததாகக் கூறுவதை நம்பத்தான் முடியுமா? இது பற்றி இந்திய அரசோ, ராஜபக்சே அரசோ வாய்திறக்காத நிலையில், இந்திய உளவுத் துறைக்கு அப்பாற்பட்டு கே.பி.யும் கஸ்பாரும்

போர்நிறுத்தத் திட்டத்தைத் தயாரித்ததாகக் கூறும் கோமாளித்தனத்தை ஏற்கத்தான் முடியுமா?

மேற்கத்திய நாடுகள் போர்நிறுத்தம் வேண்டுமென்று இலங்கை அரசை வலியுறுத்தியபோதிலும், தமிழகத்தில் போர் நிறுத்தம் கோரி போராட்டங்கள் தொடர்ந்த போதிலும், இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நாம் தலையிட முடியாது, போர் நிறுத்தத்தைக் கோரவும் முடியாது என்றுதான் இந்திய ஆட்சியாளர்கள் கூறிவந்தனர். அதேசமயம், இந்திய இராணுவ மற்றும் இந்திய உளவுப்படையான ''ரா'' வின் அதிகாரிகள் முள்ளிவாய்க்காலில் நிறுத்தப்பட்டிருந்தனர். தேர்தலையொட்டி தனது உண்ணாவிரத நாடகத்தின் விளைவாக போர் நிறுத்தப்பட்டு விட்டது என்று கருணாநிதி ஆரவாரம் செய்தார். கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை மட்டுமே நிறுத்தியிருக்கிறோம், இது போர் நிறுத்தம் அல்ல என்று இலங்கை அரசு அழுத்தம் திருத்தமாக அறிவித்தது. அதுவும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் முடியும்வரைதான் நீடித்தது. அதன் பிறகு, இந்தியாவின் வழிகாட்டுதலின்படி முழுவீச்சில் இறுதித் தாக்குதலை சிங்கள பாசிச அரசு கட்டவிழ்த்து விட்டு உலகின் மிகக் கொடியதொரு இனப்படுகொலையை அரங்கேற்றியது.

அப்போது பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜியோ பிரதமர் மன்மோகன் சிங்கோ போர் நிறுத்தத்தைப் பற்றிப் பேச மறுத்துவிட்ட நிலையில், இவற்றுக்குத் தொடர்பே இல்லாத நிதியமைச்சரான ப.சிதம்பரம் வழிகாட்டுதலில் போர் நிறுத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதாக கஸ்பார் கூறுவது அண்டப்புளுகு அன்றி வேறன்ன? கோயபல்ஸ் பாணியில் திரும்பத் திரும்ப இந்தப் பொய்யைச் சொல்வதன் மூலம் காங்கிரசு மற்றும் கருணாநிதி மீது ஈழ மற்றும் தமிழக மக்கள் கொண்டுள்ள கோபத்தையும் வெறுப்பையும் திசைதிருப்புவதே இந்த கீழ்த்தரமான முயற்சியின் நோக்கம். இந்திய அரசு போர் நிறுத்த முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறுவதன் மூலம், கருணாநிதியைப் பாதுகாப்பது மட்டுமல்ல; இலங்கை அரசு போர் நிறுத்தத்துக்கு தயாராக இருந்ததைப் போலவும், புலிகள் போர் நிறுத்தத்துக்கு சம்மதித்துச் சரணடைந்திருந்தால், முள்ளிவாய்க்கால் படுகொலையைத் தவிர்த்திருக்க இயலும் என்பதைப் போலவும் ஒரு புதுக்கதையைக் கிளப்புவதன் மூலம் ஈழத்தமிழர்கள் மத்தியில் ராஜபக்சேவுக்கு ஆதரவு தேடும் கீழ்த்தரமான முயற்சியும் இதில் உள்ளடங்கியிருக்கிறது.

வைகோ, நெடுமாறன், சீமான் முதலானோர் தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றி பெறும் என்று புலிகளுக்கு நம்பிக்கையூட்டியவர்கள்தான். இந்தியாவின் மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்கு பதிலாக, சீனாவின் கூட்டாளியான ராஜபக்சே கும்பலை நம்பி ஏமாறக் கூடாது என்று உபதேசித்து இந்திய அரசை இன்னமும் தாஜா செய்பவர்கள்தான். இருப்பினும், இனப் படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்ட கொலைகார ராஜபக்சே கும்பலைப் போர்க் குற்றவாளியாக அறிவித்து தண்டிக்க வேண்டும் என்றும், ஈழப் படுகொலைக்கு இந்தியாவும் காரணம் என்றும் அவர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். அவர்களைத் தனிமைப்படுத்தும் நோக்கத்திலேயே இந்தப் போர் நிறுத்தக் கதை அவிழ்த்து விடப்படுகிறது. இந்தக் கதையை இன்று இந்திய அரசோ, இலங்கை அரசோ கூறும் பட்சத்தில் அதை நம்புவதற்கு ஆளிருக்காது. அதன் பொருட்டுத்தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கே.பி.யை ஊடகங்களின் முன் கொண்டுவந்து நிறுத்தி, இப்படி ஒரு பொய்யை உலகுக்குச் சொல்ல வைத்திருக்கிறது, இலங்கை அரசு.



சீனாவின் கூட்டாளியான ராஜபக்சேவை நம்பி ஏமாறக் கூடாது என்று உபதேசித்து இந்திய அரசை தாஜா செய்துவரும் வைகோ மற்றும் நெடுமாறன்.

ஈழப்போரின் போதே சிங்கள பாசிச அரசுக்கு ஆதரவாகத் தமிழக ஊடகவியலாளர்களை விலைபேசி இலங்கை அரசின் மீது நல்லெண்ணத்தைப் பரப்பும் வேலையை அப்போது சென்னையில் இலங்கையின் துணைத் தூதராகப் பணியாற்றிய அம்சா மூலமாக ராஜபக்சே கும்பல் நடத்தி வந்தது. போருக்குப் பின்னர் ''இந்து'' நாளேட்டின் ஆசிரியரான ராம் மற்றும் பிறரைக் கொண்டு நிவாரணப் பணிகள் சிறப்பாக நடப்பதாகக் காட்டி, ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றங்களை மறைக்கும் முயற்சிகள் நடந்தன. பிறகு, தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் இலங்கை விஜயமும், சினிமா நடிகர்களின் சுற்றுப்பயணமும் அரங்கேற்றப்பட்டன. அடுத்த ஆண்டு ஜனவரியில் அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டை நடத்துவதென்றும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இது, இந்திய-இலங்கை அரசுகள் இணைந்து தொடுக்கத் தொடங்கியிருக்கும் உளவியல் யுத்தம். இந்திய மேலாதிக்கத்தால் கருச்சிதைவு செய்யப்பட்ட ஈழப் போராட்டம், இத்தகைய வதந்திகளைப் பரப்புவதற்குத் தோதான பலவகையான சக்திகளை ஈழத் தமிழ்ச் சமூகத்தில் தோற்றுவித்திருக்கிறது. இவர்களின் மூலம் துயரத்தில் வீழ்ந்திருக்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தில் குழப்பத்தையும் அவநம்பிக்கையையும் பரப்பி, அவர்களை அரசியல் ரீதியாகவும் சரணடைய வைப்பதே ராஜபக்சே அரசின் நோக்கம்.

● தனபால்

# “மறுகாலனியாதிக்கத்தைத் தகர்ப்போம்!”

## – பொது வேலைநிறுத்தத்தையொட்டி பு.ஜ.தொ.மு.–விடுத்த அறைகூவல்.

‘‘விலைவாசி உயர்வு, பன்னாட்டுத் தொழில் கழகங்களின் ஆலைகளில் தொழிற்சங்கங்கள் நிறுவும் உரிமை, 8 மணி நேர வேலை, பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு போன்ற உரிமைகள், ஒப்பந்த வேலைமுறை ஒழிப்பு, ஊக வாணிபத்துக்குத் தடை, தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலைக் கைவிடுதல்’’ முதலான கோரிக்கைகளை வலியுறுத்தி சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு.; எச்.எம்.எஸ்., உள்ளிட்ட எட்டு மையத் தொழிற்சங்கங்கள் செப்டம்பர் 7-ந் தேதி நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இக்கோரிக்கைகள் எழுவதற்கு மூலகாரணமான மறுகாலனியாதிக்க நடவடிக்கைகளை எதிர்த்தும், அதனால் பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவு மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும் செப்டம்பர் 7 பொது வேலை நிறுத்தத்தினை ஆதரிப்பது, பங்கேற்று, அதற்கு ஆதரவு திரட்டுவது எனப் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி முடிவு செய்து, அதன்படி கீழ்க்காணும் இடங்களில் செப்.7 பொது வேலைநிறுத்த ஆதரவுக் கூட்டங்களும் மறியலும் நடத்தியது.

**சென்னையில்**

சென்னை - பூவிருந்தவல்லியை அடுத்த குமணன்சாவடி பேருந்து நிலையத்தில் செப்.4 அன்று பொது வேலை நிறுத்தப் பிரச்சாரத் தெருமுனைக் கூட்டம் நடந்தது. பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் அ.முகுந்தன் தலைமையில் மாநிலப் பொருளாளர் தோழர் பா.விஜயக்குமார் சிறப்புரையாற்றினார். பெருந்திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

செப்.7 அன்று பொது வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக, பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் அருகே, மதியம் 1 மணிக்கு தோழர் முகுந்தன் தலைமையில் சாலை மறியல் நடந்தது. சுமார் அரைமணி நேரம் திடீரென்று நடத்தப்பட்ட சாலை மறியலின்போது தோழர்களது ஆவேச முழக்கங்களும், போலீசின் மிரட்டலுக்கும் மறியலைக் கலைக்கும் முயற்சிக்கும் அஞ்சாமல் தோழர்கள் போர்க்குணத்துடனும் உறுதியுடனும் போராடியதும் பகுதி மக்களையும் தொழிலாளர்களையும் ஈர்த்தன. கைது செய்யப்பட்ட தோழர்கள் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.



சென்னையில்...

**ஓசூரில்**

செப். 7 பொது வேலைநிறுத்த ஆதரவுப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அதேநோளில் ஓசூர் முக்கொண்டப்பள்ளி, பாகலூர் ஆகிய இடங்களில் பு.ஜ.தொ.மு. தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது. முக்கொண்டப்பள்ளி தெருமுனைக் கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் தோழர் இரா. சங்கரும்; பாகலூரில் பகுதிப் பொறுப்பாளர் தோழர் இரவிச்சந்திரனும் தலைமை தாங்கினர். இரு இடங்களிலும் தோழர் பரசுராமன் சிறப்புரையாற்றினார். திரளான பொதுமக்களும் தொழிலாளர்களும் கலந்து கொண்டு நிதியும் ஆதரவும் வழங்கினர்.

**புதுச்சேரியில்**

பொது வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு திரட்டும் தெருமுனைக் கூட்டத்திற்கு செப். 7 அன்று போலீசு அனுமதி மறுத்து விட்டது. என்றாலும் செப். 6 அன்றே புதுச்சேரி-திருப்புவனையில் இக்கூட்டம் நடத்தப்பட்ட போதும், பேருந்து பிரச்சாரத்தின் போதும் பிழைப்புவாதச் சங்கங்களின் துரோகத்தனம் அம்பலப்படுத்தப்பட்டு மக்களின் ஆதரவையும் வரவேற்பையும் பெற்றது.

-பு.ஜ.செய்தியாளர்கள்.

# சந்தி சிரித்தது இந்துஸ்தான் யூனிலீவரின் அடக்குமுறை

புதுவை வடமங்கலத்திலுள்ள இந்துஸ்தான் யுனிலீவர் லிமிடெட் என்ற பன்னாட்டு நிறுவனத்தில் தொடர்ந்து நிலவி வரும் தொழிலாளர் விரோதப் போக்குகளைக் கண்டித்தும், பு.ஜ.தொ.மு. இணைப்பு சங்கமான இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன் தலைவர் தோழர் அய்யனார் 12(3) ஊதிய ஒப்பந்தத்தின் குறைகளை சுட்டிக் காட்டியதால், அவருக்கு வழங்கப்பட்ட 10 நாட்கள் பணியிடை நீக்கத்தை ரத்து செய்யக் கோரியும் 15.09.2010 அன்று ஆலைவாயில் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன் பொதுச்செயலாளர் எழில் தலைமை உரையாற்றினார். தோழர் முத்துக்கிருஷ்ணன், தோழர் லோகநாதன் கண்டன உரையாற்றினர். பு.மா.இ.மு. புதுவை மாநில அமைப்பாளர் தோழர் கலை மற்றும் பு.ஜ.தொ.மு. புதுவை மாநிலப் பொருளாளர் செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி வருவதையும் நமது வரிப்பணத்தில் கொழுத்து வருவதையும் அதற்கு துணைநிற்கும் ஓட்டுக்கட்சித் துரோகிகளையும் அம்பலப்படுத்திப் பேசினார்கள்.

மாற்றுத் தொழிற்சங்கத்தை அம்பலப்படுத்தியும், சாதிரீதியாக தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி வைத்திருப்பதை உணர்த்தும் வகையில் தோழர்கள் பேசியதும், தொழிலாளர்கள் அனைவரும் வர்க்கமாய் அணிதிரண்டு நக்சல்பாரிப் பாதையில் போராட வேண்டும் என்று அறைகூவி அழைத்ததும் தொழிலாளர் மத்தியில் புதுத்தெம்பையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பு.ஜ.தொ.மு., புதுவை.

# “விளை நிலங்கள் வீட்டு மனைகள் ஆக்கப்படுவதைத் தடைசெய்!”

## –வி.வி.மு.–வின் கண்டன ஆர்ப்பாட்டம்

திருவாரூர் தனி மாவட்டம் ஆன பின், மாவட்ட நிர்வாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக திருவாரூரின் அருகே அமைந்துள்ள விளமல், சிங்களாஞ்சேரி, தண்டலை, மே.மங்கலம் ஆகிய கிராமங்களின் விளைநிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டன. இதனால் வேலை இழந்த விவசாயிகளுக்கு எவ்வித மாற்று வேலையும் வழங்கப்படவில்லை. மாறாக, அவர்கள் அரசு உயர் அதிகாரிகள், அரசு ஒப்பந்தக்காரர்களின் வீடுகளில் துப்புரவு பணியாளர்களாகவும், எடுபிடிகளாகவும் வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

விவசாய விளைநிலங்களை மனைகளுக்காக அபகரிக்கும் இந்த அபாயகரமான போக்கு, திருவாரூருக்கு அருகேயுள்ள குடவாசல் வட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களிலும் தற்பொழுது பரவி வருகிறது. இப்பகுதியில் சுமார் 400 ஏக்கர் பாசன நிலம் அதிகார பலமிக்க சிலரால் விலைக்கு வாங்கப்பட்டு தரிசாகப் போடப்பட்டுள்ளது. ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புப் பெறாத ஒரு ஏக்கர் நிலத்தைக்கூட கறுப்புப் பண பேர்வழிகள் 5 இலட்ச ரூபாய் கொடுத்து வாங்கி வருவதால், நில உரிமையாளர்கள் நிலத்தைத் தரிசாகப் போடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் குத்தகை விவசாயிகளும் கூலி விவசாயிகளும் வேலைதேடி கிராமங்களைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.




இந்த அபாயகரமான போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி திருவாரூர் பகுதியில் செயல்பட்டு வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, ‘‘விளை நிலங்களைத் தரிசாகப் போடுவதை முற்றாகத் தடை செய்! பாசன விவசாய நிலங்களை வீட்டு மனைகளாக்குவதைத் தடை செய்!’’ உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, பகுதி மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி, 14.7.2010 அன்று மாவட்ட ஆட்சியரிடம் மனுவாகக் கொடுத்தது. இதன் தொடர்ச்சியாக, இதே கோரிக்கைகளை வலியுறுத்தி 30.8.2010 அன்று திருவாரூர் - அம்மையப்பன் கடைத் தெருவில் விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அம்மையப்பன், காவனூர் வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஆதரவளித்தனர்.

ஓட்டுக்கட்சிகள் இந்த அபாயகரமான போக்கை கண்டும் காணாமல் ஒதுங்கிப் போகும் நிலையில், வி.வி.மு.-வின் முன்முயற்சியில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் பகுதி விவசாயிகளிடம் நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது.

–பு.ஜ.செய்தியாளர், திருவாரூர்.

# சாராயக் கடைக்கு மூடுவிழா! மக்களுக்குத் திருவிழா!

சென்னை, சேத்துப்பட்டு பள்ளிக்கூடச் சாலை ‘டோபி கானா’ எதிரில் பெண்கள், மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் 1997 முதல் சாராயக் கடை (ஒயின்ஸ் கடை) ஒன்று இயங்கி வந்தது. அதை அகற்றும்படி கோரி பொதுமக்கள் ம.க.இ.க. தலைமையில் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். தனியார் முதலாளியிடம் இருந்தபோது இப்பகுதியின் ரவுடி தங்கையாவையும் போலீசையும் வைத்து தோழர்களை மிரட்டியும் விலைக்கு வாங்கவும் முயன்று தோற்றுப் போனார்கள். மாவட்ட ஆட்சியாளர் ஆய்வுக் குழு அனுப்பினார். அதைச் சந்தித்து முறையிடப் போன மக்கள் ஊர்வலத்தை வழிமறித்த போலீசு சாராய வியாபாரிக்குத் துணை நின்றது.

பின்னர் அரசே சாராய வியாபாரத்தை ஏற்கும் ‘‘டாஸ்மாக்’’ கடை ஆனது. மாவட்ட ஆட்சியாளர், முதல்வர், தொகுதி மந்திரி பரிதி இளம்வழுதி, ‘டாஸ்மாக்’ இயக்குனர் என மனுக் கொடுத்தும் பலனில்லை. உழைக்கும் மக்களைச் சீரழிக்கும் இச்சாராய வியாபாரத்துக்கு எதிராக ம.க.இ.க. தோழர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர். ஓட்டுக் கட்சிகள் கண்டு கொள்ளவில்லை. கடையை இழுத்து மூடும் போராட்டம் நடத்தி ஊர்வலமாகப் போன மக்களை மாநகர இணை, துணை போலீசு ஆணையாளர்களை ஏவி வழிமறித்துக் கைது செய்தது அரசு.

சாராயக் கடை கட்டிட உரிமையாளர் ஒத்துழைப்புடன் மனித உரிமை மையத்தின் மூலம் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு கடையை அகற்றும்படியான தீர்ப்புப் பெற்று கடந்த ஆக.7 அன்று கடை அகற்றப்பட்டது. 13 ஆண்டுகள் போராட்டத்திற்குப் பிறகு கடை அகற்றப்பட்டது. அன்றே ஊர் முழுக்க பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி, முழக்கமிட்டு, தீப்பந்தம்-சிலம்பம் சுழற்றி சாராயக் கடை மூடப்பட்டதை சேத்துப்பட்டு மக்களோடு சேர்ந்து ம.க.இ.க. கொண்டாடியது.

இவ்வெற்றியைக் கொண்டாடும் விதமாக செப்.21 அன்று சேத்துப்பட்டு-அம்பேத்கார் திடலில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பு.மா.இ.மு. நடத்திய சாராய எதிர்ப்பு நாடகம் பகுதி மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

–ம.க.இ.க., சென்னை.

### இராக்:

# அமெரிக்கப் படை விலக்கம் ஊரை ஏய்க்கும் நாடகம்!

**அமெரிக்கப் படைகளை இடம் மாற்றி நிறுத்தியிருக்கும் இராணுவ உத்தி, படை விலக்கமாகாது.**

“அமெரிக்கப் படைகள் இராக்கில் நடத்தி வந்த போர் நடவடிக்கைகள் ஆகஸ்ட் 31, 2010 அன்றோடு முடிவடைந்துவிட்டதாக” அறிவித்திருக்கிறார், அமெரிக்க அதிபர் ஒபாமா. அவர் இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாக, இராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கப் படைகளின் ஒரு பகுதி இராக்கிலிருந்து வெளியேறியது. இந்த நடவடிக்கைகள் மூலம், “இராக் தற்பொழுது சுதந்திரமான சுயாதிபத்தியமுள்ள நாடாக ஆகிவிட்டதாகவும், இராக்கிற்கு விடுதலை பெற்றுத் தரும் தனது நடவடிக்கை வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டதாகவும்” உலக நாடுகளுக்கு அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

பாரக் ஒபாமா அதிபர் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, இராக் போர் மீதான அமெரிக்க மக்களின் அதிருப்தியை ஓட்டுக்களாக அறுவடை செய்து கொள்ளும் தந்திரத்தோடு, இராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை அளித்தார். இப்பொழுது இந்தப் படை விலக்கத்தைக் காட்டி, அமெரிக்க மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறார், அவர். ஆனால், இந்தப் படைவிலக்கம் குறித்த செய்திகளை மேலோட்டமாகப் பார்த்தாலே, இதுவொரு மோசடி நாடகம் என்பதைப் பாமரர்கள் கூடப் புரிந்து கொள்ளலாம்.

இராக்கிலிருந்து வெளியேறியுள்ள அமெரிக்கப் படை அமெரிக்காவிற்குத் திருப்பியனுப்பப்படவில்லை. இராக்கிலிருந்து கூப்பிடு தூரத்தில் அமைந்துள்ள குவைத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமில்தான் தங்க வைக்கப்பட்டிருக்கிறது. 1990-இல் அமெரிக்கா இராக் மீது போர் தொடுத்தபொழுது, அமெரிக்கப் படைகள் குவைத் வழியாகத்தான் இராக்கிற்குள் நுழைந்தன என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த வெளியேற்றத்திற்குப் பிறகும் இராக்கில் 50,000 முதல் 70,000 துருப்புகள் வரை அடுத்த ஆண்டு வரை தங்கியிருப்பார்கள் என்றும், இத்துருப்புகள் ‘தீவிரவாதிகளை’ எதிர்த்துப் போராடுவதற்கு இராக் இராணுவத்திற்கு உதவி செய்வார்கள் என்றும் அறிவித்திருக்கிறது, அமெரிக்க அரசு.


அமெரிக்க அதிபர் வாக்களித்துள்ளபடி இத்துருப்புகள்கூட இராக் நாட்டிலிருந்து அடுத்த ஆண்டே விலக்கிக் கொள்ளப்பட்டாலும், அதனால் இராக்கில் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதிவிட முடியாது. ஏனென்றால், அமெரிக்க அரசால் இராக்கில் நுழைக்கப்பட்டுள்ள இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான தனியார் கூலிப் படைகள் வெளியேறுவது பற்றி ஒபாமா வாயே திறக்க மறுக்கிறார்.

இதற்கும் மேலாக, இராக் நாட்டை தனது நிரந்தர இராணுவத் தளமாக மாற்றும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இதன்படி, இராக்கிலுள்ள பாலாத் என்ற ஊருக்கு அருகே 40 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 20,000 துருப்புகள் தங்கக்கூடிய இராணுவத் தளமொன்றையும், அல்-அஸாத் என்ற ஊருக்கு அருகே 17,000 துருப்புகள் தங்கக்கூடிய இராணுவத் தளமொன்றையும் அமைத்து வருகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். இந்த இரண்டு தளங்களையும் சேர்த்து, இராக் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிறிதும் பெரிதுமாக 94 இராணுவத் தளங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது, அமெரிக்க ஏகாதிபத்தியம்.




இதுவொருபுறமிருக்க, அமெரிக்க இராணுவத் தலைமை பீடமான பென்டகனின் திட்டப்படி, இராக்கி

லிருந்து வெளியேறியுள்ள படைக்கு ஈடாக மற்றொரு படையை இராக்கில் இறக்கிவிட்டுள்ளது, அமெரிக்கா. அரசு தந்திர நிபுணர்கள், பொருளாதார ஆலோசகர்கள், சமூக சேவகர்கள் என்ற போர்வையில் நுழைந்துள்ள இந்த அரசியல் படையின் கண்ணசைவிற்குத் தகுந்தபடிதான் இராக் பொம்மையாட்சி நடக்கும். இதற்குத் தகுந்தபடி இராக்கில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் 800-க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால், இராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகம்தான் அந்நாட்டில் ஆட்சி அதிகார மையமாக இருக்கும்.




அமெரிக்கா இராக்கை ஆக்கிரமித்த பிறகு, தனது மேலாதிக்க நலன்களுக்குத் தகுந்தவாறு படைபல ஒப்பந்தமொன்றை உருவாக்கியது. இந்த ஒப்பந்தம்தான் இன்று இராக்கின் எழுதப்படாத சட்டத் தொகுப்பாக விளங்குகிறது. இந்தச் சட்டத்தின்படி, இராக்கின் வான்வழிப் பாதையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இராக்கிற்கு கிடையாது. அந்த அதிகாரம் இந்த ஒப்பந்தத்தின் வழியாக அமெரிக்காவிடம் அடகு வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா இராக்கை நேரடியாக ஆக்கிரமித்த பின், அதன் எண்ணெய் வளத்தில் 60 சதவீதத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. சதாம் உசேன் ஆட்சியின் பொழுது நாட்டுடைமையாக்கப்பட்டிருந்த இராக்கின் எண்ணெய் வயல்களைத் தனியார்மயமாக்கி, அவற்றை அமெரிக்க எண்ணெய்க் கழகங்களின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் இராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது என்ற உண்மை இந்தக் கைப்பற்றல் மூலம் மீண்டும் பளிச்செனஅம்பலப்பட்டிருக்கிறது.

இராக்கின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிப்பதற்கு அமெரிக்க முதலாளிகளுக்குக் கிடைத்துள்ள சுதந்திரம்தான், இராக்கின் சுதந்திரமாகவும் விடுதலையாகவும் புரட்டிக் கூறப்படுகிறது. இராக்கில் நுழைந்துள்ள இந்த அமெரிக்க ஏகபோக எண்ணெய் கழகங்களின் சொத்துரிமையை, சுரண்டலைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டமே, இராக்கின் அரசியல் சாசனச் சட்டமாக உருவெடுத்துள்ளது.

குறிப்பாக, இராக்கின் எண்ணெய் வயல்களுள் பெரும்பாலானவை அமைந்துள்ள குர்து இன மக்கள் வசித்து வரும் பகுதி, அதிக அதிகாரங்கள் கொண்ட மாகாணமாக உருவாக்கப்பட்டுள்ளது. சதாமை எதிர்த்து நீண்ட காலமாகப் போராடி வந்த குர்து இன மக்களுக்கு அரசியல் உரிமைகள் அளிப்பது இதன் நோக்கமல்ல. மாறாக, அங்குள்ள எண்ணெய் வயல்களைக் கைப்பற்றியுள்ள அமெரிக்காவின் வர்த்தகச் சுதந்திரத்தில் இராக்கின் மைய அரசு தலையீடு செய்வதைத் தடுப்பதுதான் இம்மாகாண சுயாட்சியின் நோக்கம்.

அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் ஆப்கான் மக்களுக்கும் போலீசுக்கும் இடையே ஜூலை 30 அன்று காபூல் நகரில் நடந்த மோதலில் அந்நிய இராணுவ வாகனம் தீக்கிரையாக்கப்பட்டது.



இராக் மக்களுக்கு இந்த ‘சுதந்திரத்தையும் விடுதலையையும்’ வழங்குவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் இதுவரை ஏறத்தாழ 10 இலட்சம் இராக்கியர்களின் உயிரைப் பறித்திருக்கிறது; ஏறத்தாழ 50 இலட்சம் இராக்கியர்களை அகதிகளாக சொந்த நாட்டிலிருந்து துரத்தியடித்திருக்கிறது; ஏறத்தாழ 27 இலட்சம் இராக்கியர்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கியிருக்கிறது; 1,000 டன்னுக்கும் அதிகமான செறிவுகுறைந்த யுரேனியம் அணுகுண்டுகளை அந்நாட்டின் மீது வீசி, அந்நாட்டையே நஞ்சாக்கியிருக்கிறது; தனது காலனியாதிக்க நலன்களுக்காக ஷியா - சன்னி - குர்து ஆகியோருக்கிடையே பிளவைத் தூண்டி

விட்டு மோதவிடுவதன் மூலம், சமூக அமைதியையே சீர்குலைத்துவிட்டது.

சதான் உசேன் சர்வாதிகார ஆட்சி நடத்தினார் என்றால், அவரைத் தூக்கிலிட்டுவிட்டு அமெரிக்கா இராக் மீது திணித்துள்ள 'ஜனநாயக' ஆட்சியோ பேராசை பிடித்த ஊழல் பேர்வழிகளின், சொந்த நாட்டையே கொள்ளையடிக்கும் மோசடிப் பேர்வழிகளின் கூடாரமாக இருப்பதை முதலாளித்துவப் பத்திரிகைகளே அம்பலப்படுத்தி வருகின்றன.

2,500 ஆண்டு கால பழமை வாய்ந்த மெசபடோமியா நாகரிகத்தின் வரலாற்றுச் சின்னங்களுள் பெரும்பகுதி, அமெரிக்கா இராக்கை ஆக்கிரமித்த மறுநிமிடமே களவு போய்விட்டன. மீதி அமெரிக்கா மற்றும் நேடோ நாட்டுப் படைகளின் தாக்குதல்களால் குப்பை மேடாகி விட்டன. பாபிலோனில் உள்ள வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடமொன்றை அழித்துவிட்டு, அங்கே தனது இராணுவ தளத்தைக் கட்டியமைத்திருக்கிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். சிதைவடைந்து வரலாற்றுச் சின்னமாக இருக்கும் இடம் அழிக்கப்பட்டு, அங்கே அமெரிக்க இராணுவ ஹெலிகாப்டர் தளம் அமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த வழிபாட்டுத் தலத்தை அழித்து, அதனிடத்தில் பதுங்கு குழிகளை அமைத்திருக்கிறது, போலந்து நாட்டுப் படை. பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய இந்து மத வெறியைவிடக் கேடானது, குரூரமானது, காலனியாதிக்கவாதிகளின் இந்த வெள்ளையின வெறி.

•••

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தயாரித்துள்ள தேசியப் பாதுகாப்பு போர்த் தந்திரத் திட்டத்தின்படிதான் இராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க இராணுவத்தின் ஒரு பகுதி இன்று குவைத்திற்கு இடம் பெயர்ந்திருக்கிறதேயொழிய, அதற்கு அப்பால் இதில் இராக் மக்களின் நலனோ, அமெரிக்க மக்களின் நலனோ அடங்கியிருக்கவில்லை.

மேற்காசியாவில் இராக்கிற்கு அடுத்து இரானிலும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற திட்டத்தோடு அலையும் அமெரிக்கா, உலக மக்களிடம் தனது நோக்கத்தை நியாயப்படுத்திக் கொள்வதற்காக இரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வருவதாக ஒரு புளுகுணிப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரான் மீது அடுத்தடுத்துப் பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகிறது.

சமீபத்தில், இரானுக்கு எந்த நாடும் பெட்ரோல் உள்ளிட்ட சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களை விற்கக் கூடாதென்றும், இரான் நாட்டில் பதிவு செய்யப்பட்ட கப்பல்களை எந்தவொரு நாடும் கடலில் வழிமறித்துச் சோதனை செய்யலாம் என்றும் ஐ.நா. மூலம் கட்டளையிட்டுள்ளது, அமெரிக்கா. இரான் இதற்குப் பதிலடியாக, தனது கப்பல்கள் வழிமறித்துச் சோதனை செய்யப்பட்டால், ஹெர்மோஸ் ஜலசந்தி வழியாக மேற்குலக நாடுகளுக்கு கச்சா எண்ணெயை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என எச்சரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து பாரசீக வளைகுடாவில் தனது போர்க் கப்பல்களைக் கொண்டு வந்து நிறுத்தி இரானை அச்சமூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியிருக்கிறது, அமெரிக்கா.

ஆப்கானில் நடந்துவரும் ஆக்கிரமிப்புப் போரில் அமெரிக்கா வெற்றி பெறமுடியாது என்ற உண்மையை ஆப்கானில் அமெரிக்கப் படைத் தளபதியாக இருந்த ஸ்டான்லி ஏ.மெக்கிறிஸ்டல் சமீபத்தில் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டார். இதனால் அவரை ஆப்கானில் இருந்து தூக்கியடித்து இவ்வுண்மையை மூடிமறைக்க முயன்றார், ஒபாமா. எனினும், இவ்வுண்மை இப்பொழுது வேறொரு வழியில் அம்பலமாகிவிட்டது.

அமெரிக்கா இராணுவத்தால் ஆப்கான் போர் பற்றி இரகசியமாக வைக்கப்பட்டிருந்த 76,000 ஆவணங்களை விக்கிலீக்ஸ் என்ற இணையதளம் சமீபத்தில் வெளியிட்டு அம்பலப்படுத்தியது. அந்த ஆவணங்களில் ஆப்கானில் அமெரிக்காவும் அதனின் கூட்டாளியான நேட்டோவும் நடத்தியுள்ள போர்க்குற்றங்கள் மட்டுமின்றி, ஆப்கானில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடந்துவரும் போர் அந்நாட்டு மக்களின் ஆதரவோடு நடந்து வரும் உண்மையும் பதிவாகியிருக்கிறது.

இரான் மற்றும் சீனாவைக் கண்காணிப்பதற்கும், மத்திய ஆசியப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, அந்நாடுகளில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வரும் எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தைச் சுரண்டுவதற்கும் ஆப்கானில் ஒரு அமைதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் அமெரிக்கா

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் இரான் மீதான பொருளாதாரத் தடைகளை விதிக்கும் சட்டத்தில் கையெழுத்திடும் பாரக் ஒபாமா.



விற்கு உள்ளது. இதனால் ஆப்கான் போரில் எப்படியா வது வெற்றி பெற்றுவிட வேண்டும் என வெறியோடு அலையும் ஒபாமா, இப்பொழுது அங்கு புதிய செயல் உத்தியைக் கையாளத் திட்டமிட்டுள்ளார். இதன்படி, ஆப்கானில் உள்ள அமெரிக்க மற்றும் நேடோ துருப்பு களின் எண்ணிக்கையை அதிகரிப்பது; தேசிய சமரசத் திட்டம் என்ற பெயரில் தாலிபானின் ஒரு பிரிவோடு சமரசம் செய்துகொண்டு ஆப்கானில் அமைதியை ஏற் படுத்துவது என்ற முயற்சிகளை மேற்கொண்டு வரு கிறது, அமெரிக்கா.

இராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளின் ஒரு பகுதி குவைத்திற்கு இடம் பெயர்ந்திருப்பதை இந்தப் பின்னணியில் இருந்துதான் பார்க்க வேண்டும். ஆசியக் கண்டம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்ப படையணிகளை இடம் மாற்றி நிறுத்தியிருக்கும் இராணுவ உத்திதானே தவிர, இது படை விலக்கல் அல்ல.

எனினும், ஒபாமா தன்னைச் சமாதானத் தூதுவனாகக் காட்டிக் கொள்ளும் சாக்கில், இராக் போர் தவறானது என்றும் கூறி வருகிறார். இப்போர் தவறானது என்றால், இப்போருக்குக் காரணமான ஜார்ஜ் புஷ், டோனி பிளேர், ரம்ஸ்ஃபீல்டு உள்ளிட்ட அனைவரும் போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வேண்டும். நாஜிக் குற்றவாளிகளைத் தண்டிக்க -ரம்பர்க் விசாரணை மன் றம் நிறுவப்பட்டதைப் போல இராக் போர்க் குற்றவாளி களைத் தண்டிக்க சர்வதேச விசாரணை மன்றம் ஏற் படுத்த ஒபாமா முன் வந்திருக்க வேண்டும். ஆனால் ஒபாமாவோ இதற்கு மாறாக, இராக்கை தனது மறு காலனியாகத் தொடருவதற்கான - எந்த நோக்கத்திற்காக இராக் ஆக்கிரமிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்கான கட்டுமானத்தை உருவாக்கு வதில்தான் அக்கறை காட்டுகிறார். இது அக்கருப்பின அதிபரின் கபடதனத்தைத்தான் அம்பலப்படுத்திக் காட்டுகிறது.

● திப்பு

### “அந்தத் திருமணத்தில் குரான் ஓதப்படவில்லை; புரட்சிகரப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன!”

# இது எப்படி சாத்தியமானது?

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியைச் சேர்ந்த அலாவுதீனுக்கும் சப்னா ஆஸ்மிக்கும் 10.7.2010 அன்று திரு மணம் நடந்தது. இதிலென்ன முக்கியத்துவம் உள்ளது என்ற கேள்வி வாசகர்களுக்கு எழலாம். மணமகன் அலாவுதீன் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர். மணமகளோ தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் மாநிலத் துணைத் தலைவரின் மகள். பு.மா.இ.மு. அமைப்புத் தோழர்களின் தலைமையில் முசுலீம் மதச் சடங்குகளின்றி சீர்திருத்த முறை யில் நடந்த திருமணம் இது என்பதுதான் இதன் சிறப்பு.

இத்திருமணம் உள்ளூர் ஜமாத்தாருக்குச் சொந்தமான திரு மண மண்டபத்தில் நடந்தது. பொதுவாகப் பச்சைக் கொடி பறக்கும் இம்மண்டபத்தில் திருமண நாளன்று அம்மண்ட பத்தை சிவப்புக் கொடிகளும் தோரணங்களும் அலங்கரித் தன. முசுலீம் சமுதாய மக்கள் உருவ வழிபாட்டை மறுப்ப வர்கள் என்பதும் அவர்களின் மத மற்றும் குடும்ப விழாக் களில் முசுலீம் மதத்தைச் சேர்ந்த ஞானிகளின் படங்களைக் கூட அனுமதிக்கமாட்டார்கள் என்பதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால், இத்திருமண நிகழ்ச்சியில் அம்மண் டபத்தில் கம்யூனிச ஆசான்கள் மற்றும் பகத் சிங்கின் புகைப் படங்கள் அலங்கரித்தன. திருமண நாளன்று முழுவதும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் புரட்சிகரப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

மனிதர்களது வாழ்க்கையில் இன்பம்-துன்பம் உள்ளிட்டு அனைத்தும் ஆண்டவனால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்று என்பது முசுலீம் மதத்தினரின் ஆழ்ந்த மத நம் பிக்கை. இத்திருமணத்தின்பொழுதோ அம்மத நம்பிக்கைக்கு மாறாக, ‘‘திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவ தில்லை; வர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன’’ என்ற கம் யூனிஸ்டுகளின் நம்பிக்கை அனைவரையும் வரவேற்றது. முசுலீம் சமுதாயத் திருமணங்கள், அச்சமுதாயத்தைச் சேர்ந்த மௌல்வி மற்றும் பெரியவர்கள் தலைமையில்தான் நடை பெறும். இத்திருமணமோ, பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் கணேசன் தலைமையேற்க, பு.மா.இ.மு. மாநில ஒருங் கிணைப்பாளர் தோழர் பரமானந்தம், புதுக்கோட்டை மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் அமைப்பாளர் வழக் குரைஞர் ராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க நடை பெற்றது.

‘‘அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையவனு மாகிய அல்லாவின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்’’ என்ற குரான் வாசகத்தைச் சொல்லிய பிறகுதான் முசுலீம் திருமணங்கள் நடைபெறும். இத்திருமணமோ தோழர்களின் புரட்சிகர உரையோடு திருமணம் நடைபெற்றது. இப்படி நடைபெற்ற திருமணத்தில் மணமக்களின் பெற்றோர்-உற வினர்கள், அமைப்புத் தோழர்களின் குடும்பத்தினர் மட்டு மின்றி, பகுதியில் வாழும் பெருவாரியான முசுலீம் மக்களும், உள்ளூர் ஜமாத் மற்றும் தவ்ஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஆழ்ந்த மத நம்பிக்கை கொண்டோரும் சுயவிருப்பத்தோடு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

மணமேல்குடியில் வசிக்கும் முசுலீம் மக்களிடம் ஒரு சீர் திருத்தத் திருமணத்தை ஏற்றுக் கொள்ளும் மன மாற்றம் எப் படி சாத்தியமானது? இத்திருமணத்தை மதச் சடங்குகளின்றி சீர்திருத்த முறையில் நடத்துவது என முடிவெடுத்த வுடனேயே, பு.மா.இ.மு. தோழர்கள் முசுலீம் மக்களிடமும், ஜமாத்தாரிடமும் திருமணத்தைச் சீர்திருத்த முறையில் நடத்த வேண்டிய அவசியம் குறித்து விளக்கியுள்ளனர். இந்த விளக் கமும், பு.மா.இ.மு.வின் புரட்சிகர அரசியல் மீதும், அமைப்பு நடவடிக்கைகள் மீதும் பகுதி முசுலீம் மக்களிடம் இருந்து வரும் நம்பிக்கையும் நன்மதிப்பும் - இவையெல்லாம் சேர்ந்து தான் இம்மன மாற்றத்தை உருவாக்கின. கம்யூனிசப் புரட்சிகர அரசியல் மற்றும் நடைமுறை மூலம், முசுலீம் மதத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்களைக்கூடப் பிடித்தாட்டும் மதக் கடுங்கோட்பாட்டு வாழ்க்கை முறையில் உடைப்பை ஏற் படுத்த முடியும் என்பதை இத்திருமண நிகழ்ச்சி நிரூபித்துக் காட்டியுள்ளது.

பு.ஜ. செய்தியாளர்.

## ஒருபுறம் இலவசம், மறுபுறம் அடக்குமுறை!

# கொட்டமடிக்கும் கருணாநிதி ஆட்சி

**சாமானியர்களின் மிகச் சாதாரண பொருளாதாரப் போராட்டங்களைக்கூட கருணாநிதியின் ஆட்சி கடுமையாக ஒடுக்குகிறது.**

தன்னுடைய சாதனைகளையும் தகுதியையும் இந்த தேசம் நியாயமாக மதிப்பிட்டுப் பார்த்திருக்கும் பட்சத்தில், காந்தி - நேரு வரிசையில் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட தேசியத் தலைவராகத் தான் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும் என்பது கருணாநிதியின் கருத்து. இலவசத் திட்டங்களால் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கும் தமிழகம் தன்னைப் போற்றிப் புகழ்வதாக அவர் கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்ற திமிர் பிடித்த காங்கிரசுக்காரர்களால் அவ்வப்போது தான் விமரிசிக்கப்படுவதை அவரால் சகித்துக் கொள்ள முடிகிறது. பிள்ளைகளின் வாரிசுரிமைத் தகராறில் முச்சந்தியில் வைத்து அவரது வேட்டி இழுபடுவதைக்கூட அவர் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொள்கிறார். அவற்றுக்கெல்லாம் ஒரு நியாயம் இருக்கிறது என்று அவர் கருதுகிறார். ஆனால் சத்துணவு ஊழியர்கள் போன்ற சாமானியர்கள் அவரது கவுரவத்தில் குறுக்கிடும்போது, அவரால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. நெற்றிக் கண்ணைத் திறந்து பாசிச ஜெயலலிதாவின் வழியில் அடக்குமுறையை ஏவத் தொடங்கிவிட்டார்.

**கனவைக் கலைத்த சாமானியர்களின் போராட்டம்**

தமிழகத்தின் 12 இலட்சம் அரசு ஊழியர்களில் 5 லட்சம் பேர் மதிப்பூதியம், தொகுப்பூதியம் என்ற பெயரில் மாதம் ரூ.300 முதல் ரூ.4500 வரை ஊதியம் பெறுகின்றனர். இவர்களில் 1.23 இலட்சம் பேர் சத்துணவு ஊழியர்கள். இவர்களுக்கு மைய அரசின் 6-வது ஊதியக் குழு பரிந்துரைத்ததைவிடக் குறைவாக, ஒரு புதிய சிறப்புக் காலமுறை ஊதியத்தைக் (ரூ.3780 முதல் ரூ.4694 வரை) கண்டுபிடித்து வழங்கி வருகிறது,கருணாநிதி அரசு. அற்ப ஊதியத்துடன் பணியாற்றிவிட்டு, பணிமூப்படைந்து ஓய்வுபெறும் சத்துணவுப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.400 முதல் ரூ.600 வரைதான் ஓய்வூதியமாகத் தரப்படுகிறது. ஆனால், தமிழகப் போலீசுத் துறையில் 6,7 ஆண்டுகளில் ஓய்வு கொடுக்கப்படும் மோப்ப நாய்களைப் பராமரிக்க, அதன் வாழ்நாள் முழுவதும் மாதம் ரூ.1500 வழங்கப்படுகிறது

கடந்த 25 ஆண்டுகளாக, அற்ப ஊதியத்துடன் அடுப்படியில் பணியாற்றும் சத்துணவு ஊழியர்கள் சி.பி.எம். கட்சியின் தலைமையிலான சங்கத்தில் கணிசமாக அணிதிரண்டு காலமுறை ஊதியம் வழங்கப்படவேண்டும், சட்டரீதியான ஓய்வூதியம் வேண்டும், கல்வித்தகுதிக்கேற்ப பதவி உயர்வு வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் பலமுறை போராடியும் அரசு அசைந்து கொடுக்காததால், கடந்த ஆகஸ்ட் 30 அன்று தலைமைச் செயலகத்தை (கோட்டையை) முற்றுகையிடும் போராட்டத்தை அறிவித்தனர். உடனே கருணாநிதிக்கு ஆத்திரம் பொங்கியது. சத்துணவு ஊழியர்களின் நியாயமான போராட்டத்தை ஆட்சிக்கு எதிரான போராட்டமாகவும் அதனைக் கம்யூனிஸ்டுகள் தூண்டிவிடுவதாகவும் பாயத் தொடங்கினார்.

முற்றுகைப் போராட்டம் நடத்திய சத்துணவுப் பணியாளர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.




கோட்டை முற்றுகைப் போராட்டத்தையொட்டி, பல்வேறு பகுதிகளிலிருந்து பேருந்துகளிலும் வேன்களிலும் சென்னைக்கு வந்த சத்துணவு ஊழியர்கள் 3,500க்கும் மேற்பட்டோர் எல்லையிலேயே தடுக்கப்பட்டு இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டனர். இந்த அடக்குமுறைக் கெடுபிடிகளைத் தாண்டி தலைமைச் செயலக வாயிலில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீசார் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். தமிழகம் முழுவதும் முன்னணியாளர்கள் ஏறத்தாழ 30,000 பேர் கைது செய்யப்பட்டனர். போராட்டத்தை

வாழ்த்தச் சென்ற அரசு ஊழியர் சங்க நிர் வாகிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்ட அங்கன்வாடி மற்றும் சத்துணவுப் பணியாளர்களின் சங் கத்தைச் சேர்ந்த 27 மாநில நிர்வாகிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டு, 42 பேர் தற் காலிகப் பணிநீக்கம் செய்யப்பட் டுள்ளனர்.



'அஞ்சா நெஞ்சன்' அழகிரியின் அடாவடிகளை அம்பலப்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்ட தினபூமி நாளேட்டின் ஆசிரியர் மணிமாறன் மற்றும் அவரது மகன்.

இப்போராட்டத்துக்குச் சற்று முன்ன தாக, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடந்த டாஸ்மாக் ஊழியர் போராட்டமும் இதே முறையில் கடுமையாக ஒடுக்கப்பட்டது. தமிழகத்தின் அரசு சாராயக் கடைகளில் (டாஸ்மாக்) பணியாற்றும் 34 ஆயிரத்துக் கும் மேற்பட்ட ஊழியர்களுக்குக் கடந்த 7 ஆண்டுகளாக ரூ.2100 முதல் 2800 வரை தான் ஊதியம் வழங்கப்படுகிறது. பல முறை அரசிடம் முறையிட்டும் அசைந்து கொடுக்காத தால் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்க்கட்சிகளின் தொழிற்சங்கங்கள் சட்டமுறைப்படி வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்தன. முன்னணியாளர்களைப் போராட்டத்தில் பங்கேற்கவோ அணிதிரட்டவோ விடா மல் பிடித்து வைத்துக் கொண்டும், இதர பணியாளர் களை மிரட்டி கட்டாயமாகக் கடையைத் திறக்க வைத் தும், போலீசு பாதுகாப்புடன் சரக்கு விற்பனை செய்யப் பட்டு அப்போராட்டம் ஒடுக்கப்பட்டது.

## கோட்டையை முற்றுகையிடுவது குற்றமா?

''கம்யூனிஸ்டுகள் நடத்தும் கிளர்ச்சி எதுவாயினும் அதற்கு ஒரு போர்க்கள முத்திரை குத்தாமல் இருக்க மாட்டார்கள். முதலில் ஊர்வலம் என்பார்கள். பிறகு கண்டன ஆர்ப்பாட்டம் என்பார்கள். அதனைத் தொடர்ந்து தலைமைச் செயலக முற்றுகை என்பார்கள். அவர்கள் வைத்த கொள்ளிதான் சில மாநிலங்களில் மாவோயிஸ்டு தாக்குதல், அராஜகம், உயிர்ப்பலிகள் என்ற அளவுக்குக் கொழுந்துவிட்டு எரிகிற காட்சியைப் பார்க்கிறோம். அரசுக்குச் சிக்கல் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகப் போர்முனைக்கு வாருங்கள் என்று தி.மு.க.வோ தி.க.வோ ஒருபோதும் மக்களைத் திரட் டியதில்லை. எந்தப் பிரச்சினைக்காகப் போராட்டம் நடத்தினாலும், அதற்கான கிளர்ச்சியை அமைதியான முறையில், அறவழியில் நடத்திப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள்'' என்கிறார் கருணாநிதி.

'அஞ்சா நெஞ்சன்' அழகிரி மதுரையில் நடத்தும் கட் டப்பஞ்சாயத்துக்கள் எல்லாம் அறவழிதானா? தி.மு.க. மூத்த தலைவரான தா.கிருட்டிணன் வெட்டிக் கொல் லப்பட்டாரே, அது அமைதி வழியா? மதுரையில் தின கரன் நாளேட்டின் அலுவலகத்தில் போலீசு அதிகாரிகள் முன்னிலையில் அட்டாக் பாண்டி தாக்குதல் நடத்தி 3 ஊழியர்களைக் கொன்றொழித்ததும்கூட அறவழியா? அதனால்தான் நீதிமன்றம் அந்த 'மகாத்மா'வை விடு தலை செய்துவிட்டதா?

பதவிப் பட்டியலைக் கையிலே வைத்துக் கொண்டு குடும்பத்தோடு டெல்லிக்குப் படையெடுத்து முற்றுகை யிட்டாரே, கருணாநிதி? பணி நிரந்தரம் கேட்டுக் கோட் டையைச் சத்துணவுப் பணியாளர்கள் முற்றுகையிடுவ துதான் குற்றமா? சன் டிவி, கலைஞர் டிவி, கேபிள் தொலைக்காட்சி, திரையரங்குகள், சினிமா தயாரிப்புக் கம்பெனிகள், சிமெண்டு - சாராயக் கம்பெனிகள், வீட்டுமனைத் தொழில், இத்தனையும் போதாதென அமைச்சர் பதவிகள் - எனத் தமிழகத்தையே கருணாநி தியின் வம்சம் முற்றுகையிட்டிருக்கிறது. சத்துணவுப் பணியாளர்கள் கோட்டையை முற்றுகையிடுவதுதான் குற்றமாம்!

நாடாளுமன்றத்தில் வாய்திறந்து பேசாத அழகிரிக்கு முழுச் சம்பளம். ஏனென்றால், அவர் முழுநேரப் பணி யாளர்! நாள் முழுக்க புகை மூட்டத்தின் நடுவே அடுப்பு ஊதும் சத்துணவுப் பணியாளருக்கு அரைச் சம்பளம், தொகுப்பூதியம். ஏனென்றால், இவர்கள் பகுதிநேரப் பணியாளர்கள்!

## போராடினாலும் குற்றம் வாய்திறந்தாலும் குற்றம்

இத்தகைய சாமானிய மக்கள், தி.மு.க.வின் பொற் கால ஆட்சியில் சென்னை நகரிலிருந்து விரட்டப்படு கிறார்கள். சிங்காரச் சென்னையை மேலும் அழகுபடுத் துவது என்ற பெயரில், கூவம் - அடையாறு கரையோரக் குடிசைகள் இடித்துத் தள்ளப்படுகின்றன. இதை எதிர்த்து வாய் திறக்கக்கூடாதாம். ஏனென்றால், இது தமி ழகத்தின் வளர்ச்சிக்கானதாம்.

சொத்துக்களை ஆக்கிரமித்தல், காலி செய்யுமாறு மிரட்டுதல், ஆட்களைக் கடத்திப் பணம் பறித்தல், கட் டப் பஞ்சாயத்து முதலான பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சென்னை யில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் - போலீசுத் துறை உயரதிகாரிகள் மாநாட்டில் ஆணையிடுகிறார், கருணாநிதி.

ஆனால், மலைகளையே மொட்டையடிக்கும் கிரானைட் குத்தகைதாரர்கள் அடிக்கும் கொள்ளையைத் தனது விரலசைவில் வைத்துப் பாகம் பிரித்துக் கொள்கிற 'அஞ்சாநெஞ்சன்' அழகிரியை மதுரையிலேயே அம்பலப்படுத்திய ''தினபூமி'' நாளேட்டின் ஆசிரியரையும் அவரது மகனையும் கைது செய்து பொய்வழக்குப் போட்டு மிரட்டுகிறது, தி.மு.க. அரசு.

குடியாத்தம் நகரில் மேல் ஆலத்தூர் ரோடு, பாட்டை புறம்போக்கில் -றாண்டு காலமாகக் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் இஸ்லாமியர் என 36 குடும்பங்களின் வீடுகளை கடந்த ஏப்ரல் மாதத்தில் ஆளும் கட்சி ரியல் எஸ்டேட் கும்பல் சமூக விரோதிகளுடன் வந்து சட்டவிரோதமாக இடித்துத் தள்ளி, குடியிருப்பவர்களைக் கடுமையாகத் தாக்கி, அந்த இடத்தை வளைத்து வேலி போட்டுக் கொண்டுள்ளது.



நில ஆக்கிரமிப்புக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டி சி.பி.எம். கட்சி எம்.எல்.ஏ. லதா தலைமையில் நடந்த போராட்டம்.

இந்த அநியாயத்தை எதிர்த்து, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சி.பி.எம். கட்சி தலைமையில் பாதிக்கப்பட்ட மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டத்தை நடத்தியபோது, இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்களையும் முன்னணியாளர்களையும் தாக்கி, கைது செய்து சிறையிலடைத்துள்ளது, கருணாநிதி அரசு. சி.பி.எம். கட்சியின் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினரான லதா, மொசைக் செல்வம் என்ற ரியல் எஸ்டேட் அதிபரை மிரட்டி 20 இலட்ச ரூபாய் கேட்டதாகப் பொய்ப்புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

கருணாநிதியின் ஆட்சியில் அநியாயத்துக்கு எதிராகப் போராடினாலும் வாய்திறந்தாலும்கூடக் குற்றம். கருணாநிதி அரசை விமர்சித்த தா.பாண்டியன், பழ.கருப்பையா வீடுகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் சிங்கள இனவெறி அரசின் அட்டூழியத்தைக் கண்டித்துப் பேசிய நாம் தமிழர் இயக்கத்தின் தலைவரான இயக்குநர் சீமான், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் பிணையில் வெளிவர இயலாத சிறைத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இலங்கை அரசுக்கு எதிராகப் பேசினால், சட்டம்-ஒழுங்கு தன் கடமையைச் செய்யும் என்று தி.மு.க. அமைச்சர் எச்சரிக்கிறார்.

### அருகதையற்ற மார்க்சிஸ்டுகளின் ஆகாத வழி

''மே.வங்கத்தில் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரம் செய்யாமல் இங்கே மட்டும் நிரந்தரம் செய்யக் கோருவது ஏன்? அங்கே சத்துணவு, ரேஷன் கடைகளைத் தனியாரிடம் கொடுத்துவிட்டு, இங்கு போராட்டத்தைத் தூண்டுவது ஏன்?'' என்று மார்க்சிஸ்டுகளை மடக்குகிறார் கருணாநிதி. ''ஜெயலலிதாவின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்கள், இப்போது வாய்மூடி கிடப்பது ஏன்? சிறுதாவூர் சீமாட்டியை முதல்வராக்குவதுதான் உங்கள் நோக்கம்'' என்று மார்க்சிஸ்டுகளுக்கு இப்போராட்டங்களைத் தலைமையேற்று நடத்த அருகதையில்லை என்று சாடுகிறார்.

ஓட்டுக்கும் சீட்டுக்கும் பாசிச ஜெயலலிதாவின் காலடியில் கிடப்பதாலும், தாங்கள் ஆளும் மே.வங்கம் மற்றும் கேரள மாநிலங்களில் தனியார்மய-தாராளமயமாக்கலை விசுவாசமாகச் செயல்படுத்தி வருவதாலும் கருணாநிதியின் இந்தக் கேள்விகளுக்கு மார்க்சிஸ்டுகளால் வாய்திறக்க முடியவில்லை. மாவோயிஸ்டுகளுக்கு எதிராகத் தாங்கள் போராடி வருவதாகவும், சத்துணவு ஊழியர்களின் போராட்டத்தைத் திசைதிருப்ப வேண்டாம் என்றும் சி.பி.எம். கட்சி அறிக்கை விட்டு அடங்கி விட்டது. இதுதான் கருணாநிதியின் கேள்விகளுக்கு மார்க்சிஸ்டுகளின் பதிலடி. கருணாநிதி உபதேசிக்கும் அறவழிக்கு மாற்றாக சி.பி.எம். வைக்கும் ஆகாத வழி இதுதான். மார்க்சிஸ்டுகளை நம்பி போராட்டத்தில் இறங்கிய சத்துணவு ஊழியர்களோ அடக்குமுறைக்கும் பழிவாங்கலுக்கும் ஆளாகி அவமானத்தால் துடிக்கிறார்கள்.

தி.மு.க. அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத அடக்குமுறைகள் அடுத்தடுத்து அம்பலமாகியுள்ள போதிலும், பிழைப்புவாதத்திலும் சந்தர்ப்பவாதத்திலும் மூழ்கிக் கிடப்பதால் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து எதிர்க்கட்சிகளும் இவற்றுக்கு எதிராக மக்களைத் திரட்டி எந்தவொரு அரசியல் போராட்டத்தையும் நடத்த முடியவில்லை. கண்டன அறிக்கைகள், அடையாள எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மேல் அவை முன்னேறுவதுமில்லை. எதிர்க்கட்சிகளின் செயலற்ற தன்மையால், ஒருபுறம் இலவசத் திட்டங்கள் மறுபுறம் அடக்குமுறை என கருணாநிதியின் குடும்ப ஆட்சி கேள்விமுறையற்று ஆதிக்கத்தை நிறுவிக் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறது.

● மனோகரன்

## போபால்:

# கொலைகார 'டௌ'-வே வெளியேறு!

### – புரட்சிகர அமைப்புகளின் தொடரும் இயக்கமும் பிரச்சாரமும்

''நாபாம்'' - தீக்குண்டு, ''ஏஜெண்ட் ஆரஞ்ச்'' போன்ற இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் உலக முன்னணி நிறுவனம் ''டௌ கெமிக்கல்ஸ்''. அதன் நாசகார ஆயுத உற்பத்திக்கு எதிராக அமெரிக்கா உட்பட உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் மக்கள் போராடுகிறார்கள். குறிப்பாக, வியத்நாம் போரில் பயன்படுத்தப்பட்ட பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்ததும் டௌ கெமிக்கல்ஸ் நிறுவனம் தான்.

1984 போபால் நச்சு வாயுப் படுகொலைகளுக்குக் காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்தை, உலகம் முழுவதுமுள்ள அதன் ஆலைகளோடு டௌ கெமிக்கல்ஸ் வாங்கிவிட்டது. பிற நாடுகளில் யூனியன் கார்பைடு ஆலைகளின் விபத்து மற்றும் பிற கட்டுப்பாடுகளை ஒப்புக் கொண்டுள்ள டௌ



திருச்சியில்...

கெமிக்கல்ஸ், நமது நாட்டில் மட்டும் போபால் படுகொலைகளுக்கான நட்டஈடு வழங்கவும் எஞ்சியுள்ள நச்சுப் பொருட்களை போபால் ஆலையிலிருந்து அகற்றவும் பொறுப்பேற்க அடாவடியாக மறுக்கிறது. இருந்தாலும் தொடர்ந்து நமது நாட்டில் முதலீடு செய்யும்படி சோனியா - மன்மோகன் - சிதம்பரம் கும்பல் அழைப்பதோடு, போபால் விவகாரத்தில் டௌ கெமிக்கல்சின் அடாவடிக்குத் துணை போகிறது. இதையொட்டி சென்னையில் ஆக. 15-இல் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பு.மா.இ.மு. மற்றும் பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் ''கொலைகார டௌ-வே வெளியேறு'' என்ற முழக்கத்துடன் முற்றுகைப் போராட்டம் நடத்தின. இதன் தொடர்ச்சியாக தமிழகமெங்கும் பொதுக் கூட்டங்களை புரட்சிகர அமைப்புகள் நடத்தியுள்ளன.

**திருச்சியில்...**

மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக செப்.16 அன்று திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் பழனிச்சாமி தலைமையில் தோழர் ராஜா கண்டன உரை, தோழர் துரை.சண்முகம் சிறப்புரை மற்றும் ம.க.இ.க. மையக்கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்க மக்களின் பேராதரவு-வரவேற்புடன் இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது.

**விழுப்புரத்தில்...**

விழுப்பும் மாவட்ட புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும், விவசாயிகள் விடுதலை முன்னணியும் இணைந்து, விழுப்புரம் இரயில் நிலையம் சந்திப்பில் புரட்சிகர கலைநிகழ்ச்சியோடு பொதுக்கூட்டம் நடத்தின. முன்னதாக பேருந்துநிலையம், கடைவீதி, குடியிருப்புகள் என்று விழுப்புரம் நகரம் முழுவதும் வீச்சான பிரச்சாரமும், நிதி திரட்டுதலும் பல பிரிவு மக்களின் வரவேற்பு-ஆதரவுடன் நடந்தன. தோழர் அம்பேத்கார் கண்டன உரை, தோழர் காளியப்பன் சிறப்புரை மற்றும் ம.க.இ.க. மையக் கலைக்குழு புரட்சிகர கலைநிகழ்ச்சியுடன் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு -றுக்கணக்கானோர் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

**புதுவையில்...**

புதுச்சேரி தொழிற்பேட்டைப் பகுதியான திருப்புவனையில் ஆக. 30 அன்று போபால் நச்சுவாயு படுகொலைக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டமும் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் பு.ஜ.தொ.மு. சார்பாக நடைபெற்றது. தோழர் பழனிச்சாமி தலைமை தாங்க தோழர்கள் அய்யனார், கலை மற்றும் காளியப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். வணிகர்களும், தொழிலாளர்களும் திரண்டு ஆதரவு தெரிவித்தனர். இது புரட்சிகர அமைப்புக்கும் அரசியலுக்கும் நம்பிக்கையையும் தருவதாக அமைந்தது.

**உசிலையில்...**

செப். 9 அன்று, உசிலையில் பெரும் பொதுக்கூட்டமும் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன. தோழர் சந்திரபோசு தலைமையில் தோழர் குருசாமி துவக்க உரை மற்றும் தோழர் கதிரவனின் சிறப்புரையுடன் -றுக்கணக்கானோர் கலந்து கொண்ட பொதுக்கூட்டதில் போபால் நச்சுவாயு கோரக் கொலைகள், 26 ஆண்டுகளாகியும் அதற்கு நீதி மறுக்கப்படுவது, ''டௌ கெமிக்கல்ஸ்'' போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் தொடரும் கொலை-கொள்ளை ஆகியவை விளக்கப்பட்டன. புதிய ஜனநாயகப் புரட்சி என்ற மாற்று முன்வைக்கப்பட்டது. ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் போபால் மக்களின் துயரம் என்ற நாடகமும் மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இவை தவிர, மானாமதுரை, கீழச்செவல்பட்டி, சிவகிரி, உடுமலை, கம்பம் ஆகிய ஊர்களிலும் மக்களின் பேராதரவோடு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.

*அன்பார்ந்த வாசகத் தோழர்களே,*

*இந்த இதழோடு உங்களது ''புதிய ஜனநாயகம்'' 25-ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த கால் -ற்றாண்டு காலமாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவரப் பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும், புதிய வாசகர்களிடம் புரட்சிகர அரசியலைக் கொண்டு சென்று விற்பனையை விரிவுபடுத்திய முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*-ஆசிரியர் குழு*

## நகரமயமாகும் தமிழகம்: 2

# நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சல்

### இலவசத் திட்டங்களின் பேரிரைச்சல்; நகரமயமாக்கத்தின் ஒளிவெள்ளம் – இவற்றின் பின்னே சத்தமின்றிக் கொன்றொழிக்கப்படுகிறது தமிழகத்தின் விவசாயம்.

இந்தியத் தரகு முதலாளிகள் சங்கங்களில் ஒன்றான 'இந்தியத் தொழில் கூட்டமைப்பு' (Confederation of Indian Industry) '2025-இல் தமிழகம்' - (Tamilnadu Vision 2025) என்றொரு அறிக்கையை 2008-இல் வெளியிட்டிருக்கிறது. பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் (Price Water Coopers) என்ற சர்வதேச ஆலோசனை நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டிருக்கும் அந்த அறிக்கை, வரவிருக்கும் ஆண்டுகளில் தமிழகத்தின் பொருளாதாரம் எந்தத் திசையில் செல்லவேண்டும் என்பது குறித்த பார்வையையும் இலக்குகளையும் முன்வைத்திருக்கிறது.

1973 முதல் அமல்படுத்தப்பட்ட 'தீவிர சோசலிச'க் கொள்கைகள், 1990-களின் துவக்கத்தில் விதைக்கப்பட்ட தாராளமயக் கொள்கைகள் ஆகியவற்றைக் கடந்து, ஒரு புரட்சிகரமான காலக் கட்டத்தின் வாயிலில் தமிழகம் நின்று கொண்டிருப்பதாகக் கூறுகிறது, அந்த அறிக்கை. அதிவேக நகரமயமாக்கம், கல்வி, ஒப்பீட்டளவில் செயல்திறன் வாய்ந்த உள்கட்டுமானங்கள் ஆகியவையே தமிழகப் பொருளாதாரத்தின் வலிமைகள் என்று கூறும் அந்த அறிக்கை, தமிழக மக்களின் கனவை நிறைவேற்றுவதற்கு, படிப்படியான மெதுவான மாற்றம் என்கிற நமது கடந்த கால அணுகுமுறை பொருத்தமற்றது என்பதை வலியுறுத்துகிறது.

அடுத்த 20 ஆண்டுகளில் நடைபெறவிருக்கும் மாற்றங்களின் வீச்சும், அவற்றின் வேகமும் நாம் முன்னெப்போதும் கண்டிராததாக இருக்கப் போகின்றன என்று கூறும் இந்த அறிக்கை, 2025-இல் நாம் அடைய வேண்டிய இலக்குகளைத் துறை வாரியாகப் பட்டியலிட்டுக் கூறுகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே சுருக்கித் தருகிறோம்.

''தற்போதைய சென்னை மாநகரத்தைச் சுற்றிலும் ஒரு மீப்பெருநகரப் பிராந்தியம் (Mega urban Region) உருவாக்கப்பட வேண்டும். சுமார் 5000 சதுர கி.மீ பரப்பளவு கொண்டதாகவும், மரக்காணம்,அரக்கோணம், புலிகாட் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கியதுமாக அது அமையவேண்டும். கோவை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய பெருநகரங்கள் தற்போதைய சென்னைக்கு இணையான மாநகரங்களாக மாற்றப்பட வேண்டும். தமிழகத்தின் 24 முக்கிய நகரங்களின் தரமும் உயர்த்தப்பட்டு, அவற்றுடன் தாலுகா தலைநகரங்கள் நான்கு வழிச்சாலைகள் மூலம் இணைக்கப்பட வேண்டும். இந்த 24 நகரங்களும் நான்கு பெருநகரங்களுடன் ஆறு வழி மற்றும் எட்டு வழிச்சாலைகள் மூலம் இணைக்கப்பட வேண்டும்.

சுருங்கக் கூறின், கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு 13 மணி நேரமாக இருக்கும் தற்போதைய பயண நேரத்தை, 7 மணி நேரமாகக் குறைக்கும் வகையில் சாலை வசதிகள் மேம்படுத்தப் படவேண்டும். சைக்கிள் சக்கரத்தின் (ஸ்போக்ஸ்) கம்பிகள் அதன் மையத்துடன் (ஹப்) இணைக்கப்பட்டிருப்பதைப் போல கிராமப்புறங்களும், சிறுநகரங்களும் பெருநகரங்களுடன் இணைக்கப்படவேண்டும்.விமானப்போக்குவரத்து தற்போது உள்ளதைப் போல ஏழு மடங்கும், மின் உற்பத்தி பதினோரு மடங்கும் அதிகரிக்கப்படவேண்டும்.''

''தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Gross state domestic product) சேவைத்துறை மற்றும் தொழில்துறையின் பங்கு 93% ஆக உயர்த்தப்படவேண்டும். தற்போது (2008) 50 சதவீதமாக இருக்கும் நகர்ப்புற மக்கள் தொகை, 2025 இல் 75% ஆக உயர்த்தப்பட வேண்டும். 2025-ஆம் ஆண்டில் விவசாயத்தை சார்ந்திருக்கும் கிராமப்புற மக்கள் தொகையை 25% ஆகக் குறைக்க வேண்டுமானால், நகரமயமாவதை தற்போதுள்ளதைக் காட்டிலும் 18 மடங்கு வேகத்தில் தீவிரப்படுத்த வேண்டும்.''

''2025-இல் தானியங்கி, தோல், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை, பிற ஆலை உற்

சென்னை நகரை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட கிண்டி-கத்திப்பாரா மேம்பாலம்.



பத்தித் தொழில்கள், கட்டுமானத்துறை, ஐ.டி. மற்றும் பிற சேவைத்துறைகளே வேலை வாய்ப்பை வழங்கும் முதன்மையான துறைகளாக இருக்கும். நானோ தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம், மருந்து உற்பத்தி, உணவு பதப்படுத்தும் தொழில் ஆகியவற்றை மையப்படுத்தித் தொழில்துறை வளர்க்கப்படவேண்டும். கால்நடை வளர்ப்பு, காய்-கனி-பூ ஆகியவற்றை மையப்படுத்திய தோட்டத்தொழில் போன்ற அதிகம் தண்ணீர் தேவைப்படாத உற்பத்திகளை நோக்கியும், மதிப்புக் கூட்டும் விவசாயத்தை நோக்கியும் (value added agriculture) விவசாய உற்பத்தி மாற்றியமைக்கப் பட வேண்டும்.

நகர்ப்புறத்தில் சில்லறை வணிக நிறுவனங்கள் காண விருக்கும் வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு (அதற்குப் பொருத்தமான விதத்தில்) அரசின் விவசாயக் கொள்கை அமையவேண்டும். (இதனை ஒட்டி) ஒப்பந்த விவசாயத்தின் நிறை-குறைகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப் படவேண்டும்.''

''கல்வித்துறையைப் பொருத்தமட்டில், வெற்றி பெற்ற முதலாளிகளின் கதைகளும் அனுபவங்களும் (உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் வரலாறு) மேல்நிலைப் பள்ளி பாடத்திட்டத்தில் சேர்க்கப்படுவதுடன், தொழில் முனைவராவது குறித்த (முதலாளியாவது குறித்த) தனி பட்டப்படிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். தச்சுவேலை, குழாய் ரிப்பேர் போன்ற செயல்முறைக் கல்விக்கான பாடத்திட்டங்கள் மேல்நிலைப்பள்ளிகளில் அறிமுகப்படுத்தப் படவேண்டும். ஆண்டொன்றுக்கு 10,000 (தற்போது 3000) மருத்துவர்களை உருவாக்கும் வகையில் 120 மருத்துவக் கல்லூரிகளைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டும். இதன் பொருட்டு மருத்துவப் படிப்பு மற்றும் செவிலியர் படிப்பிற்கான தனியார் கல்லூரிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.''

''தற்போது ஒரு புதிய தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள், உரிமங்கள், தடையில்லாச் சான்றிதழ்கள் போன்றவற்றைப் பல்வேறு துறைகளிடமிருந்து பெற்று ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்குச் சராசரியாக 41 நாட்கள் ஆகின்றன. ஒரு சொத்தைப் பதிவு செய்வதற்கு 61 நாட்கள் ஆகின்றன. இவற்றை முறையே இரண்டு நாட்களாகவும், ஒரு நாளாகவும் குறைப்பதன் மூலம் அந்நிய மூலதனங்களை ஈர்க்கும் ஆசியாவின் 5 முக்கிய மையங்களில் ஒன்றாகத் தமிழகத்தை மாற்ற முடியும்.''

''அரசு நிர்வாகத்தின் செயல்திறனை இவ்வாறு அதிகரிக்க வேண்டுமானால், அரசு நிர்வாகப் பணிகளில் அவுட் சோர்சிங் முறையை அறிமுகப்படுத்த வேண்டும். அரசு நிர்வாகத்தில் மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலும், உள்கட்டுமானத் துறையிலும் தனியார் துறையுடன் கூட்டு அமைத்துக் கொண்டால் மட்டுமே இந்தக் கட்டுமானங்களை உருவாக்குவதற்கான மூலதனத்தை அரசாங்கத்தால் பெறமுடியும்'' என்றும் வலியுறுத்துகிறது, அந்த அறிக்கை.




சென்னையில் அமைக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக, சைதாப்பேட்டையில் அடையாறு கரையோரமிருந்த குடிசைகள் இடித்துத் தள்ளப்படுகின்றன.

'உலகத்தமிழர் ஒற்றுமை'யின் அவசியம் குறித்தும் இந்த அறிக்கை பேசுகிறது. தமிழ்ப் பண்பாடு மூலமாக வெளிநாட்டில் குடியேறியிருக்கும் 40 இலட்சம் தமிழர்களை ஒன்றிணைக்க 'உலகத் தமிழ் மையம்' ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும், இணையத்தில் தமிழின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்றும், உலகத் தமிழர்களின் சாதனைகளை அங்கீகரித்து, அவர்களைத் தமிழகத்தின் வளர்ச்சியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும், இந்திய அரசு வழங்குகின்ற பத்மஸ்ரீ, பத்மவிபூஷண் போன்ற பட்டங்களுக்கு இணையான 'தமிழ் விருதுகளை' உருவாக்கி, இத்தகைய சாதனைத் தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் கூறுகிறது இவ்வறிக்கை. சென்னை சங்கமம் போன்ற விழாக்களை மாநிலம் முழுவதும் உள்ள நகரங்களில் நடத்த வேண்டும் என்பதையும் இந்த அறிக்கை தனது செயல்திட்டமாக முன்வைக்கிறது.

'திராவிட ஒற்றுமையை'யும் இவ்வறிக்கை விட்டு வைக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சென்னை ராஜதானி, தென்னிந்தியா முழுவதன் தலைநகரமாக இருந்ததையும், தென் மாநிலங்களின் வரலாறு அதனுடன் பிணைந்திருப்பதையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அம்மாநில முதலாளிகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்குவதன் மூலம் அவர்களை ஈர்க்க வேண்டும் என்றும், கேரளத்தின் எல்லையில் இருக்கும் கோவை, கர்நாடக எல்லையில் இருக்கும் ஓசூர், ஆந்திர எல்லையில் இருக்கும் சென்னை ஆகிய நகரங்களை முக்கியமான வர்த்தக மையங்களாக உருவாக்குவதன் மூலம் தென்னிந்தியாவின் மையமாகத் தமிழகத்தை மாற்றவேண்டும் என்றும் கூறுகிறது இவ்வறிக்கை.

•••

நகரமயமாக்கத்திற்கும் மறுகாலனியாக்க கொள்கைகளுக்கும் இடையிலான உறவை, அதாவது, தமிழகத்தில் நாம் காணும் நகரமயமாக்கம் என்பது தனியார்மய,

தாராளமயக் கொள்கைகளுடைய அமலாக்கத்தின் விளைவே என்பதை இந்த அறிக்கையின் வாயிலாகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த அறிக்கை முன்வைக்கும் இலக்குகளும், மறுகாலனியாக்க கொள் கைகளை அமல்படுத்த அது பரிந்துரைக்கும் வேகமும் சாத்தியமானவைதானா என்ற பரிசீலனையைக் காட்டிலும், இதுதான் தமிழகத்தின் எதிர்காலம் குறித்த தரகு முதலாளி வர்க்கத்தின் உள்ளக்கிடக்கை என்பதை நாம் புரிந்து கொள்வதே முக்கியமானது.

உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள், தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்தளிப்பதற்கு பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ், மெக்கின்சி போன்ற சர்வதேச ஆலோசனை நிறுவனங்களைத்தான் அமர்த்திக் கொள்கின்றன. அவர்களது ஆய்வுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில்தான், பின்தங்கிய நாடுகளில் தனியார் மய-தாராளமயக் கொள்கைகள் அனைத்தும் செயல்வடிவம் பெறுகின்றன. அத்துடன் கட்டுமான மறுசீரமைப்புக் கொள்கைகளின் கீழ், இத்தகைய சர்வதேச ஆலோசனை நிறுவனங்களும், சி.ஐ.ஐ போன்ற தரகு முதலாளிகளின் சங்கங்களும் தற்போது அரசு அதிகாரத்தின் அங்கங்களாகவே மாறியிருக்கின்றன. எனவே, 2025-ஆம் ஆண்டுவரை தமிழகத்தை ஆளக்கூடிய கட்சி எதுவாக இருந்தாலும், தமிழகத்தின் செல்வழி இதுவாகத்தான் இருக்கும்.

தமிழகத்தில் நடைபெற்று வரும் நகரமயமாக்கம் என்பது தன்னியல்பானதொரு நிகழ்ச்சிப்போக்கோ, விவசாயத்தின் வளர்ச்சியில் அரசு உரிய கவனம் செலுத்தாததன் தவிர்க்கவியலாத பின்விளைவோ அல்ல. அவ்வாறு கருதும் சில அறிஞர்கள்தான், அரசுக்கு புத்திமதி கூறி நாளேடுகளில் கட்டுரை எழுதுகிறார்கள். விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குகிறார்கள். புதிய பொருளாதாரக் கொள்கைகளை அமல்படுத்துகின்ற அதே நேரத்தில், விவசாயத்தையும் காப்பாற்றும் வகையில் திட்டம் வகுக்க முடியும் என்ற கற்பனைகளை விதைக்கிறார்கள். மாறாக, நகரமயமாக்கமும் விவசாயத்தின் அழிவும் மறுகாலனியாக்கக் கொள்கையினால் திட்டமிட்டே முன் தள்ளப்படுபவையாகும். கிராமப்புற மக்கட்தொகையை 25% ஆகக் குறைக்கவேண்டும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 93% நகரம் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்று தரகு முதலாளி வர்க்கம் முன்வைத்திருக்கும் இலக்குகள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

தனியார்மய, தாராளமய நடவடிக்கைகளுக்கு மக்கள் காட்டும் எதிர்ப்பைத் தேர்தலில் அறுவடை செய்வதற்காக ஓட்டுக்கட்சிகள் அவ்வப்போது நடத்தும் போராட்டங்கள் எதுவும் இந்தச் செல்வழியை மாற்றிவிடப் போவதில்லை. ஸ்ரீபெரும்புதூர் விமானநிலைய விரிவாக்கம், மதுரவாயல் சாலைத் திட்டம் போன்றவற்றுக்கு விவசாயிகளும் குடிசைவாழ் மக்களும் எதிர்ப்பு தெரிவிப்பதனால், அவை தொடர்பாக தி.மு.க. அரசை எதிர்த்த ஆர்ப்பாட்டங்களை அ.தி.மு.க. நடத்தியிருக்கிறது.



சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தால் பாதிக்கப்படும் மக்கள், அத்திட்டத்தை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

தி.மு.க. வும் கூட, ஃபோர்டு மோட்டார் நிறுவனத்துக்கு ஜெயலலிதா அரசு வழங்கிய சலுகைகளை முன்னர் அம்பலப்படுத்தியது. ஆட்சிக்கு வந்த பின்னர் அதை விட அதிகமான சலுகைகளை ஹூண்டாய், மகிந்திரா உள்ளிட்ட பல ஆட்டோமொபைல் நிறுவனங்களுக்கும் தி.மு.க. அரசு வழங்கியது. தற்போது அ.தி.மு.க. காட்டி வரும் எதிர்ப்பும் அத்தகையதே.

அ.தி.மு.க., தி.மு.க. என 1990-களிலிருந்து மாறி மாறி ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதிலும் தனியார்மய-தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்துவதில் இக்கட்சிகளிடைய இருக்கும் ஒற்றுமையைத்தான் தமிழகத்தின் சாதகமான அம்சமாக தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் மதிப்பிடுகின்றனர். இவ்விரு கட்சிகளில் தி.மு.க., குறிப்பாக கருணாநிதியின் குடும்பம் ஆளும் வர்க்கத்தின் அங்கமாகவே வளர்ச்சியடைந்திருப்பதால், சி.ஐ.ஐ முன்வைத்திருக்கும் இந்த அறிக்கையை, கழகம் தனது சொந்தக் கொள்கை அறிக்கையாகவே கருதும் என்பதில் ஐயமில்லை. மாறிவிட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக, 'உலகத்தமிழின ஒற்றுமை', 'தமிழ்ப் பண்பாடு', 'திராவிட ஒற்றுமை' போன்ற கழகத்தின் மூல முழக்கங்களைக் கைவிடத் தேவையில்லையென்றும், புதிய உள்ளடக்கத்தைப் புகுத்துவதன் மூலம் அவற்றைப் புளி போட்டு விளக்கி மீண்டும் பயன்படுத்திக் கொள்ள இயலும் என்றும் தி.மு.க.வுக்குச் சூசகமாகத் தெரிவித்திருக்கிறது, சி.ஐ.ஐயின் இந்த அறிக்கை.

2008-இல் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை கூறும் திசையில்தான் தி.மு.க. அரசு தமிழகத்தைக் கொண்டு செல்கிறதா? ஒரு ரூபாய் அரிசியும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும் கொடுத்து ஏழை மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிடலாம். ஆனால், முதலாளிகளிடம் அப்படிச் சான்றிதழ் பெற்றுவிட முடியாது. இந்தியத் தரகுமுதலாளிகள் சங்கத்தின் தமிழகக் கிளை 2010-இல் வழங்கியுள்ள 'சாதகமான தமிழகம்' என்ற சான்றிதழ், 2025-ஆம் ஆண்டுக்கு அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்குகளை நோக்கித்தான் தமிழகம் துரத்தப்படுகிறது என்பதற்கு நிரூபணமாக இருக்கிறது.

**(தொடரும்)** ● மருதையன்

# அநீதியைத் தட்டி கேட்ட மாணவன் படுகொலை! குற்றவாளிகளைப் பாதுகாக்கிறது போலீசு!

பெண்ணாடம் நகருக்குத் தெற்கே அமைந்துள்ள அரசினர் ஆண்கள் ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கிப் பத்தாம் வகுப்பு படித்து வந்த பாரத் என்ற மாணவன் 2.9.2010 அன்று நண்பகல் 12 மணியளவில் அவ்விடுதியில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இச்செய்தியைக் கேள்விப்பட்டுப் பதறித்துடித்து வந்த அம்மாணவனின் பெற்றோரிடம் அவ்விடுதியில் சமையல் வேலை செய்யும் ராமச்சந்திரனும் செல்வராசும் மேலே பிணம் கிடப்பதாக அலட்சியமாகப் பதில் அளித்துள்ளனர். இதனையடுத்து இறந்துபோன மாணவனின் பெற்றோரும் உறவினர்களும் இம்மர்மச் சாவு பற்றி போலீசிடம் புகார் அளிக்கச் சென்றபொழுது, போலீசு நிலையத்தில் விடுதிக் காப்பாளர் சுந்தர்ராஜன் போலீசாரிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

ஏதோ சதி நடப்பதாக உணர்ந்துகொண்ட அம்மாணவனின் பெற்றோரும், உறவினர்களும் பாரத் இறந்துபோனதை நியாயமான முறையில் விசாரிக்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர். இதன் பிறகுதான் போலீசார் முதல் கட்ட விசாரணை நடத்த விடுதிக்குச் சென்றனர். அதனைத் தொடர்ந்து அதிகாரிகள் நடத்திய சமரசப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில், பாரத்தின் சாவு சந்தேகத்திற்கிடமான மரணமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு, விடுதிக் காப்பாளரும் சமையல்காரர்களும் கைது செய்யப்பட்டனர். எனினும், அவர்கள் இரண்டே நாட்களுக்குள் பிணையில் வெளியே வந்துவிட்டனர்.

ஆறாம் வகுப்பு தொடங்கியே அவ்விடுதியில் தங்கிப் படித்து வந்த பாரத், அவ்விடுதியின் சமையல்காரர்களான செல்வராசும் ராமச்சந்திரனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு நடத்தும் ஊழலையும், மற்ற பிற சமூக விரோதச் செயல்களுக்கு விடுதியைப் பயன்படுத்துவதையும் எதிர்த்து வந்தார். இக்குற்றங்களைக் கண்டிக்க வேண்டிய விடுதிக் காப்பாளர் சுந்தர்ராஜனோ சமையல்காரர்களோடு கைகோர்த்துக் கொண்டு நியாயத்துக்காகப் போராடி வந்த பாரத்தை, சிறுவன் என்றும் பாராமல் அடித்துத் துன்புறுத்தி வந்துள்ளான். பாரத் படித்து வந்த அரசு பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்க்கும் சுந்தர்ராஜனின் உறவினரான தையல்நாயகியும் அக்கிரிமினல்கள் சார்பாக பாரத்தை அடித்தும் அவமானப்படுத்தியும் பல்வேறு விதங்களில் துன்புறுத்தியும் வந்திருக்கிறார். இந்த அடக்குமுறைகளை எதிர்கொள்ள வேண்டி அச்சிறுவன் இந்திய மாணவர் சங்கத்தை அணுகியதோடு, விடுதியில் அம்மாணவர் சங்கத்தைக் கட்டவும் முயன்றுள்ளார்.

சிறு வயதிலேயே அநீதியை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்ட பாரத் விடுதியின் ஜன்னலில் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக விடுதி ஊழியர்கள் கூறுவதை சந்தர்ப்ப சாட்சியங்கள் மறுக்கின்றன. தரையிலிருந்து ஆறரை அடி உயரத்தில் அமைந்துள்ள ஜன்னலில் 5 அடி உயரமுள்ள பாரத் இரண்டு அடி நீளமுள்ள துண்டைப் பயன்படுத்தித் தற்கொலை செய்து கொள்வது சாத்தியமா? பாரத்தின் சடலத்தின் அருகே சமையல்காரரின் துண்டு கிடந்தது எப்படி? சம்பவம் நடந்த அன்று விடுதியின் வருகைப் பதிவேட்டில் பாரத் விடுதிக்கு வராதது போலத் திருத்தப்பட்டிருந்தது ஏன்? - என்ற கேள்விகள் பாரத் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தைத்தான் வலுப்படுத்துகின்றன.

இந்நிலையில் விருத்தாசலம் வட்டத்தில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி பாரத்தின் மரணம் குறித்து முறையான நீதி விசாரணை கோரியும், குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரியும் 20.9.2010 அன்று பெண்ணாடத்தில் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பாரத்தின் தாயும், இரண்டு உறவினர்களும் கலந்துகொண்டு பேசினர்.

இதனைத் தொடர்ந்து, பாரத்தின் பெற்றோர், உறவினர்கள், பகுதித் தோழர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு எதிர்வரும் அக்.9, 10 தேதிகளில் பெண்ணாடத்திலிருந்து மாவட்டத் தலைநகர் கடலூருக்கு நீதி கேட்டு நடைபயணம் செல்லுவதென்றும், அதன் முடிவில் மாவட்ட ஆட்சியரையும், மாவட்ட போலீசு கண்காணிப்பாளரையும் சந்தித்து மனு கொடுப்பதெனவும் வி.வி.மு. தீர்மானித்திருக்கிறது. போராடாமல் நீதி கிடைக்காது என்பதற்கு இந்த வழக்கு இன்னுமொரு சான்று.




விவசாயிகள்
விடுதலை முன்னணி,
விருத்தாசலம்.

## மன்மோகன் சிங்:

# ஏகாதிபத்திய எடுபிடியா, ஏழைகளின் பிரதிநிதியா?

**ஏழைகளுக்கு ரேசனில் கூடுதலாக அரிசி தர முடியாது எனக் கூறியுள்ள மன்மோகன் சிங் யாருக்காக ஆட்சி நடத்துகிறார்?**

பட்டினியோடு போராடி வரும் ஏழைகளுக்கு அரசின் தானியக் கிடங்குகளில் கெட்டுப் போகக்கூடிய நிலையிலுள்ள உணவு தானியங்களை இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த விலையிலோ மைய அரசு வழங்க வேண்டும் எனச் சமீபத்தில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவைக் கேட்டு பிரதமர் மன்மோகன் சிங் கொதித்துப் போய்விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். உணவு மானியம் உள்ளிட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்து மானியங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக ஒழித்துக்கட்டி வரும் மன்மோகன் சிங்கிற்கு, உச்ச நீதிமன்ற உத்தரவின் மீது ஏற்பட்ட வெறுப்பு புரிந்துகொள்ளத்தக்கதுதான். ''அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிடக் கூடாது'' எனக் கூறி, நீதிபதிகளின் அத்துமீறலை இடித்துக் காட்டினார் மன்மோகன் சிங்.

''நாயும் பன்றியும் தெருவில் சுற்றலாம்; ஆனால், பஞ்சமன் தெருவில் நுழையக் கூடாது'' என்ற பார்ப்பன நீதியைப் போல, ஒரு உணவுக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார், மன்மோகன் சிங். ''உணவுக் கிடங்குகளில் நிரம்பி வழியும் தானியங்களை இந்திய எலிகளும் ஐரோப்பிய மாடுகளும் தின்னத் தருவோமே தவிர, பசியால் வாடும் இந்திய ஏழைமக்களுக்கு அதிலிருந்து ஒரு பிடிகூட எடுத்துத் தரமாட்டோம்'' என்பதுதான் அவரது கொள்கை.

மன்மோகன் சிங் சொல்லாமல் விட்டுவிட்ட இந்தக் கொள்கையை அவரது உணவு அமைச்சர் சரத் பவார் வெளிப்படையாகக் கூறினார். ''அரசு ஏற்கெனவே உணவு மானியமாக 66,000 கோடி ரூபாயைக் கொடுத்து வருகிறது. இதற்கு மேல் எப்படி இலவசமாகத் தரமுடியும்?'' இந்த உணவு மானியத்தை இந்திய எலிகளும் கடத்தல்காரப் பெருச்சாளிகளும் பங்கு போட்டுக் கொள்ளும் கதையைப் பிறகு பார்ப்போம். ஆனால், மன்மோகன் சிங் கும்பலைப் பொருத்தவரை தற்பொழுது கொடுக்கப்படும் உணவு மானியமே அதிகம் என்பதும், இதை வெட்ட வேண்டும் என்பதும்தான் கொள்கை.

மைய அரசிடம் தற்பொழுது 6 கோடி டன்னுக்கும் அதிகமாக அரிசியும், கோதுமையும் கையிருப்பில் இருக்கிறது. ''இது வழக்கமாக அரசிடம் இருக்க வேண்டிய கையிருப்பைவிட இரண்டு மடங்கு அதிகம் என்றும், இதில் 1 கோடி டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்கள் கெட்டுப்போய்க் கிடப்பதாகவும்'' சமூக நல ஆர்வலர்கள் கூறுகின்றனர். இந்திய உணவுக் கழகத்திடம் போதிய கிடங்குகள் இல்லாததால்தான், வெறும் 55,000 டன் உணவு தானியங்கள் மட்டுமே கெட்டுப் போயிருப்பதாக அரசு உச்ச நீதிமன்றத்திடம் கூறியிருக்கிறது.

எவ்வளவு டன் உணவு கெட்டுப் போயிருக்கக்கூடும் என்ற வாதப்பிரதிவாதம் ஒருபுறமிருக்கட்டும்.



> திறந்த வெளியில்
> கொட்டிக் கிடக்கும் உணவு தானியத்தை
> ஏழைகளுக்கு ரேசன் கடைகளின்
> மூலம் வழங்குவது வீண் செலவாம்;
> அதே சமயம், இதனைத்
> தனியார் கிடங்குகளில் சேமித்து வைக்க
> வாடகையைக் கொட்டி அழுவது
> ஆக்கபூர்வமான
> பொருளாதார நடவடிக்கையாம்!



> ஏழைகள் பட்டினி கிடக்கும்போழுது அரசு அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற அறநெறியெல்லாம் மன்மோகன் சிங்கிடம் கிஞ்சித்தும் கிடையாது.

யானையை வாங்கியவன் அதனை அடக்க அங்குசத்தை வாங்க மறந்துவிட்ட கதையாக, 6  கோடி டன் அளவிற்குக் கொள்முதலை நடத்தியிருக்கும் அரசு, அதனைச் சேமித்து வைக்க இந்திய உணவுக் கழகத்திடம் கிடங்குகள் இல்லை எனக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.  இப்பொழுது இதற்குத் தீர்வாக, இந்த அபரிதமான கையிருப்பைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கத் தனியார் கிடங்குகளை வாடகைக்கு எடுக்கப் போவதாக மைய அரசு கூறியிருக்கிறது.

உணவு மானியத்தைக் குறைப்பதற்காக, தானியக் கொள்முதல் செய்வதிலிருந்தும் கிடங்குகளைக் கட்டுவதிலிருந்தும் அரசு விலகிக் கொள்வது; அரசுக்குப் பதிலாக இந்நடவடிக்கைகளில் தனியாரை அனுமதிப்பது என உலக வங்கி இந்தியாவில் தனியார்மயம் புகுத்தப்பட்ட காலத்தில் இருந்தே கட்டளையிட்டு வருகிறது. ஓட்டுப் பொறுக்கும் அரசியல் காரணங்களுக்காகத் தானியக் கொள்முதலை முழுவதும் கைவிடாத அரசு, சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே தானிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவதைக் கைவிட்டதோடு, அதனைத் தனியாரிடமும் ஒப்படைத்தது.  இன்று 1 கோடி டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்கள் கெட்டுப் போய்விட்டதாகக் கூறப்படுதவற்கு இந்த உலக வங்கியின் கட்டளையும், அதனைச் சிரமேற்கொண்டு செயல்படுத்திய ஆளும் கும்பலும்தான் காரணம்.

திறந்த வெளியில் கொட்டிக் கிடக்கும் உணவு தானியத்தைப் பசியோடு போராடும் ஏழைகளுக்கு ரேசன் கடைகளின் மூலம் வழங்குவது வீண் செலவாம்; அதே சமயம், ஏழை மக்களுக்குப் பயன்படாத இந்தக் கையிருப்பைத் தனியார் கிடங்குகளில் சேமித்து வைக்க - பதுக்கி வைக்க என்றும் சொல்லலாம் - வாடகையைக் கொட்டி அழுவது ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கையாம்!

இப்படிப்பட்ட நிலைமை வரக்கூடும் என முன்னறிந்துதான் என்னவோ, மன்மோகன் சிங் அரசு மார்ச் மாதம் போட்ட பட்ஜெட்டிலேயே, தனியார் கிடங்குகளுக்கான குத்தகை கால வரம்பை உயர்த்தும் கொள்கை முடிவைத் தீர்க்க தரிசனத்துடன் எடுத்திருக்கிறது.

இந்த அபரிமிதமான கையிருப்பை, நாயிடம் சிக்கிய தேங்காயைப் போல மன்மோகன் சிங்  தனியார் கிடங்குகளில் வைத்து ஏன் பாதுகாக்க வேண்டும்?  இந்தக் கையிருப்பை முன்னரே விநியோகித்திருந்தால், அதைப் பாதுகாப்பதற்குச் செலவான பணமும் அரசுக்கு மிச்சமாகியிருக்கும்; தானியங்களும் கெட்டுப் போயிருக்காது என்ற சாதாரண உண்மை பொருளாதார அறிஞரான மன்மோகனுக்குத் தெரியாமலா போய்விட்டது?

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் செங்குத்தாக உயர்ந்துகொண்டே செல்லும் இத்தருணத்தில், மன்மோகன் சிங் தன்னிடம் உள்ள கையிருப்பை ரேசன் கடைகளின் மூலமோ அல்லது வெளிச் சந்தையின் மூலமோ புழக்கத்துக்குக் கொண்டு வந்திருந்தால், விலைவாசி உயர்வு ஓரளவு கட்டுக்குள் வந்திருக்கும். ஆனால், அரசு இப்படி சந்தையில் தலையிட்டு விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வருவதை மன்மோகன் சிங் விரும்புவதில்லை.  தமக்கு ஓட்டுப் போட்ட ஏழை மக்கள் இவ்விலையேற்றத்தால் பாதிக்கப்படுவார்களே என்பது பற்றியெல்லாம் அக்கறையில்லாமல், விலைவாசி உயர்வு அவசியமானது என்றுதான் திமிர்த்தனமாக அறிக்கை விட்டுவருகிறார், அவர்.

அரசு சந்தையில் தலையிட்டால், மளிகைப் பொருட்கள் வியாபாரத்தில் நுழைந்துள்ள ரிலையன்ஸ், பிர்லா போன்ற தரகு முதலாளிகளின் நிறுவனங்கள் விலைவாசி உயர்வைப் பயன்படுத்திக் கொண்டு அடித்துவரும் கொள்ளை இலாபம் படுத்துவிடும் என்பதாலேயே, அவரது அரசு சந்தையில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.  உச்ச நீதிமன்றம் உத்தரவை அவர் புறக்கணிப்பதற்கும் இதுதான் காரணம்.  விலைவாசியை உயர்த்துவதற்காக வியாபாரிகள் சட்டவிரோதமான பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றால், மன்மோகன் சிங் அரசோ உணவுக் கொள்முதல்/சேமிப்பு என்ற பெயரில் சட்டபூர்வமாகப் பதுக்கலை நடத்தி, வர்த்தகச் சூதாடிகளுக்கு உதவி வருகிறது.

உச்ச நீதிமன்றம் சமீபத்தில் வழங்கியுள்ள உத்தரவில், ‘‘வறுமைக் கோட்டுக்கு மேலே வாழ்பவர் என முத்திரை குத்தப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை முற்றிலுமாக



உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கி வரும் தேசிய ஆலோசனை கவுன்சில் உறுப்பினர்களுடன் சோனியாவும் மன்மோகன் சிங்கும்: காங்கிரசின் இரட்டை வேடம்.

ஒழித்துக் கட்ட வேண்டும்; அல்லது அவற்றின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைக்கும் வண்ணம் வருமான வரம்பு நிர்ணயிக்க வேண்டும்'' என்ற ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது. வெளித் தோற்றத்தில் பட்டினி கிடக்கும் ஏழைகளுக்கு ஆதரவாகப் பேசுவது போலத் தெரியும் இந்த உத்தரவு, உண்மையில் உணவு வழங்கல் கொள்கையில் உலக வங்கியின் கட்டளைகளை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதற்கு இந்த ஆலோசனையே சாட்சி. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிலுள்ள இந்த ஆலோசனையை டாக்டர் மன்மோகன் சிங் புறக்கணிக்க மாட்டார் என்று அடித்துக் கூறலாம்.

வறுமைக் கோட்டுக்கு மேலே என்ற முத்திரை குத்தப்பட்ட குடும்ப அட்டைகள் டாடா, அம்பானி குடும்பங்களுக்கா கொடுக்கப்பட்டுள்ளது? இந்தியாவிலேயே மிகப் பெரிய நகர்ப்புறச் சேரியான மும்பையில் உள்ள தாராவியில் விரல்விட்டு எண்ணக்கூடிய குடும்பங்கள் தவிர, அங்கே வசித்து வரும் பிற பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே வாழுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகளை இப்படிப் பிரிப்பது ஏழைகளைக் காவு கொள்ளும் திட்டம் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

திட்ட கமிசனும் தேசிய ஆலோசனை கவுன்சிலும் இணைந்து சமீபத்தில் நடத்திய கூட்டத்தில், ''வறுமைக் கோட்டுக்குக் கீழே/மேலே என்ற பிரிவினையின்றி அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், அரசுக்கு ஆண்டுதோறும் 1,40,000 கோடி ரூபாய் உணவு மானியமாகச் செலவாகும்; அதனால், அது நடைமுறை சாத்தியமற்றது. மேலும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்குக்கூட மாதமொன்றுக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமையைத் தவிர, வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எதையும் வழங்க முடியாது'' எனத் திட்ட கமிசன் திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

அதாவது, அரசு தனது கையிருப்பிலுள்ள தேவைக்கும் அதிகமான உணவு தானியத்தை மானிய விலையில் ஏழைகளுக்கு வழங்காது என்பது உறுதியாகிவிட்டது. பூதம் புதையலைக் காத்த கதையாக மன்மோகன் சிங் இந்தக் கையிருப்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கப் போகிறாரா அல்லது முன்னாள் பிரதமர் வாஜ்பாயி, அவரது ஆட்சியில் மக்கள் பட்டினி கிடந்த போதும் 2.8 கோடி டன் உணவுப் பொருட்களை ஐரோப்பிய மாடுகள் தின்பதற்காக ஏற்றுமதி செய்தாரே, அதைப் போலச் செய்வாரா என்ற கேள்விக்கு எதிர்காலம் பதில் சொல்லக்கூடும்.

ஏழைகள் பட்டினி கிடக்கும்பொழுது அரசு அவர்களுக்கு உதவ முன் வர வேண்டும் என்ற அறநெறியெல்லாம் மன்மோகன் சிங்கிடம் கிஞ்சித்தும் கிடையாது. இரண்டு இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதையே அலட்சியப்படுத்தி வரும் அவர், ஏழைகள் பட்டினி கிடப்பதையா ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வார்?

2010-11 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் உணவு மானியத்தில் 450 கோடி ரூபாயை வெட்டிய அவரது அரசு, பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் 5,00,000 கோடி ரூபாயை வரிச் சலுகையாக வாரி வழங்கியது. இது பாமரனுக்கு ஓரவஞ்சனையாகத் தெரியலாம். ஆனால், மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் அலுவாலியா - ப.சிதம்பரம் கும்பலைப் பொருத்தவரை, இந்தப் பாதையில் சென்றால்தான் இந்தியா உலகத் தரத்தை அடைய முடியும் என்று கருதுகிறார்கள்.

அவர்கள் தமக்கு வாக்களித்த கோடிக்கணக்கான ஏழை - எளிய மற்றும் நடுத்தர மக்களின் பிரதிநிதியாக இருந்து ஆட்சி நடத்தவில்லை. பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகள், புதுப் பணக்கார மேட்டுக்குடிக் கும்பலின் பிரதிநிதியாகத்தான் மன்மோகன் சிங் பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்.

சொல்லிக் கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் இந்தக் கும்பலின் நலனை முன்னிறுத்தித்தான் போடப்படுகின்றன. அவ்'வளர்ச்சி'த் திட்டங்கள் அடித்தட்டு மக்களின் வாழ்வை மேலும் மேலும் நாசப்படுத்தி வருவதை யாரேனும் கண்டித்தால், எதிர்த்துப் போராடினால், அவர்கள் அனைவரையும் ''வளர்ச்சிக்கு எதிரானவர்கள்'', ''மாவோயிசத் தீவிரவாதிகள்'' என முத்திரை குத்தி ஒடுக்கி வருகிறார், மன்மோகன் சிங். இப்படிப்பட்ட கும்பலிடம் உணவு மானியத்தை வெட்டக் கூடாது, ஏழை மக்களுக்கு கூடுதலாக உணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என ஆலோசனை கூறுவதெல்லாம், செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடியும்!

● செல்வம்

## கறிக்கோழி வளர்ப்பு :

# சுகுணா கொழுக்கிறது விவசாயி போண்டியாகிறான்

**கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபடும் சிறு விவசாயிகளின் நிலம், நீர், உழைப்பு என அனைத்தும் சுரண்டப்படுகிறது.**

விவசாயத்துடன் கறிக்கோழி வளர்ப்பை ஒரு துணைத்தொழிலாக மேற்கொண்டு வந்த தமிழக விவசாயிகள், கடந்த இரு மாத காலமாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களிலுள்ள கறிக்கோழி உற்பத்தி செய்யும் விவசாயிகள், இறந்த கோழிகளை சுகுணா நிறுவனத்தின் முன்பாகப் போட்டு, அந்நிறுவனத்திற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர். கடந்த ஆகஸ்ட் 24-ஆம் தேதியன்று பல்லாயிரக்கணக்கான கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகள் தமது 10 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர். ஏறத்தாழ 2 இலட்சம் விவசாயிகள் கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழகத்தில் இப்போராட்டம் தற்போது ஓய்ந்திருப்பதைப் போலத் தோன்றினாலும், அது நீறுபூத்த நெருப்பாகவே நீடிக்கிறது.

1980-களின் நடுவில் அரசின் கோழி ஆராய்ச்சி நிறுவனங்கள் கறிக்கோழி வளர்ப்பை விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தின. அரசின் கோழிக் குஞ்சு உற்பத்தி நிறுவனங்களிடம் நேரடியாகக் குஞ்சுகளை வாங்கி 100 முதல் 1000 கோழிகள் வரை கொண்ட சிறிய பண்ணைகளை உருவாக்கி, தமிழகத்தில் பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைபேட்டை, வேலூர் முதலான பகுதிகளில் விவசாயிகளால் கறிக்கோழிகள் வளர்க்கப்பட்டன. வளர்ந்த கோழிகளை விவசாயிகளிடமிருந்து கறிக்கடை உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் நேரடியாக வாங்கிக் கொண்டனர். இதே காலத்தில் அரசு கால்நடை பராமரிப்புத் துறையின் துணை நிறுவனமான தமிழ்நாடு கோழி வளர்ச்சி கழகம் (டாப்கோ-TAPCO) கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்தி ஆதரவளித்தது.

ஆனால் 1990-களில் தனியார்மய-தாராளமயக் கொள்கை திணிக்கப்பட்ட பிறகு, அரசுக்கு கோழி வளர்ப்பில் என்ன வேலை என உலகவங்கி உருட்டி மிரட்டத் தொடங்கியதும், உலக வங்கியின் கட்டளைப்படி, நிதி ஒதுக்கீட்டை அரசு நிறுத்தியதால் விவசாயிகளுக்குத் தேவையான குஞ்சுகளை அரசு நிறுவனங்கள் உற்பத்தி செய்து கொடுக்க முடியவில்லை. அரசு திட்டமிட்டே, அரசு நிறுவனங்களை ஒழித்தது. இலட்சக்கணக்கில் எந்திர சாதனங்களுக்குச் செலவாகும் என்பதால், கறிக்கோழி குஞ்சுகளை விவசாயிகளால் உற்பத்தி செய்யவும் முடியாது. இதன் விளைவாக, தனியார் கோழிக்குஞ்சு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் கறிக்கோழி வியாபாரத்தில் ஈடுபட்ட தனியார் பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் கை ஓங்க ஆரம்பித்தது. கோழிக்குஞ்சுகளுக்காக தனியார் நிறுவனங்களை விவசாயிகள் முற்றாகச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. மேலும், விவசாயத்தில் ஏற்பட்ட நெருக்கடியினால் விவசாயிகள் கறிக்கோழி வளர்ப்புத் தொழிலைக் கைவிட இயலாத நிலைமையையும், கறிக்கோழி வளர்ப்புக் கொட்டகைக்கான விவசாயிகளின் கடன் சுமையையும் பயன்படுத்திக் கொண்டு தனியார் கறிக்கோழி நிறுவனங்கள் ஒப்பந்த விவசாயத்தை விவசாயிகள் மீது திணித்தன.

கறிக்கோழி ஒப்பந்த விவசாயத்தில், ஒப்பந்த விவசாயத்தை நடத்தும் நிறுவனம் கோழிக் குஞ்சு, தீவனம்,



> கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபடும் சிறு விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டி போண்டியாக்கிவிட்டு, அவர்களைத் தற்கோலைப் பாதைக்குத் தள்ளுவதுதான் ஒப்பந்த விவசாயத்தின் நோக்கம் என்பதை சுகுணா நிறுவனத்துக்கு எதிரான விவசாயிகளின் போராட்டம் நிரூபித்துக் காட்டுகிறது.

மருந்து மற்றும் மருத்துவ சேவையுடன் ஆலோசனைகளையும் கொடுக்கும். கோழிக் குஞ்சு வளர்ப்பிற்கான கொட்டகை, குடிநீர், மின்சாரம் மற்றும் உழைப்பைக் கொண்டு கறிக்கோழிகளை விவசாயிகள் வளர்க்க வேண்டும். ஒப்பந்த நிறுவனம் விவசாயிகளுக்கு வளர்ப்புக் கூலியைக் (உயிருள்ள கோழிக்கு கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ. 1.50 முதல் அதிகபட்சமாக 2.50 வரை) கொடுத்துவிட்டு கோழிகளைக் கொள்முதல் செய்து கொள்ளும். இந்த ஒப்பந்த விவசாயத்தை வெங்கடேஸ்வரா, பயனீர், சாந்தி பார்சூன், சுகுணா போன்று 20-க்கும் மேற்பட்ட தனியார் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் தொடக்க காலத்தில் 500, 1000 கோழிகளை வளர்க்க ஒப்பந்தம் போட்டு விவசாயிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன. அடுத்ததாக, குறைந்த பட்சமாக 5000 கறிக்கோழிகள் வளர்க்க வேண்டும் என்று நிபந்தனை போட்டும், நிறுவனத்தினர் சொல்லும் விதத்தில் கொட்டகை அமைத்துப் பராமரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டும் பல லட்சங்கள் முதலீடு செய்ய வாய்ப்பில்லாத சிறு விவசாயிகளை வெளியேற்றின. இன்னொருபக்கம் கறிக் கோழி வியாபாரத்தில் ஈடுபடும் பெரும் வியாபாரிகளுக்குப் பல சலுகைகள் கொடுத்து தன் பிடியில் கொண்டு வந்து ஏகபோகத்தை நிறுவியுள்ளன.




ஒப்பந்த விவசாயிகளை ஒட்டச் சுரண்டி, 3200 கோடி ரூபாய்க்கு ஆண்டு வர்த்தகம் செய்யும் மிகப்பெரிய கறிக்கோழி நிறுவனமாக சுகுணா வளர்ந்துள்ளது.

மேலும் இந்நிறுவனங்கள், கறிக்கோழி ஒருங்கிணைப்புக் கமிட்டி (Broiler Co-ordination Committee BCC) என்ற கூட்டமைப்பை உருவாக்கி தன்னிச்சையாக கறிக்கோழியின் விலையைத் தீர்மானிக்கின்றன. இந்தக் கூட்டமைப்பு அவ்வப்பொழுது அறிவிக்கும் கறிக்கோழிக்கான பண்ணை விலை என்பது விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலை அல்ல; விவசாயிகளுக்கு கோழி வளர்ப்புக்கான கூலி மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் கமிட்டி அறிவிக்கும் பண்ணை விலையை அடிப்படையாகக் கொண்டுதான் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகள் நுகர்வோருக்கான கறிக்கோழி விலையைத் தீர்மானிக்கின்றனர்.

இப்படிச் செயல்படும் ஏகபோக நிறுவனங்களில் ஒன்றுதான், சுகுணா. இது, கோயம்புத்துரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இன்று இந்நிறுவனம் 11 மாநிலங்களில் 8,000 கிராமங்களில் சுமார் 20,000 விவசாயிகளிடம் கறிகோழி ஒப்பந்த விவசாயத்தை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் நேரடியான சில்லறை விற்பனை இறைச்சிக் கடைகளை (சுகுணா டெய்லி ஃபிரஷ்) திறந்து வருகிறது. ஒப்பந்த விவசாயத்தின் மூலம் வாரம் ஒன்றுக்கு 80 லட்சம் கறிக்கோழிகளைச் சந்தைக்குக் கொண்டு வரும் இந்நிறுவனத்தின் ஆண்டு வர்த்தகம் 3200 கோடி ரூபாய்களாகும். ஒப்பந்த விவசாயிகளை ஒட்டச் சுரண்டி, உலகின் கறிக்கோழி வர்த்தகத்தில் 10 வது இடத்தைப் பிடித்துள்ள இந்நிறுவனம், நாட்டின் 20 சதவீத நுகர்வுச் சந்தையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.,

கோழி உட்கொள்ளும் தீவனம் மற்றும் அதன் எடை வளர்ச்சியின் அடிப்படையில்தான் விவசாயிகளுக்கு வளர்ப்புக் கூலி கொடுக்கப்படுகிறது. அதாவது, ஒரு கோழி 4 கிலோ தீனி தின்று 40-45 நாட்களுக்குள் 2 கிலோ ஏறினால் அதிகபட்சமாக ரூ 5.00 (கிலோவுக்கு 2.50 ரூ என்ற வீதத்தில் ) கூலியாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், கறிக்கோழியின் எடை அதிகரிக்க ஒரு கிலோவுக்கு ஏறத்தாழ ரூ.6.00 வரை விவசாயிகள் செலவு செய்ய வேண்டியுள்ளது. விலைவாசியோ பல மடங்கு அதிகரித்துள்ள போதிலும், கடந்த பல ஆண்டுகளாக கோழி வளர்ப்போருக்கு இவ்வளவுதான் கூலியாகத் தரப்படுகிறது. இப்படி அற்பக்கூலி கொடுத்துச் சுரண்டும் சுகுணா நிறுவனம், கறிக்கோழிகளை கிலோ ரூ.130 வரை விற்று கொள்ளை லாபத்தைச் சுருட்டுகிறது.

பொதுவாக கறிக்கோழி உற்பத்தியில் குஞ்சுகளின் தரம், தீவனத்தின் தன்மை மற்றும் மருத்துவச் சேவைகள் ஆகியவைகளே கோழியின் வளர்ச்சியைப் பிரதானமாக தீர்மானிக்கின்றன. இவையனைத்தும் சுகுணா போன்ற ஒப்பந்த விவசாய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. விவசாயிகளின் கட்டுப்பாட்டில் வெறும் கோழிக் கொட்டகை, குடிநீர், தினசரி பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அவர்களது உழைப்பு மட்டுமே இருக்கிறது. கறிக்கோழி உற்பத்தியில் ஒரு நாள் வயது உள்ள தரமான கோழிக்குஞ்சு 50 கிராம் இருந்தால்தான் சீக்கிரம் எடை கூடும். ஆனால் 38 கிராம் எடை கொண்ட சுகுணா நிறுவனத்தின் குஞ்சுகள் தரமற்றவை. சுகுணா நிறுவனத்தின் தீவனத்தின் தரத்தைப் பொருத்த வரையில், இடுபொருட்களின் விலைக்கு ஏற்பவும், கறியின் விலைக்கு ஏற்பவும் தரம் மாறுபடுகிறது. உதாரணமாக, பறவைக் காய்ச்சல் நோய் பரவி கோழிக்கறி விலை சரிந்தபோது, கோழிகளுக்கு தரம் தாழ்ந்த தீவனத்தை

கொடுத்து தன் நட்டத்தை சுகுணா நிறுவனம் குறைத்துக் கொண்டது. கோழிகள் தீவனத்தை தின்றும் கூட எடை ஏறவில்லை. இதன் ஊடாக ஒட்டு மொத்த நட்டத்தையும் விவசாயிகளின் தலையில் அந்நிறுவனம் சுமத்தியது. வேறு காரணங்களால் சந்தை வீழ்ச்சியடை யும் நேரங்களில், கோழிகளைக் காலம் தாழ்த்தி கொள் முதல் செய்வதன் மூலமாக இந்நிறுவனம் நட்டத்தை விவசாயிகளின் பக்கம் தள்ளுகிறது.

இன்னொரு பக்கம், சந்தை ஏறுமுகமாய் இருக்கும் காலகட்டத்தைக் கணக்கில் கொண்டுதான் அதற்கேற்ப இந்நிறுவனம் விவசாயிகளுக்குக் கோழிக்குஞ்சுகளைக் கொடுக்கிறது. குறிப்பாக, கறிக்கோழி வியாபாரம் இறங்குமுகமாக உள்ள புரட்டாசி மாதம் மற்றும் கோடைக் காலங்களில் இந்நிறுவனத்தால் கோழி உற் பத்தி திட்டமிட்டு நிறுத்தப்படுகிறது. 5000 கோழிகளுக்கு குறைந்த பட்சம் 4 முதல் 6 லட்ச ரூபாய் மதிப்புள்ள கொட்டகையைக் கடன் வாங்கி உருவாக்கிய விவசாயி கள், இப்படி பல மாதங்கள் கோழிகள் இல்லாமலே வெறுமனே கொட்டகை கிடப்பதால் பெருத்த நட் டத்தைச் சந்திக்கின்றனர். நட்டம் முழுவதும் விவ சாயிக்கு; இலாபம் முழுவதும் சுகுணாவுக்கு. இந்த அநி யாயத்தை எதிர்த்துக் கேட்காமல் இருக்க வெற்று பத் திரங்களிலும், காசோலைகளிலும் கையெழுத்து வாங்கி விவசாயிகளை இந்நிறுவனம் அறிவிக்கப்படாத கொத் தடிமைகளாக வைத்திருக்கிறது. இப்படி விவசாயிகள் நட்டப்பட்டு கறிக்கோழிகளை வளர்த்து சந்தைக்கு வரு வதுதான் ‘‘சுகுணா சிக்கன்’’! விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டி உருவானதுதான் சுகுணாவின் ‘‘இளசான, மிருதுவான, தரமான சிக்கன்’’!

நீண்ட காலமாகக் குமுறிக் கொண்டிருந்த ஒப்பந்த விவசாயிகள், வளர்ப்பு கூலியாய் உயிருள்ள கறிக்கோழி யின் எடைக்கு ஏற்ப கிலோவுக்கு குறைந்த பட்சமாக 3.50 ரூபாயும், 50 கிராம் எடை கொண்ட குஞ்சு, தரமான தீவனம், மருத்துவ சேவைகள், ஆலோசனைகள் மற்றும் முழுமையாக கொட்டகையைப் பயன்படுத்துவதற்குத் தொடர்ச்சியாகக் கறிக்கோழிக் குஞ்சுகளைக் கொடுக்க வேண்டும் எனவும்; வெற்றுப் பத்திரங்களிலும், காசோலைகளிலும் கையெழுத்து வாங்கி மிரட்டுவதை நிறுத்தக் கோரியும் சுகுணா நிறுவனத்துக்கு எதிராகப் போராடினர். சுகுணா நிறுவனமோ பேச்சுவார்த்தைக்கு வரமுடியாது, கோரிக்கைகளை நிறைவேற்றவும் முடி யாது என்று திமிராக அலட்சியப்படுத்தியது. அரசோ கண்டும் காணாமலும் இருந்தது. விவசாயிகள் கோழி களை பட்டினி போட்டு, இறந்த கோழிகளை சுகுணா அலுவலகத்தின் முன் கொட்டிய பிறகுதான், அதிர்ச்சி யடைந்த அந்நிறுவனம் பேச்சு வார்த்தைக்கு வந்தது. சுகுணாவின் அடாவடித்தனத்தை எதிர்க்க வக்கற்ற அரசோ பேச்சுவார்த்தையில் நடுநிலை நாடகமாடியது. இறுதியில் சுகுணா நிறுவனம், உயிருள்ள கோழிக்கு எடைக்கு ஏற்ப ஒரு கிலோவுக்கு வளர்ப்புக் கூலியாக ரூ.3.50 தருவதாக ஒப்பு கொண்டதால் தற்காலிகமாகப் போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் இன்று வரை சுகுணா, பேச்சுவார்த்தையில் போடப்பட்ட ஒப் பந்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்தவில்லை. போராடுகிற பகுதிகளில் இருக்கும் விவசாயிகளுக்குக் கறிக்கோழிக் குஞ்சுகள் கொடுப்பதையும் நிறுத்தி யுள்ளது. மேலும் போராடும் விவசாயிகளை ஓரணியில் திரள விடாமல் பிரித்தாளும் சதிவேலைகளைச் செய்து வருகிறது.

தனியார்மய-தாராளமயக் கொள்கை தீவிரமாக நடை முறைப்படுத்தப்படுவதால் தமிழக அரசோ, கால்நடை பராமரிப்புத் துறையோ அல்லது கால்நடை மருத்துவ பல்கலைக்கழகமோ கறிக்கோழி ஒப்பந்த விவசாய நிறு வனங்களைக் கட்டுப்படுத்தும் சூழலில் இல்லை. ஒப் பந்த விவசாயத்தில் பங்கேற்கும் விவசாயிகளின் பாது காப்பிற்காக எந்த ஒரு குறிப்பிட்ட சட்ட வரையறையும் இல்லை. இதுதான் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப் படும் ஒப்பந்த விவசாயத்தின் யோக்கியதை!

கூலி உழைப்பாளிகளை மட்டுமின்றி சிறு உடமை யாளர்களையும் சுரண்டிக் கொழுத்து ஏகபோகத்தை நிறுவுவதுதான் முதலாளித்துவம். விவசாயம் நசிந்து போனதால், வேறுவழியின்றி கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்ட சிறு விவசாயிகளின் நிலம், நீர், உழைப்பைச் சுரண்டி போண்டியாக்கிவிட்டு, அவர்களைத் தற் கொலைப் பாதைக்குத் தள்ளுவதான் ஒப்பந்த விவசா யத்தின் நோக்கம் என்பதை சுகுணா நிறுவனத்துக்கு எதி ரான விவசாயிகளின் போராட்டம் நிரூபித்துக் காட்டி விட்டது. இந்நிலையில், ஒப்பந்த விவசாயத்துக்கு அர சின் பாதுகாப்பைக் கோரும் போராட்டங்களோடு, தனி யார்மய-தாராளமயத் தாக்குதலுக்கு எதிராக இதர பிரிவு உழைக்கும் மக்களுடன் ஓரணியில் திரண்டு போராடு வதன் மூலம்தான், ஏகபோக கோழிப்பண்ணை நிறு வனங்களின் இரும்புப் பிடியிலிருந்து கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகள் விடுபட முடியும்.

● சுடர்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

புதிய ஜனநாயகம் இதழுக்கான புதிய சந்தாக்கள், நடப் பிலுள்ள சந்தாவினைப் புதுப்பித்தல், சந்தா தொடர்பான முகவரி மாற்றங்கள் மற்றும் இதழ் சந்தாதாரர்களுக்குக் கிடைக்காதது குறித்த புகார்கள் உள்ளிட்ட அனைத்தும் ஒவ் வொரு மாதமும் 15-ஆம் தேதிக்குள் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தேதிக்குள் எமக்குக் கிடைக்கும் சந்தாக்களுக்கு மட்டுமே, அடுத்து வெளிவரும் இதழ் அனுப்பப்படும். எடுத்துக்காட்டாக, அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் எமக்குக் கிடைக்கப்பெறும் சந்தாக்களுக்கு நவம்பர் இதழிலிருந்து அனுப்பி வைக்கப்படும். அக்டோபர் 15 ஆம் தேதிக்குப் பிறகு எமக்குக் கிடைக்கப்பெறும் சந்தாக்களுக்கு டிசம்பர் இதழிலிருந்துதான் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

இப்புதிய மாற்றத்திற்கு சந்தாதாரர்களின் ஒத்துழைப்பைக் கோருவதோடு, இதழின் வளர்ச்சிக்கும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி,
புதிய ஜனநாயகம்.

# போபால்:

# ராஜீவ், மனித உணர்ச்சி இல்லாத பிண்டமா?

1984 நச்சு வாயுப் படுகொலைகள் வழக்கில் போபால் வழக்குமன்றத் தீர்ப்பு வந்தவுடன் நாடே கொந்தளித்துப் போனது. அக்கோரச் சம்பவம் நடந்து கால் -ற்றாண்டுக்கும் மேலாகிறது. அன்று போபாலில் என்ன நடந்தது; எப்படி நடந்தது; எவ்வளவு பேரழிவும் துயரமும் நிகழ்ந்தது என்று இன்று கேள்விப்படும் புதிய தலைமுறையினரின் நெஞ்சிலே எழும் முதற்கேள்விகள் இவைதாம்: இத்தனைக்கும் காரணமான குற்றவாளி யார்? அவனுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது?

இவ்வழக்கில் முதன்மைக் குற்றவாளியான யூனியன் கார்பைடு நிறுவனத் தலைவர் வாரன் ஆண்டர்சன் மீதான வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, அவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட பின்னரும் எந்தவிதத் தண்டனையும் விதிக்கப்படவில்லை. ஏனென்றால், அவர் மீதான வழக்கில் விசாரணையே இதுவரை நடைபெறவில்லை. போபால் ஆட்கொல்லி ஆலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் தவறியவன்; செய்யப்பட்டிருந்த சில பாதுகாப்பு ஏற்பாடுகளையும் லாபவெறி காரணமாக முடக்கிப் போட்டவன்; நேரம் குறித்து வெடிக்கும் குண்டு வைப்பதைப் போல பழைய - காலாவதியான தொழில் நுட்பத்தையும் கருவிகளையும் கொண்டு வந்து நிறுவியவன். அவனா இதற்குக் காரணம் என்று கேட்கலாம்.

ஆம்! ஆலை லாபகரமாக ஓடினால் மட்டும் எல்லாம் என் அறிவுத் திறமையினால்தான் என்று சம்பளத்தை வாரிக் கொள்பவன்தானே அதன் பேரழிவுச் செயலுக்கும் பொறுப்பேற்க வேண்டும்!

அப்பேரழிவு நிகழ்ந்த ஓரிரு நாட்களில் போபால் வந்திறங்கிய வாரன் ஆண்டர்சனை மக்களின் ஆத்திரத்தில் இருந்து பாதுகாப்பதற்காக, கைது என்ற பெயரில் அரசு சொகுசு மாளிகையில் காவலில் வைத்தார்கள். உடனடியாகவே பிணையில் விடுவித்து, அரசு விமானத்திலேயே புதுதில்லி அழைத்துப் போய், அரசு அதிகாரிகளுடன் விருந்தளித்து அமெரிக்காவுக்கு வழியனுப்பி வைத்தார்கள்.

இதைச் செய்தது யார்? இதற்கு யார் பொறுப்பு? கட்டபொம்மனின் வாரிசுகள் தமது மூதாதையரின் செயலுக்கு உரிமை பாராட்டிக் கொள்ள முடியும்! எட்டப்பனின் சந்ததியினர் அவனது காரியத்துக்கு பரம்பரை உரிமை பாராட்டிக் கொள்ள முடியுமா? அப்படித்தான் நடக்கிறது.

ஆண்டர்சன் தப்பிப் போனதற்கு தாம் காரணமில்லை என்று கை விரிக்கிறார்கள். மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரசு ஆட்சி. புதுதில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி. போபாலில் முதல்வர் அர்ஜுன் சிங். ஆண்டர்சனை அரசு சொகுசு மாளிகை காவலில் வைத்து, தனது அரசு விமானத்தில் வழியனுப்பி வைத்தவர் அர்ஜுன் சிங். அதை அவர் இன்றும் பெருமையுடன் ஒப்புக் கொள்கிறார். ஆனால், அவரை விடுதலை செய்யுமளவுக்குத் தமக்கு அதிகாரம் இல்லை; மத்திய உள்துறை அமைச்சகத்திலிருந்து தொடர்ந்து தொலைபேசி மூலம் வலியுறுத்தப்படுவதாக தலைமைச் செயலர் சொன்னார்; அதனால்தான் புதுதில்லிக்கு ஆண்டர்சனை அனுப்பி வைத்தேன் என்றார், அர்ஜுன் சிங்.

புதுதில்லியிலிருந்து வாரன் ஆண்டர்சனை அமெரிக்காவுக்கு பாதுகாப்பாக அர்ஜுன் சிங் அனுப்பி வைத்திருக்கவும் முடியாது. அப்படி யாரும் இன்று வரை கூறவும் இல்லை. அப்படிச் செய்ய அவருக்கு அதிகாரமும் இல்லை. ஆனால், ''ஆண்டர்சன் கைது, விடுதலை மற்றும் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது - இவை எதிலும், எவ்விதப் பங்கும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்குக் கிடையாது. நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்காக பிரச்சாரப் பயணத்தில் இருந்த அவருக்கு நடந்தவை எதுவும் தெரியாது'' என்று காங்கிரசுக்காரர்கள் எல்லாம் முதலில் ஒருசேர அடியோடு மறுத்து வந்தார்கள்.

நாட்டில் இவ்வளவு பெரிய பேரழிவு நிகழ்ந்திருக்கிறது! இதற்குக் காரணமான முதன்மைக் குற்றவாளியைக் கைது செய்து, பின்னர் விடுதலை செய்து, பாதுகாப்பாக நாட்டைவிட்டுத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இவை எதுவும் பிரதமர் ராஜீவுக்குத் தெரியாது என்றால், இவை எதுவும் தெரியாத ஒருவருக்கு இந்த நாட்டை ஆளுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? பிரதமராக இருப்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இவ்வளவுதான் மக்கள் மீதும், நாட்டின் மீதும் அவருக்கிருந்த அக்கறையா? அல்லது இவையெதுவும் ராஜீவுக்கு தெரியாது என்பது பச்சைப் பொய்யா?

வாரன் ஆண்டர்சனின் விவகாரத்தை அன்று புதுதில்லியில் கையாண்டவர்கள் இரண்டு அதிகாரிகள்: ஒருவர் ராஜீவ்காந்தி அரசில் பொறுப்பேற்றிருந்த வெளியுறவு அமைச்சகச் செயலாளர் ரஸ்கோத்ரா. மற்றவர் ராஜீவ்காந்தியின் தனிச் சிறப்புச் செயலாளர் பி.சி. அலெக்சாண்டர். ''ஆண்டர்சன் இந்தியா வரலாம், வந்தால் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பப்படுவார் என்று அமெரிக்கத் துணைத் தூதர் மூலம் உறுதியளிக்கப்பட்டது. அவ்வாறே நடந்தது. நடப்பவை பற்றி ராஜீவ்காந்திக்கு சொல்லப்பட்டது. அவர் மறுப்போ, எதிர்ப்போ தெரிவிக்கவில்லை'' என்கிறார் ரஸ்கோத்ரா.

‘‘(இந்திய) அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்துப் பேசித்தான் எல்லாம் முடிவு செய்யப்பட்டன. அக்கூட்டத்தில் ராஜீவும் கலந்து கொண்டார்’’ என்கிறார், அவரின் தனிச் சிறப்புச் செயலாளர் பி.சி. அலெக்சாண்டர். ரஸ்கோத்ராவின் கூற்றுக்கு மறுப்புச் சொல்லாத காங்கிரசார், குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக நின்ற அலெக்சாண்டர் கூறுவதை ஏற்க முடியாது என்றனர்.

மன்மோகன், சோனியா, ராகுல் ஆகிய அதிகார பீடாதிபதிகள் போபால் விவகாரம் குறித்து இன்றும் வாயை இறுக மூடிக் கொண்டிருக்கின்றனர். எதிர்க்கட்சிகளும், செய்தி ஊடகங்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்திய பிறகு, அர்ஜுன் சிங்கிற்கு அரசியல் மறுவாழ்வளிப்பது என்ற ஒப்பந்தத்தின் பேரில் திடீரென்று ஒருநாள் நாடாளுமன்றத்தில் அவர் வாய் திறந்தார்.

‘‘போபால் நச்சு வாயு துயரம் நடந்த கொஞ்ச நேரத்தில் ராஜீவ் காந்தி தங்கியிருந்த ஹர்தாவுக்கு போய் நான் அவரிடம் அதுபற்றி விளக்கிச் சொன்னேன். அவர் எந்தப் பதிலும் பேசாது நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டார். ஆண்டர்சனுக்கு ஆதரவாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அவரது பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முயலவில்லை. ராஜீவைப் போன்று உயர்நிலையிலும் உயர் தரத்திலும் உள்ள ஒருவரைக் குறை கூறுவது வெறும் கற்பனையாகும்... ஆண்டர்சனை விடுவிக்கும்படி உள்துறை அமைச்சகத்திலிருந்து இடைவிடாமல் தொலைபேசியில் வலியுறுத்தப்பட்டது’’ என்றார், அர்ஜுன்சிங்.


அர்ஜுன் சிங்

அர்ஜுன் சிங்கின் இந்தக் கூற்றை காங்கிரசார் மறுக்கவில்லை. என்றாலும் அவர்கள் விரும்புவதைப் போல இந்த பிரச்சினைக்கு அது முடிவு கட்டவில்லை. ஆனால், தவிர்க்கவே முடியாத சில கேள்விகள் மனிதச் சிந்தனை உள்ளவர்களிடையே எழும்புகிறது. ஒரு அந்நியக் கம்பெனியின் நாசகாரச் செயலால் சொந்த நாட்டு மக்கள் — குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று அப்பாவி மக்கள் — ஆயிரக்கணக்கானோர் சில நிமிடங்களில் கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கானோர் ஊனமுற்று மருத்துவமனைகளில் கிடக்கிறார்கள். இவற்றைக் கேள்விப்படும் எந்த மனிதரும் எப்படி வெறுமனே கேட்டுக் கொண்டிருக்க முடியும்? ஏதோ நடந்துவிட்டுப் போகட்டும் என்று தன் வேலையைப் பார்க்கப் போய் விட மாட்டார்கள். உணர்ச்சியுள்ள எந்த மனிதருக்கும் நெஞ்சம் பதைபதைக்கும். ஆனால், நடந்த சம்பவங்களை முதன் மந்திரி பிரதமரிடம் விளக்குகிறார். இவரோ எவ்வித எதிர்வினையும் தெரிவிக்காமல் கேட்டுக் கொள்கிறார். இக்கோர நிகழ்வுகளுக்காகத் துயரப்படவில்லை, மனம் இரங்கவும் இல்லை. காரணமானவர்கள் மீது ஆத்திரமும் வரவில்லை. இவர் மனிதப் பிறவிதானா? இல்லை, உணர்ச்சியே இல்லாத மனிதப் பிண்டமா?


வாரன் ஆண்டர்சன்


ராஜீவ்காந்தி

இந்தக் கேள்விகள் முக்கிய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி, இடதுசாரிகள் உட்பட எந்த ஓட்டுக்கட்சிக்கும் எழவில்லை. செய்தி ஊடகங்களுக்கோ, அரசியல் விமர்சகர்களுக்கோ எழவில்லை. ஏன்? அதற்குமேல் அவர்கள் போக விரும்பவில்லை. இறந்து போனவர்களை விமர்சிக்கக் கூடாது; ஒரு வரம்புக்கு மேல் எந்த ஒரு அரசியல் கட்சியையும், அதன் தலைவர்களையும் அரசியல் அமைப்பையும், சட்டத்தையும் கேள்வி கேட்கக் கூடாது என்று இவர்களாகவே வரம்பிட்டுக் கொள்கிறார்கள். ‘‘தேசியத் தலைவர்கள்’’ என்ற பிம்பத்தை உருவாக்கி, கேள்விக்கும் விமர்சனத்துக்கும் அப்பாற்பட்ட தலைவர்கள், நிறுவனங்கள் என்று சிலரையும், சிலதையும் வைத்து பாதுகாப்பு அரண்களை எழுப்பிக் கொண்டார்கள். அதனால்தான் போபால் விவகாரத்திலேயே துரோகத்தனமான தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றத்தை யாருமே தட்டிக் கேட்க வில்லை. இதை அடிப்படையாகக் கொண்டுதான் ராஜீவ் ஒரு உயர்ந்த தலைவர்; அவரைக் களங்கப்படுத்தும் வகையில் எதுவும் பேசக் கூடாது என்று காங்கிரசு வாதிடுகிறது.

அர்ஜுன் சிங் நாடாளுமன்றத்தில் பேசிய அடுத்த நாளே, போபால் - ராஜீவ் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக எண்ணிப் பாசிச பயங்கரவாதி சிதம்பரம் பேசினார். ஆனால், அதுவே அவரது அயோக்கியத் தனத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. ‘‘போபால் விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்களை ஆட்சி புரிந்த எல்லா அரசாங்கங்களும் கைவிட்டு விட்டன; அதற்காக வருந்துகிறேன்’’ என்று முதலைக் கண்ணீர் வடித்தார், சிதம்பரம். எல்லோரும்தான் தவறு செய்தோம் என்று முதலாம் துரோகி மற்ற துரோகிகளைச் சேர்த்துச் சொல்வதன் மூலம் இதற்கு மேல் யாரும் யாரையும் குற்றஞ்

சாட்டாதீர்கள் என்று எச்சரிக்கிறாரா? சமரசம் பேசுகிறாரா? எல்லோரும்தான் தவறு செய்திருக்கிறோம் என்று தவறை ஒப்புக் கொள்வதுபோல பாசாங்கு செய்து தம் மீதான குற்றச்சாட்டின் கூர்முனையை மழுங்கடிக்க எத்தணிக்கிறாரா?


எம்.கே.ரஸ்கோத்ரா


பி.சி.அலெக்ஸாண்டர்

''போபால் சம்பந்தமாக அரசின் நடவடிக்கைகள் குறித்து ஆதாரங்கள் எதுவும் அரசிடம் இல்லை. ஆண்டர்சன் வந்து போனதாகக் கூட அரசு ஆவணங்களில் ஆதாரம் இல்லை. அக்காலத்திய பத்திரிக்கைச் செய்திகளை வைத்துதான் முடிவு செய்ய வேண்டும். அப்போதைய இந்து நாளேட்டின் செய்திப்படி, ஆண்டர்சன் நாட்டை விட்டுப் போன பிறகுதான் நடந்தவை ராஜீவுக்குத் தெரிந்தன'' என்றார், பாசிச புளுகுணி சிதம்பரம். ஆண்டர்சன் வெளியேறுவதற்கு முன்பாக ராஜீவுக்கு சொல்லப்பட்டது என்றுதான் அக்காலத்திய இந்து நாளேடு செய்தி கூறியது. இதை இந்து நாளேடு செய்தியாளரே ஆதாரத்துடன் கேட்டபோது, அது இந்து நாளேட்டின் கருத்து என்று மீண்டும் புளுவிவிட்டு ஓடிப் போனார் சிதம்பரம்.

ஆக, ஆண்டர்சன் வருகை முதல் பாதுகாப்பாக நாடு திரும்பியவரை எல்லாம் ராஜீவுக்குத் தெரிந்தே நடந்திருக்கிறது. இதற்கு இந்து நாளேடு செய்தி, ரஸ்கோத்ரா, அலெக்ஸாண்டர், அர்ஜுன் சிங் ஆகிய சாட்சியங்கள் உள்ளன. ஆண்டர்சன் திருப்பி அனுப்பப்பட்டதில் ராஜீவுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று காங்கிரசார் வாதிட்டாலும், அதுபற்றி அவருக்குச் சொல்லப்பட்டபோது ராஜீவ் மறுக்கவில்லை, எதிர்க்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டு விட்டார்கள். இதற்கும் மேலாக, ராஜீவ் அரசாங்கம்தான் ஆண்டர்சனை அனுப்பி வைக்கும் முடிவு செய்ததாக சி.ஐ.ஏ. ஆவணமும் ஆண்டர்சனைப் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று அன்றைய அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் ராஜீவிடம் தொலைபேசியில் வலியுறுத்தினார் என்ற ஆதாரங்களும் வெளியாகியுள்ளன.

மன்னர் ஆட்சிக் காலத்தில் நீண்டநெடிய மதிற்சுவர்களுக்குப் பின்னே அரசியல் சதிகள் தீட்டப்பட்டன, இரகசியமாக நிறைவேற்றப்பட்டன. வெளியே தெரிந்தாலும், அரசின் இரகசியங்களை அறிந்தவர்கள் அனைவரும் அரசருக்கு எதிராகச் சதித் திட்டம் தீட்டியதாகச் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். இந்தக் காலத்தில் கருப்புப் பூனைப் படைகளின் பாதுகாப்போடு சதித் திட்டங்கள் தீட்டப்பட்டு, அடாவடியாக நிறைவேற்றப்படுகின்றன. பிற விவகாரங்களில் கேள்வி கேட்பவர்களைத் தேச விரோத சக்திகள் என்று குற்றஞ்சாட்டி ஒடுக்குவதைப் போல, ஆண்டர்சன் விடுதலை போன்ற விவகாரங்களில் அப்படிச் செய்ய முடியாது. எனவே, நடந்தவை பற்றிய ஆதாரங்கள், ஆவணங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன; அல்லது காணாமல் போகும்படி செய்யப்படுகின்றன.

ஆனால், நடந்தவை எல்லாம் ராஜீவ் தலைமையிலான அரசின் திட்டமிட்ட முன்னேற்பாடுகள், சதிச் செயல்கள் தாம். தன் பங்கு பற்றி வெளியே தெரியக் கூடாது என்பதற்காக அர்ஜுன் சிங் போன்ற அல்லக்கைகள் - எடுபிடிகளை வைத்து நிறைவேற்றப்பட்டவை தாம்.

மக்களுடைய கடுமையான ஆத்திரத்துக்கு உள்ளாவோம் என்று அஞ்சும் விவகாரங்களில் எல்லாம் ஆட்சியாளர்கள் தமது அல்லக்கைகளை வைத்து காரியங்களைச் செய்வதும், தாம் ஏதும் அறியாதவர்களைப் போல வாய்மூடிக் கொண்டிருப்பதும் புதிதல்ல. ஈழ விவகாரத்தில் கூட பிரணாப் முகர்ஜி, சிவசங்கர மேனன், நாராயணன் போன்றவர்களே முன்நிறுத்தப்பட்டார்கள். மன்மோகனும் சோனியாவும் வாயே திறக்கவில்லை.

அதைப் போல ஆண்டர்சன் தப்புவிக்கப்பட்ட விவகாரத்தில் ராஜீவ் அரசால் முன்னிறுத்தப்பட்டவர்களைத்தான் கை காட்டுகிறார்கள். ராஜீவ்காந்தியின் பங்கு பற்றிய உண்மை தெரியக்கூடாது என்பதற்காக அரசு ஆவணங்கள், ஆதாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. அப்போது நடந்தவை பற்றிய ஆதாரம் எதுவுமில்லை என்கிறார் சிதம்பரம். அக்காலத்திய பிரதமர் அலுவலகத் தொலைபேசி உரையாடல் பற்றிய விவகாரங்களை தரும்படி தகவல் அறியும் சட்டப்படி கேட்டவருக்கு, அதுபற்றிய விவரம் எதுவும் தம்மிடம் இல்லை என்று அடியோடு மறுக்கிறது அரசு. [ராஜீவின் தாய் நடத்திய அவசர கால ஆட்சி (1975-76) பற்றிய தகவல் - விவரம் எதுவும் தன்னிடம் இல்லை என்றும் இந்த அரசு கூறுகிறது என்பது வேறொரு விசயம்].

ராஜீவ் காந்தியின் ஆட்சியே இப்படிப்பட்டதுதான். அர்ஜுன்சிங் முன்னின்று போடப்பட்ட ராஜீவ் - லோங்கோவால் பஞ்சாப் ஒப்பந்தம், ராஜீவ் - அசாம் கன பரிசத் ஒப்பந்தம், ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போன்ற இரகசிய ஒப்பந்தங்களும், சதித்தனமான வேலைகளும் நிறைந்ததுதாம். ராஜீவ் அரசியல் வாழ்வே போபார்ஸ் ஊழல், டில்லி சீக்கியர் படுகொலை, ஏன், ராஜீவ் கொலையே கூட தீர்வு காணப்படாத மர்மங்கள் நிறைந்தவைதாம்!

● ஆர்.கே.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

களைச் சாடுகிறார், இந்திய ஏற்றுமதியாளர்கள் அமைப்பின் தலைவர், ஏ.சக்திவேல்.

எடுத்துக்காட்டாக, சங்கர்-6 என்ற பருத்தி வகைக்கு அரசு நிர்ணயித்திருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.2,850. பெரும்பாலான விவசாயிகளுக்குக் கிடைக்கும் விலை இதுதான். ஆனால், அதன் சந்தை விலையோ இன்று 4,500 ரூபாயைத் தாண்டி விட்டது. எனினும் கொள்முதல் விலையை உயர்த்த மறுக்கும் அரசு, பருத்தி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்காகத்தான் பஞ்சு ஏற்றுமதியை அனுமதித்திருப்பதைப் போல நடிக்கின்றது.

இப்போது முன்பேர வணிகத்துக்கு எதிராகக் குரல் எழுப்பும் -ற்பாலை முதலாளிகளும் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களும், விதர்பா பருத்தி விவசாயிகள் கோருவதைப் போல பருத்திக்கான ஆதரவு விலையை 4,500 ரூபாயாக உயர்த்துவதை ஏற்றுக் கொள்வார்களா? பல்லாயிரக்கணக்கான பருத்தி விவசாயிகள் கடனில் மூழ்கித் தற்கொலை செய்து கொண்ட சூழ்நிலையிலும் தான், ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்கள் 'உள்நாட்டுத் தேவை' என்று சித்தரிக்கின்றன.

நம் மக்கள் தொகையில் 80 கோடிப் பேருடைய ஒரு நாள் சராசரி வருமானம் 20 ரூபாய். இந்த மக்களால் ஆண்டுக்கு 4 செட் வேட்டி, சேலை, கால்சட்டை, மேல்சட்டை, உள்ளாடைகள் வாங்க முடியுமானால், இந்தியாவின் சந்தை இவர்கள் தேடித் தவமிருக்கும் அமெரிக்க, ஐரோப்பியச் சந்தைகளைக் காட்டிலும் பிரம்மாண்டமானதாக இருக்கும். ஆனால், ஜவுளி ஆலை முதலாளிகள் உள்நாட்டு உழைப்பாளி மக்களின் நுகர்வைப் பற்றிக் கவலைப்படவில்லை.

தங்களுடைய நலனை மக்களின் நலனாகச் சித்தரிப்பதற்கு மட்டுமே அவர்களுக்கு மக்கள் தேவைப்படுகிறார்கள். விசைத்தறி நெசவாளர்களையும், ஆயத்த ஆடை மற்றும் ஜவுளி ஆலைத் தொழிலாளர்களையும் கொத்தடிமையாக்கி, 12 மணி நேரத்திற்கும் மேல் கடுமையாகச் சுரண்டும் இந்தக் காருண்யவான்கள்



> **பருத்தி ஏற்றுமதிதான் உங்கள் பஞ்சத்தைப் போக்கும் என்று கூறும் அரசின் சூதுக்கு விவசாயிகள் பலியாகிறார்கள்.**

பருத்திக்கான ஆதரவு விலையை அரசு உயர்த்த மறுப்பதற்குக் காரணமே ஜவுளித்தொழில் முதலாளிகள்தான். ஏற்றுமதியைத் தடுக்க சுங்கவரி போட வேண்டுமாம். ஆனால் உலகச் சந்தையில் விலை குறைந்திருக்கும் போது, இவர்கள் பஞ்சை இறக்குமதி செய்து உள்நாட்டு பருத்தி விவசாயிகளின் வயிற்றில் அடிப்பார்களாம். அதற்கு மட்டும் சுங்கத்தீர்வை விதிக்கக் கூடாதாம்.

சர்வதேச அளவில் ஜவுளி ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சீனாவில் ஜவுளிக்கான உள்நாட்டுச் சந்தை விரிவடைந்திருப்பது, டாலருக்கு எதிராக சீன நாணயத்தின் மதிப்பு உயர்ந்திருப்பது போன்ற பல காரணிகளால் இந்தியாவின் ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கும் என்றும், இந்திய ஜவுளித்துறை தற்போதைய மதிப்பான 3.27 லட்சம் கோடியிலிருந்து 2020-இல் 10.32 லட்சம் கோடிகளாக உயரும் என்றும் நாக்கில் நீர் சொட்டக் காத்திருக்கிறார்கள் இந்திய முதலாளிகள். இந்தக் கொள்ளை இலாபத்தை அறுவடை செய்வதற்குப் போதுமான பருத்தி குறைந்த விலையில் தங்களுக்குத் தேவைப்படுவதைத் பஞ்சு ஏற்றுமதியை நிறுத்தாவிட்டால் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலையிழப்பும், தற்கொலைகளும் நிகழும் என்று கண்ணீர் வடிக்கிறார்கள். முதலாளி வர்க்கத்தின் இந்த மோசடியை அம்பலப்படுத்தாமல், தொழிலாளி வர்க்கத்தை நிபந்தனையின்றி முதலாளிகளின் பின்னே அணிவகுத்து நிற்க வைக்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள்.

விளைவு, ''ஆடை ஏற்றுமதிதான் உங்களுக்கு வேலையைக் கொடுக்கும்'' என்று கூறும் ஜவுளி ஆலை முதலாளிகளின் மோசடியில் தொழிலாளர்களும், விசைத்தறி நெசவாளர்களும் மயங்குகிறார்கள். பருத்தி ஏற்றுமதிதான் உங்கள் பஞ்சத்தைப் போக்கும் என்று கூறும் அரசின் சூதுக்கு விவசாயிகள் பலியாகிறார்கள். இந்தப்புறம் வீசினால் தொழிலாளிகளையும், அந்தப்புறம் வீசினால் விவசாயிகளையும் வெட்டும் கத்திதான் புதிய தாராளவாதக் கொள்கை என்பதை மக்கள் உணரும் போது மட்டுமே இந்த மறுகாலனியாக்கத் தினை மயக்கங்கள் மறைந்தொழியும்.

● சலீம்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11




# மூலதனத்தின் கொள்ளைக்கு எதிராக குமுறி எழும் பிரான்ஸ்!

ஈராண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா உருவாக்கிய பொருளாதார நெருக்கடியின் சுமைகளை உழைக்கும் மக்களின் மீது சுமத்தும் சதிகளுக்கு எதிராக, தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் அணிதிரண்டு அடுத்தடுத்து நடத்திவரும் போராட்டங்களால் பிரான்ஸ் நாடே குலுங்குகிறது. பிரான்சின் முக்கிய தொழிற்சங்கங்கள் விடுத்த அறைகூவலை ஏற்று கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதியன்று நடந்த மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில், ஏறத்தாழ 20 லட்சம் பேர் வீதிகளில் திரண்டு பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளனர். பள்ளி-கல்லூரிகள், ஆலைகள், அரசு அலுவலகங்கள், வங்கிகள், போக்குவரத்து உள்ளிட்டு அனைத்து துறைகளும் அன்று செயலிழந்து முடமாகிப் போயின. தொழிலாளர்களும் மாணவர்களும் இளைஞர்களும் அரசு ஊழியர்களும் குடும்பம் குடும்பமாக அணிதிரண்டு நாடெங்கும் 220-க்கும் மேற்பட்ட இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

‘‘அடிப்படை ஊதியத்தை அதிகப்படுத்து! தொழிலாளிகளை அதிரடியாக வேலையிலிருந்து தூக்கியெறியாதே! இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடு! முதியோர்களுக்கு முறையான ஓய்வூதியத்தை முழுமையாகக் கொடு!’’ என்பதுதான் போராடும் மக்களின் கோரிக்கை. அரசின் விசுவாச போலீசு -இராணுவ - அதிகாரிகளைத் தவிர, நாட்டில் எவரும் அதிபர் சர்கோசியின் அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை. ஏறத்தாழ 80 சதவீத மக்கள் இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆதரித்து அரசின் ‘சீர்திருத்த’ சதித் திட்டங்களை எதிர்க்கின்றனர்.

மேற்கத்திய நாடுகளின் முதலாளித்துவ அரசுகள் தொழிலாளர்களின் ஓய்வூதியத் தொகையை எடுத்து நிதியாதிக்கச் சூதாட்டக் கும்பல்களுக்கு வாரியிறைத்து விட்டதால், ஓய்வூதிய நிறுவனங்கள் அனைத்தும் மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையில் உள்ளன. பிரெஞ்சு அரசோ ஓய்வூதியம் கொடுப்பதால் அரசின் வரிப்பணத்தில் பல்லாயிரம் கோடி செலவாகிறது என்று கூறி ஓய்வூதியம் பெறுவதற்கான வயதை 60-லிருந்து 62-ஆக நீட்டிக்கும் கொள்கையை அறிவித்து ஓய்வூதியத்தையே செல்லாக் காசாக்கத் துடிக்கிறது. பிரான்ஸ் மட்டுமின்றி, பல ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இதேபோல ஓய்வூதியம் பெறும் வரம்பை 65 முதல் 67 வயதுவரை உயர்த்தத் திட்டமிட்டுள்ளன.

போராடும் தொழிலாளர்களோ இந்தச் சதிகளையும் பசப்பல்களையும் ஏற்கத் தயாராக இல்லை. ஓய்வூதியத் தொகையைச் சுருட்டும் நிதியாதிக்கக் கும்பல்களிடமிருந்து அதனைப் பறித்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் பல இடங்களில் தொழிலாளிகள் பேரணி நடத்தியுள்ளனர். ஓய்வூதியப் பிரச்சினைதான் போராட்டத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டாலும், இது மொத்தப் பிரச்சினையின் ஒரு அம்சம்தான். சமூக அநீதிக்கும் முதலாளித்துவத்துக்கு எதிராக, அதாவது மூலதனத்தின் தீவட்டிக் கொள்ளைக்கு எதிராகவே இந்தப் போர் வெடித்துள்ளது.




நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள முதலாளிகளைக் காப்பாற்ற, நாட்டின் உழைக்கும் மக்களைக் காவு கொடுக்கும் கொள்கைகளுக்கு எதிராக பிரெஞ்சு தொழிற்சங்கங்கள் அடுத்த கட்டமாக செப்டம்பர் 23-ஆம் தேதியன்று மீண்டுமொரு நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளன. செப்.21 முதல் செக் நாட்டிலும், செப்.29 முதல் ஸ்பெயின் நாட்டிலும் தொழிலாளி வர்க்கத்தால் வேலை நிறுத்தப் போராட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தொடரும் இப்போராட்டங்களின் ஊடாக, முதலாளித்துவ அரசியலமைப்பு முறையை வீழ்த்தி சோசலிசத்தை நிறுவுவதுதான் ஒரே தீர்வு என்பதை தொழிலாளி வர்க்கம் உணர்ந்து கொள்ளும் நாள் வெகுதொலைவில் இல்லை.